Registered as a News Paper

பொழிவு - 15
குவிப்பு -12
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
டிசம்பர் 2012
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. OD/ 159 / News / 2012"

# கிறிஸ்மஸ் புதுவருட சிறப்புப் பொழிவு



## "விண்ணில் இருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது"

(லூக் 1:79)

## உலகிலேயே மிகவும் விலையுயர்ந்த நத்தார் மரம்

இந்த வருட நத்தார் தினத்தை முன்னிட்டு ஜப்பானிய டோக்கியோ நகரிலுள்ள நகையகமொன்று 40 கிலோகிராம் நிறையுடைய தூய தங்கத்தால் 2.4 மீற்றர் உயரமும் 1.2 மீற்றர் விட்டமுமுடைய நத்தார் மரமொன்றை உருவாக்கிக் காட்சிப்படுத்தியுள்ளது.

4.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்தத் தங்க நத்தார் மரம் தூய தங்கத்தால் உருவாக்கப்பட்ட இலைகள், உலகப்பிரபல சிறுவர் கதைகளில் வரும் கதாபாத்திரங்களின் உருக்கள் என்பனவற்றைக் கொண்டமைந்துள்ளது. 'தனகா கிகின்ஸொகு' நகையகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இந்த நத்தார் மரத்தை 10 நகை வடிவமைப்பாளர்கள் இரு மாதங்களைச் செலவிட்டு உருவாக்கியுள்ளனர்.



## 'நீதியுள்ள தளிர்' (எரே 23:5) இயேசு காட்டிய வழியில் நீதியை நிலைநாட்ட தொடர்ந்து உழைப்போம்

### மன்னார் ஆயரின் கிறிஸ்மஸ் செய்தி



"வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1:14) என்ற இறைவாக்குக்கு ஒப்ப இயேசுவின் உடனிருப்பை ஆழமாக உணருகின்ற கிறிஸ்மஸ் காலத்திற்குள் அடியெடுத்து வைக்கின்றோம். 'இம்மானுவேல்' என்று பெயர் பெற்ற பாலகன் "கடவுள் நம்மோடு இருக்கின்றார்" என்ற செய்தியை தனது திருப்பிறப்பின் மூலம் மீளவும் இந்நாட்களில் வலியுறுத்துகின்றார். ஆகவே இயேசுவின் வருகை அதாவது கிறிஸ்மஸ் காலம் என்பது - நமக்கு ஆறுதலையும், மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் அருளுகின்ற ஒப்பற்ற காலமாகும்.

மகிழ்ச்சி நிறைந்த இக்காலத்திலே நமது வாழ்வியல் சூழ்நிலை துன்பம் மிக்கதாக, அநீதி நிறைந்ததாக, கவலையளிப்பதாக உள்ளதை நாம் காண்கின்றோம்.

போர் முடிவடைந்து மூன்றரை வருடங்களாகிய பின்னும் இன்றுவரை போரின் வடுக்களில் இருந்து நமது மக்கள் விடுபடவில்லை. அவர்களின் மனப்புண்கள் ஆறவில்லை, இழப்புக்களைச் சந்தித்தவர்கள் இதய அமைதி பெறவில்லை. போரில் உயிர் தப்பிய மக்களில் சிலர் இன்றுவரை தற்காலிக கொட்டகைளில் வாழ்ந்துவரும் காட்சி நெஞ்சை நெகிழ வைக்கும் கோரக் காட்சியாகும். தடுப்புக்காவலில் உள்ளோர், காணாமற்போனோர் இவர்களின் கதை முடிவற்ற தொடர்கதையாகவே உள்ளது. போரில் மரணித்த உடன் பிறப்புகளை நினைவுகூரக்கூட முடியாத அடக்குமுறைகள் நிலவுகின்றன. ஜனநாயகவழிப் போராட்டங்களை வன்முறையால் அடக்க எத்தனிக்கும் ஆயுதப்படையினரின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளன. சிவில் நிர்வாகத்தில் தேவையற்ற இராணுவ மற்றும் அரசியல் கட்சிகளின் தலையீடுகள் மலிந்து காணப்படுகின்றன. இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் நாம் இவ்வாண்டு மீண்டும் ஒரு கிறிஸ்மஸ் விழாவை கொண்டாடுகின்றோம்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## நம்பிக்கை ஆண்டிற்கான இணையத்தளம்

2012 ஒக்டோபரில் தொடங்கியிருக்கும் நம்பிக்கை ஆண்டு குறித்த விபரங்களைப் பொதுநிலையினர் அறிந்துகொள்வதற்கு உதவியாக புதிய இணையத்தளம் ஒன்றை வத்திக்கான் பொதுநிலையினர் அவை தொடங்கியுள்ளது. இதன் இணையத்தள முகவரி www.laici.va.

## டுவிட்டரில் இணைந்த திருத்தந்தை

கத்தோலிக்க திருச்சபையின் செய்திகளைப் பரப்பும் நோக்குடன் பரிசுத்த பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பர் சமூக வலைத் தளங்களில் ஒன்றான டுவிட்டரில் (Twitter) இணைந்துள்ளார்.

திருச்சபை தனது மறைபரப்புப் பணியில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த வேண்டுமென பாப்பரசர் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



(மேலதிக விபரங்களை 9ஆம் பக்கத்தில் காணலாம்)

## மன்னா அன்பு நெஞ்சங்களே!

வாசகப் பெருமக்களே, எழுத்தாளர்களே, பத்திரிகை விநியோகஸ்தர்களே, பத்திரிகை அபிமானிகளே! உங்கள் அனைவரையும் நெஞ்சார நினைக்கின்றோம்; அன்போடு நன்றி கூறுகின்றோம். அமைதியின் அரசராம் இயேசு கொண்டுவந்த அமைதி உங்கள் உள்ளங்களில் நிலைக்க வாழ்த்துகின்றோம். ஆசிக்கின்றோம், செபிக்கின்றோம். உங்களுக்கு எமது அன்பும், அருளும் அமைதியும் நிறைந்த புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

நிறைந்த ஆசீருடன்,

அருட்பணியாளர் தமிழ் நேசன், மன்னா பதிப்பாசிரியர், மற்றும் அலுவலகப் பணியாளர்கள்

## மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு 2013

### "இறைநம்பிக்கையை அர்த்தமுள்ளதாக்குவோம்"



மன்னார் மறைமாவட்ட வருடாந்த மேய்ப்புப் பணித் திட்டமிடல் மாநாடு கடந்த நவம்பர் மாதம் 11ம் திகதி மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி 12ஆம் திகதி பகல் 1.00 மணியளவில் நிறைவுபெற்றது. மடு தியான இல்லத்தில் இடம்பெற்ற இம்மாநாட்டில் மன்னார் வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய மன்னார் மறைமாவட்டத்தில் பணி புரியும் அனைத்துக் குருக்களும் மற்றும் துறவற சபைகளைச் சார்ந்த பிரதிநிதிகளும், பொதுநிலைப் பிரதிநிதிகளுமாக 160 பேர் கலந்துகொண்டனர்.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் 2012 ஒக்ரோபர் 11ஆம் திகதி தொடக்கம் 2013 நவம்பர் 24ஆம் திகதி வரையான காலப்பகுதியை 'நம்பிக்கை ஆண்டு' எனப் பிரகடனப்படுத்தியுள்ளார். இந்த நம்பிக்கை ஆண்டை மன்னார் மறைமாவட்டத்தில் எப்படிக் கொண்டாடுவது என்பது தொடர்பாகத் திட்டமிடும் மாநாடாகவே இது அமைந்திருந்தது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இம்மாநாட்டில் சிறப்புரை, கருத்துப் பரிமாற்றங்கள், குழு ஆய்வுகள் என பலவித நிகழ்வுகள் இடம்பெற்றன. இம்மாநாட்டிற்கான ஒழுங்கமைப்புக்களை மேய்ப்புப்பணித் திட்டமிடல் குழுச் செயலர் அருட்பணி. டக்ளஸ் மில்ஃரன் பீரிஸ் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுத்திறனாளிகள் மட்டிலான கவனத்தை ஈர்த்த சிறுகதை நூல் வெளியீட்டு விழா

மன்னார் அடம்பன் பிரதேசத்தைச் சேர்ந்த செல்வி வே. சந்திரகலா (வெற்றிச் செல்வி) அவர்களின் 'முடியாத ஏக்கங்கள்' என்ற சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா டிசம்பர் மாதம் 1ஆம் திகதி பகல் 2.00 மணிக்கு அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. மாற்றுத்திறனாளியான செல்வி சந்திரகலாவின் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வின் சிறப்பு அம்சம் என்னவெனில் அவர் மாற்றுத்திறனாளிகள் மட்டிலான கவனத்தை ஈர்க்கும்வகையில் இந்நூல் வெளியீட்டு நிகழ்வை ஒழுங்கு செய்தமையாகும்.

போரில் ஒரு கண்ணும் கையும் பாதிக்கப்பட்ட நிலையில் வாழும் செல்வி சந்திரகலா தனது சிறுகதைகளிலும் மாற்றுத்திறனாளிகள் மட்டிலான சமூகத்தின் பார்வை மாறவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார். இந்நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு மன்னார் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பல மாற்றுத்திறனாளிகள் அழைக்கப்பட்டிருந்தனர். இந்நிகழ்வில் ஒரு கையை இழந்த சிறுமி அன்பரசியின் நடன நிகழ்வு அனைவரையும் நெகிழ்ச்சிக்குள்ளாக்கியது. நூலுக்கான மதிப்பீட்டுரையை வழங்கிய இ. அம்பிகைபாலன் அவர்களும் இரண்டு கால்களும் வழங்காத ஒரு மாற்றுத்திறனாளி ஆவார்.

இந்நிகழ்வில் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், கலையருவி நிறுவனத்தின் இயக்குனருமாகிய அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமூகசேவை உத்தியோகத்தர் திரு. த. தனசீலன் அவர்கள் நிகழ்விற்கு தலைமை வகித்தார். இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. மா. சிறிஸ் கந்தகுமார், ஊடகவியலாளர் திரு. பொ. மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்துகொண்டனர். அடம்பன் பங்குத்தந்தை அருட்திரு. லக்கோன்ஸ் பிகிராடோ, மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்திரு. இ. செபமாலை, அடம்பன் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. ம. கிறிஸ்ரியான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நூல் நயப்புரையை மன்னார் வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலை தமிழ் ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிலுவேஸ்திரன் வழங்கினார். ஏற்புரையாற்றிய சந்திரகலா அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நம்பிக்கையோடு வாழவேண்டும் எனவும், இவர்கள் மட்டில் சமூகம் அக்கறையும், கரிசனையும்கொள்ள வேண்டும் எனவும் எடுத்துரைத்தார். மன்னார் மாற்றுத் திறனாளிகள் அமைப்பான தேனீ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் சமாதான செயற்பாட்டுக் குழுவினர் அம்பாறைக்கு நல்லெண்ண விஜயம்

தேசிய சமாதானப் பேரவையினால் மாவட்ட மட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதான செயற்பாட்டுக் குழுவினர்களுக்கிடையிலான நல்லெண்ண விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக மன்னார் மாவட்ட சமாதான செயற்பாட்டுக்குழுவினர் அதன் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள சமாதான செயற்பாட்டுக் குழுவினரைச் சந்தித்தனர். கடந்த 23ஆம் திகதி வெள்ளிக் கிழமை தொடக்கம் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரையிலான இந்த மூன்று நாள் விஜயத்தின்போது பலவித நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. இதேகாலப்பகுதியில் மொனராகலை மாவட்டத்தில் இருந்தும் சமாதான செயற்பாட்டுக் குழுவினர் அம்பாறைக்கு வந்திருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒன்றான அட்டாளைச்சேனையில் கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை அம்பாறை, மன்னார், மொனராகலை மாவட்டங்களைச் சேர்ந்த சமாதானச் செயற்பாட்டுக்குழுவினர் ஒன்றிணைந்து அரைநாள் ஒன்றுகூடல் நிகழ்வை நடாத்தினர். இதில் அட்டாளைச்சேனை அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின்போது நாட்டின் சமாதானம் தொடர்பாக கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இன்று நிலவும் சமாதான சூழ்நிலையை எப்படி உண்மையான, நிலையான, நீடித்த, அர்த்தமுள்ள சமாதானமாக மாற்ற முடியும்? என்ற அடிப்படையில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட சமாதான செயற்பாட்டுக் குழுவின் தலைவரான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் மன்னாரில் இருந்து ஒன்பது பேர் இந்த விஜயத்தில் கலந்துகொண்டனர். ஜனாப் மக்கள் காதர் (ஊடகவியலாளர்), திரு. ஏ. மரியதாஸ், ((முன்னாள் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர்), திருமதி ஜெசி அருமைநாயகம் (பெண்கள் அமைப்புச் செயற்பாட்டாளர்), திருமதி கே. எச். பிரியந்தி (பூமலந்தான் சமூக சேவையாளர்) மற்றும் மன்னார் ஆர்.பி.ஆர் அமைப்பைச் சேர்ந்த திரு. தயாளன், திரு. ஜோண்சன் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

### தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை ரூபா4,500/= கலர் ரூபா7,500/=

## திருப்பாலத்துவ சபையின் வெள்ளிவிழா

இலங்கையில் திருப்பாலத்துவ சபை ஆரம்பிக்கப்பட்டு 25வது வருட வெள்ளிவிழா நிகழ்வானது இச்சபை முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட மறைமாவட்டமான அனுராதபுரத்திலுள்ள ஹிங்குராங்கொட என்ற இடத்தில் கடந்த 04.11.2012 அன்று மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. இதில் ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் ஊக்குவிப்பாளர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபையின் இயக்குனரான அருட்பணி. எவ். எக்ஸ். றெஜினோல்ட் அடிகளார் தலைமையில் பழைய, புதிய ஊக்குவிப்பாளர்கள் மொத்தம் 12 பேர் இதில் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் முன்னேற்பாடாக 03.11.2012 அன்று மாலை நற்கருணை ஆராதனையுடன் வழிபாடுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வானது தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெற்று இறுதி ஆசீர்வாதமானது கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்களால் அளிக்கப்பட்டது. பின்னர் அன்றிரவு கலைநிகழ்ச்சிகளுடன் அன்றைய நிகழ்வுகள் அனைத்தும் நிறைவுற்றன.

யூபிலி விழாத் திருப்பலியானது கடந்த 04.11.2012 அன்று காலை 9.00 மணியளவில் சிறப்பாக இடம்பெற்றது. இத்திருப்பலியினை கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்களுடன் திருகோணமலை மறைமாவட்ட ஆயரும், அனுராதபுர மறைமாவட்ட ஆயரும், திருப்பாலத்துவ சபையின் தேசிய இயக்குனரான அருட்பணி. றெஜினோல்ட் சப்ரமாது அவர்களும் ஏனைய குருக்களும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். இத்திருப்பலியானது சரியாக நண்பகல் 12.00 மணியளவில் நிறைவுற்றது. பின்னர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் யூபிலி கேக் வெட்டி திருப்பாலத்துவ சபை சிறார்களுக்கு வழங்கப்பட்டது. அதன்பின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. மதிய உணவுடன் அன்றைய நாள் நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நிறைவுற்றன.

**திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள்,**
**மன்னார் மறைமாவட்டம்.**





திருப்பாலத்துவ சபையின் 25வது யூபிலி விழாவில் கலந்துகொண்டவர்கள் கர்தினாலுடன் காணப்படுகின்றனர். முதலாவது படத்தில் மன்னார் மறைமாவட்டத்தைச்சேர்ந்த மூத்த மறையாசிரியர் திரு. செபஸ்தியாம்பிள்ளை அவர்களும், இரண்டாவது படத்தில் அருட்திரு. றெஜினோல்ட் அடிகளாரும் காணப்படுகின்றனர்.




## மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவையினால் நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள்

2ம் வத்திக்கான் சங்கம் தொடங்கி 50வது ஆண்டு நிறைவு விழாவினை மையப்படுத்தி மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவையினால் மறைமாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விபரம் வருமாறு.

### கட்டுரைப் போட்டி

**பிரிவு - 01 மாணவர்கள்**

01.மெறின் கார்மலா குயின்சி - இறம்பைக்குளம் 01ம் இடம்
02. கி. பெலிக்ஸ் ஜெனிபர் - காத்தான்குளம் 02ம் இடம்
03. அ. சவுனியா - பேசாலை 03ம் இடம்

**பிரிவு - 02 இளையோர்கள்**

01. கி. செறின் சியாமா - ஆட்காட்டிவெளி 01ம் இடம்
02. எஸ். கிறிஸ்ரீனா - கோமரசன் குளம் 02ம் இடம்
03. சீ. பேளின் சிந்துஜா - வஞ்சியன்குளம் 03ம் இடம்

**பிரிவு - 03 வளர்ந்தோர்கள்**

01. எவறஸ்ரா ஜெயசேகரம் - உயிலங்குளம் 01ம் இடம்
02. அ.லூர்துநாயகி - தேவன்பிட்டி 02ம் இடம்
03. அ. பத்திநாதன் - அடம்பன் 03ம் இடம்

### பேச்சு போட்டி

**பிரிவு- 01 தரம் 06-09**

01. வி. தனுஜா - இறம்பைக்குளம் 01ம் இடம்
02. அ. நிரோஜா - கோமரசன் குளம் 02ம் இடம்
03. ச. கிளேற்றம்மா - வங்காலை 03ம் இடம்

**பிரிவு- 02 தரம் 10- 13**

01. அ. சுகன்ஜா - இறம்பைக்குளம் 01ம் இடம்
02. எம். போல் ஜாமினி லோகு - பேசாலை 02ம் இடம்
03. இ. மேரி டிலூசியா - அடம்பன் 03ம் இடம்

**பிரிவு- 03 இளையோர்**

01. ம. தட்சாயினி - அடம்பன் 01ம் இடம்
02. அ. டெஸ்மன் - வெற்றிராஜ், நானாட்டான் 02ம் இடம்
03. ச. யோசப்பின் பெரேரா - தாழ்வுபாடு, 03ம் இடம்

## மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர் நிர்வாகத் தெரிவு

மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர் ஒன்றியத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

**தலைவர்** :- திரு ரி. ஜெயக்குமார் (மன்னார் பங்கு)
**செயலாளர்** :- செல்வி எம். ஆர். றெஜினா (வேப்பங்குளம்)
**உபதலைவர்** :- செல்வி பி. சாந்தா (ஆட்காட்டிவெளி பங்கு)
**உபசெயலாளர்** :- திரு எம். கெனடி ( தாழ்வுபாடு பங்கு)

## மாதகலில் இருந்து செபமாலைத் தாசர் சபைக்கு புதிய குரு



யாழ்ப்பாணம் மறை மாவட்டத்தின் மாதகல் புனித தோமையார் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரர் பேடினன்ட் ஜெநெற் அவர்கள் எதிர்வரும் தை மாதம் 10ஆம் திகதி 2013 ஆண்டு காலை 09.30 மணிக்கு யாழ்ப்பாணம் பேராலயத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களினால் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

இவர் தனது முதல் திருப்பலியை தை மாதம் 12ஆம் திகதி 2013 ஆண்டு காலை 09.30 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

### தயவுசெய்து கவனியுங்கள்

- மன்னாவை நேரடியாகப் பெறுவோர் பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் கொடுத்து ஒத்துழையுங்கள்.
- தபால் மூலம் பெறும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர் மறக்காமல் உங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள். சந்தாவைப் புதிப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித அறிவித்தலுமின்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

.- மன்னா நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய உதவியில் பாரபட்சம்!

# மன்னாரில் உண்ணாவிரதம்!

## அமைச்சர்களின் தலையீட்டை தடுத்து நிறுத்துங்கள்!

## பயனாளிகளை இந்தியாவே தீர்மானிக்க வேண்டும்!

இந்திய வீட்டுத்திட்டம் மன்னார் மாவட்டத்தில் அநீதியான முறையில் பகிரப்பட்டமையினைக் கண்டித்து மன்னார் பிரஜைகள் குழு, மன்னார் தேசிய மீனவ ஒத்துழைப்பு மற்றும் காணியுரிமைக்கான மக்கள் இயக்கம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த அமைதி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் கடந்த டிசம்பர் மாதம் 4ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

"போர் இடர்களால் பாதிக்கப்பட்டு, வீடுகளையும், தொழில் துறைகளையும் இழந்தநிலையில் அல்லல்படும் எங்களை, மனிதாபிமான ரீதியில் கவனித்து உதவிகளைப் பெற்றுத்தாருங்கள். இந்திய உதவிகள் போர் வலயமான வன்னிப் பிரதேசத்தில் வீடுகளையும், தொழில் துறைகளையும் பல்லாயிரக்கணக்கில் பெறுமதிமிக்க உயிர்களையும் உக்கிரமானதும், மனிதாபிமானமற்றதுமான எறிகணைத் தாக்குதல்களாலும், விமான குண்டுவீச்சாலும் இழந்த தமிழ் மக்களுக்கே உரியது." இவ்வாறு மன்னார் மாவட்ட தமிழ் மக்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

## மன்னாரில் தேசிய வாசிப்பு மாத நிறைவு விழா

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிய நிறைவுநாள் நிகழ்வுகள் கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு மன்னார் நகரமண்டபத்தில் இடம்பெற்றது. மன்னார் நகரசபையினுடைய நூலக ஆலோசனைக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விழாவிற்கு மன்னார் நகரபிதா திரு. எஸ். ஞானப்பிரகாசம் தலைமை தாங்கினார். மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எம். ஜே. துரம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வின்போது 2012ஆம் ஆண்டிற்கான தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் மன்னார் மாவட்டத்தில் நூல்களை வெளியிட்ட எழுத்தாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மன்னார் நகரசபைச் செயலாளர் திருமதி பேனடெற் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் கலையருவி நிறுவனத்தின் இயக்குனரும் எழுத்தாளருமாகிய அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சிறப்புரை ஆற்றினார். மன்னார் அமுதன், எழுத்தாளர் ஜே. ஆர். மயூரன் ஆகியோரும் இந்நிகழ்வில் உரை நிகழ்த்தினர். நிகழ்வுகள் யாவும் மன்னார் நகரசபையின் நூலகர் ஜனாப் குத்தூஸ் அவர்களின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றன.

## யாழ் மறைமாவட்ட இளம் குரு அருட்பணி லக்ஸ்மன் அடிகள் விபத்தில் அகால மரணம்



யாழ் மறை மாவட்டத்தின் எழுவைதீவு கிராமத்தின் முதற்குருவும் முல்லைத்தீவு பங்கின் உதவி பங்குத் தந்தையுமாகிய அருட்பணி. லக்ஸ்மன் அடிகள் கடந்த 14.11.2012 புதன்கிழமை அன்று இரவு விபத்தில் பலியானார். அருட்தந்தை லக்ஸ்மன் அடிகள் தாளையடி - இயக்கச்சி வீதியில் தமது மோட்டார் சைக்கிலில் பயணித்தபோது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு உள்ளானபோது அடிகளாரின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டதால் அகால மரணம் அடைந்தார்.

விபத்துக்குள்ளாகி படுகாயம் அடைந்த அடிகளாரை உடன் சம்பவ இடத்துக்கு சென்ற சகோதர குருக்கள் பளை மருத்துவமனைக்கு எடுத்து சென்றபோதிலும் வழியில் அடிகளாரின் உயிர் பிரிந்தது. அருட்தந்தை அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு ஓர் ஆண்டும் ஐந்து மாதங்களுமே யாழ் மறைமாவட்டத்தில் பணி செய்துள்ளார். அருட்பணி லக்ஸ்மன் அடிகள் யாழ் பேராலயத்தில் ஓர் ஆண்டு காலம் உதவி பங்குத்தந்தையாகவும், பின்னர் முல்லைத்தீவு மீள்குடியமர்வு பிரதேச மக்களின் ஆன்மீக சமூக பணியாளராக கடந்த ஐந்து மாதங்களும் பணிசெய்துள்ளார்.

## மன்னார் வரலாற்றுச் சிறப்புமிக்க குருசுக்கோவில் திறப்புவிழா

வரலாற்று சிறப்புவாய்ந்த மன்னார் குருசுக்கோவில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட நிலையில் அதன் திறப்புவிழா கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதி இடம்பெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் புதிய ஆலயத்தை திறந்துவைத்து ஆசீர்வதித்தார். இத்திருப்பலியில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். திருப்பலி மறையுரையின்போது சிலுவையின் மறைபொருளைப் பற்றி விளக்கமாக பேசிய ஆயர் அவர்கள் தவறான பக்தி முயற்சிகளை கண்டித்ததோடு ஆண்டவரோடு உண்மையான உறவில் வாழ மக்களை அழைத்தார். திருப்பலி, திருவருட்சாதனங்கள் வழியாக இந்த உறவில் வளரமுடியும் என்பதையும் சுட்டிக்காட்டினார். மன்னார் பேராலயத்தின் மூர்வீதி உப்புக்குளம் வலய மக்கள் மற்றும் பள்ளிமுனை பங்கு மக்கள் மற்றும் பங்குத்தந்தையர்களின் ஆதரவோடு கட்டிமுடிக்கப்பட்ட இந்த ஆலய கட்டுமான முயற்சிகளில் திரு. அல்மேடா அவர்களின் உழைப்பு, தியாகம் அனைவராலும் பாராட்டப்பட்டது.

## மன்னார் மறைக்கல்விக் குழுவினர் திருகோணமலைக்கு விஜயம்

மறைக்கல்வி ஆண்டில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் பல விஷேட செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாதத்தில் ஒரு தடவை மறைமாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பங்குகளில் நடைபெறும் மறைமாவட்ட மறையாசிரியர் கூட்டம் இம்முறை திருகோணமலை மறைமாவட்டத்தின் சென் மேரிஸ் பேராலயத்தில் இடம்பெற்றது.

25.11.2012 அன்று மாலை மன்னார் மாவட்ட இயக்குனர் அருட்பணி றெஜினோல்ட் அடிகளார் மற்றும் மடு மறைக்கோட்ட மறைக்கல்விப் பொறுப்பாளர் அருட்திரு. லக்கோண்ஸ் பிகிறாடோ தலைமையில் மறையாசிரியர்கள் திருகோணமலை சென்று திருகோணமலை மறையாசிரியர்களை சந்தித்து மறைக்கல்வி ஆண்டு செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடி பணித்திட்டங்கள், கற்பித்தல் முறைகள் மற்றும் பல்வேறு விடயங்களை பகிர்ந்து கொண்டனர்.

26.11.2012 அன்று காலை திருப்பலியை அருட்திரு. லக்கோன்ஸ் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். திருப்பலியைத் தொடர்ந்து மறையாசிரியர் நிர்வாக சபைக் கூட்டம் இடம்பெற்றது. முதலில் இயக்குனரால் மறைக்கல்வி ஆண்டு செயற்பாடுகள் பற்றியும் 2013ம் ஆண்டின் ஆண்டிற்கான செயற்பாடுகள் பற்றியும் கருத்துக்கள் வழங்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

## முதன் முதலாக அரபு மொழியில் பிரார்த்தனை செய்தார் திருத்தந்தை



திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் முதன் முறையாக அரபுமொழியில் பிரார்த்தனை செய்தார். வத்திக்கானில் உள்ள புனித பேதுரு சதுக்கத்தில் சுமார் 20 ஆயிரம் பேர் அண்மையில் கூடியிருந்தனர். அவர்களில் அனேகமானவர்கள் அரேபியர்களாக இருந்தனர். திருத்தந்தையின் இந்த ஆசீர்வாத வார்த்தைகளை ஆயர் ஒருவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

## எழுத்தூர் ஆலய கட்டிட நிதிக்காக இசைநிகழ்ச்சியும் அதிஸ்டலாபச் சீட்டிழுப்பும்

எழுத்தூர் புனித ஆரோக்கிய அன்னை ஆலய கட்டிட நிதிக்காக ஆலய மக்களும், பங்கு இளைஞர் ஒன்றியமும் இணைந்து நடாத்திய பிரமாண்டமான இசை நிகழ்ச்சியும், அதிஸ்டலாபச் சீட்டிழுப்பும் கடந்த ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இந்த இசை நிகழ்வில் உள்ளூர் வெளியூர் கலைஞர்கள் பங்கேற்றனர்.

பள்ளிமுனை சங்கமம் இசைக்குழுவினர் இசை வழங்கினர். அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் ஆசியுரை வழங்கினார். எழுத்தூர் பங்குத்தந்தை அருட்பணி. இ. செபமாலை அவர்களின் தலைமையில் நிகழ்வுகள் இனிதே இடம்பெற்றன.

## வேதசாட்சிகள் சமூகநல அமைப்பினால் நடாத்தப்பட்ட வேதசாட்சிகள் திருவிழா

அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்ட மன்னார் வேதசாட்சிகள் சமூகநல அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் வேதசாட்சிகளை நினைவுகூர்ந்து கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி தோட்டவெளி வேதசாட்சிகள் அன்னை ஆலயத்தில் காலை 8.00 மணிக்கு சிறப்புத் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்னார் ஆயர் தலைமையில் இத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த அமைப்பு பற்றிய விரிவான தகவல்கள் அடுத்த மன்னா இதழில் இடம்பெறும்.

## இசை இறுவெட்டு வெளியீடு

வேப்பங்குளம் பங்கைச் சேர்ந்த ஆசிரிய மாணவன் செல்வன் எம். றொபேட் ஜோண்சன் "கனவுகள்" எனும் இசை இறுவெட்டை 25.11.2012 அன்று வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் வெளியிட்டுள்ளார். இந்த இறுவெட்டிற்கு வவுனியா பங்கைச் சேர்ந்த சி. ரஞ்சன் அவர்கள் இசை அமைத்திருக்கின்றார். இவர்களது இசைப்பயணம் வளர்ந்து செல்ல பாராட்டுகின்றோம்.

## ஊடகக் கற்கை நெறி சான்றிதழ் வழங்கும் விழாவும் இளவல் என்ற நூல் வெளியீட்டு விழாவும்

ஊடகக் கற்கை நெறி சான்றிதழ் வழங்கும் விழாவும் 'இளவல்' என்ற நூல் வெளியீட்டு விழாவும் கடந்த 29.10.2012 அன்று மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

பெரிய குஞ்சுக்குளம் பங்குத்தந்தை அருட்திரு. லக்ஸ்ரன் டி சில்வா அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவி அமைப்பின் இயக்குனரும் மன்னா ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமை தாங்கினார். இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் நடன ஆசிரியை சுகிர்தாவின் மாணவிகள் சிறப்பு நடன நிகழ்வை வழங்கினார்கள்.

கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'விழுதுகள்' என்ற அமைப்பின் பணிப்பாளர் திருமதி சாந்தி சச்சிதானந்தம், விழுதுகள் அமைப்பின் ஊடக இணைப்பாளர் திரு. நிக்சன், அருட்திரு. அருள்ராஜ் மற்றும் அருட்திரு. நெவின்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். பெரிய குஞ்சுக்குளம் இளைஞர் ஒன்றியத்தின் முயற்சியில் உருவான 'இளவல்' என்ற நூலில் இளைஞர்கள் பற்றிய ஆக்கங்கள் பல்வேறு கோணங்களில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாகாண மட்ட சித்திரப் போட்டியில் 2ஆம் இடம்



வட மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட சித்திரப் போட்டியில் மன்/ தலைமன்னார் பியர் அரச கலவன் பாடசாலையில் 5ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் செல்வன் மாட்டின் ஜொசான் குருஸ் அவர்கள் 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவரை மன்னா வாழ்த்திப் பாராட்டுகின்றது.

## Catechism of the Catholic Church

### என்னும் நூலின் முக்கிய பகுதிகளின் தமிழாக்கம்

## 'கிறிஸ்துவில் வளர'....

"Catechism of the Catholic Church" என்னும் ஆங்கில நூலிலிருந்து சமகால தேவை கருதி மிக முக்கிய பகுதிகள் தெரிந்தெடுக்கப்பட்டு, அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம் அடிகளால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு "கிறிஸ்துவில் வளர" என்னும் பெயரில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் இறையுறவிலும், மறையறிவிலும் வளர பேருதவி புரிவதுடன், கிறிஸ்துவையும் கிறிஸ்தவத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் அறியாதோரும் படித்தறிந்து பயன் பெறக்கூடியவகையில் அமைந்துள்ளது. இறைவனின் இருப்பியல் - மூவொரு இறைவன் - விசுவாசம் - பத்துக்கட்டளைகள் போன்றவற்றின் ஊடாக இயேசுவை வெளிக்கொணர்ந்து கிறிஸ்தவம் தொடர்பான மறை உண்மைகளைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்நூல் மறைக் கல்வியில் ஈடுபடும் ஆசிரியர், மாணவர் அனைவருக்கும் பெரிதும் துணை நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இடம்பெற்ற அசிப்பா மாநாடு

அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு. அன்பிய இயக்குனர், மன்னார் மறைமாவட்டம்

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஆசியாவிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட மேய்ப்புப்பணி அணுகுமுறை (அசிப்பா) யின் 6வது பொது மாநாடு இம்முறை இலங்கையின் சிலாப மறைமாவட்டத்தில் உள்ள நயினாமடம பகுதியின் 'சிந்தன" நிலையத்தில் ஐப்பசி மாதம் 18-24 காலப்பகுதியில் சிறப்பாக நடந்தேறியது. இம்மாநாட்டில் இந்தோனேசியா, மலேசியா, மியன்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, பங்களாதேஷ், இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை, கொரியா, மொங்கோலியா, தாய்வான், ஜேர்மனி, தென் ஆபிரிக்கா, சுவிஸ்லாந்து ஆகிய 16 நாடுகளைச் சேர்ந்த 9 ஆயர்களும் 49 குருக்களும் 12 துறவியரும் 56 பொதுநிலையினருமாக 126 பேர் பங்குபற்றினர்.

இம்மாநாட்டின் தொடக்க வைபவ திருப்பலி இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி பேராயர் யோசப் ஸ்பிரேரி அவர்களின் தலைமையில் நயினாமடம புனித வியாகுல மாதா ஆலயத்தில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சிந்தன நிலையத்திலே விவிலிய அரங்கேற்றத்துடன் வைபவ ரீதியாக இம்மாநாடு தொடங்கி வைக்கப்பட்டது. இம்மாநாட்டிலே அசிப்பாவின் உருவாக்க வளர்ச்சியின் முதல் நிலையாளரான அமரர் ஆயர் ஒக்ஸ்வல்ட் ஹெர்மர் அவர்கள் சிறப்பாக நினைவு கூரப்பட்டார். இலங்கைத் திருச்சபை பற்றிய விவரணம் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. இம்மாநாட்டின் கருப்பொருளாயமைந்த 'புறப்பட்டுச் செல்லுங்கள் (மத் 10:5) இயேசுவை பணியில் பின்தொடருங்கள். சேவைக்கும் மறைத்தூதுப் பணிக்குமான சிறிய கிறிஸ்தவ குழுமங்கள்" என்ற தலைப்பில் இந்தியாவின் பூனே மறைமாவட்ட ஆயர் தோமஸ் டப்ரே அவர்கள் சிறப்புரையாற்றினார். மறைபரப்பு ஞாயிறு (21-10-2012) அன்று நாள் முழுவதும் சிலாபம், குருநாகல், கொழும்பு மறைமாவட்டங்களைச் சேர்ந்த 21 பங்குகளின் அன்பிய குழுக்களை பார்வையிடும் களச்சந்திப்பில் மாநாட்டின் பங்கேற்பாளர்கள் ஈடுபட்டனர்.

காலை அமர்வுகளில் 7 படி நற்செய்தி பகிர்வு, விவிலிய கண்ணாடி முறை, ஆமோஸ் நிகழ்ச்சி போன்ற நற்செய்திப் பகிர்வுகளும் மாலை வேளையில் அண்மித்த நாடுகள் (கலாசாரம்) அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட நாடுகளின் பங்கேற்பாளர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட திருப்பலிகளும் மாநாட்டை வளம்பெறச் செய்தன.

ஆறாவது அசிப்பா பொது மாநாட்டின் இறுதி நிகழ்வாக அன்பிய பேரணியும் சிறப்புத் திருப்பலியும் தேவத்தை இலங்கை மாதா பேராலயத்தில் 24-10-2012 புதன்கிழமை நடைபெற்றது. இந்த அன்பியப் பேரணியில் இலங்கையின் பல்வேறு மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இறைமக்கள் கைகளில் கொடிகளைத் தாங்கி பவனி வந்தனர். அசிப்பா மாநாட்டு நிறைவு விழா திருப்பலியை கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் அவர்கள் தலைமைதாங்கி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தார். தேவத்தையில் அமைந்துள்ள மாதா கெபியின் முன்றலில் அணிதிரண்ட ஆயர்கள், குருக்கள், வெளிநாட்டுப் பங்கேற்பாளர்கள், உள்நாட்டு பங்கேற்பாளர்கள், பல்வேறு மறைமாவட்ட அன்பிய பணியாளர்களின் பொது ஒன்றுகூடல் அனுபவ பகிர்வுகள், கலை நிகழ்ச்சிகள் இடம்பெற அசிப்பா பீடத்தின் செயலர் கொரிய நாட்டைச் சேர்ந்த செல்வி. பிபியானா ஜீ கியுன் ரோ அவர்களின் நன்றியுரையுடன் 6வது அசிப்பா பொது அமர்வு இனிதே நிறைவுற்றது.

ஆசிய ஆயர்கள் பேரவையின் குடும்ப பொதுநிலையினர் பணியகம், மற்றும் அசிப்பா பீடம், இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம், இலங்கையின் பொதுநிலையினருக்கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழு, இலங்கையின் தேசிய அசிப்பா பணியகம், அத்தோடு சிலாபம் மறைமாவட்டமும் இணைந்து இம்மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தனர்.









6வது அசிப்பா பொது மாநாட்டில் மன்னார் மறைமாவட்டத்திலிருந்து அன்பிய இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு அவர்களுடன் அருட்பணி. அ. ரஜனிகாந், அருட்சகோதரி சேவியர் அன்ரனி C.I.C, திரு. மரியதாஸ், செல்வி. கஸ்மீர் சாந்தி ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இம்மாநாட்டில் தன்னார்வப் பணியாளராக மன்னார் மறைமாவட்ட அன்பியப் பணியகச் செயலர் திரு. ஞானப்பிரகாசம் கடமையாற்றினார். தேவத்தையில் நடைபெற்ற இறுதி அன்பியப் பேரணியிலும் திருப்பலியிலும் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் பங்கேற்று சிறப்பித்திருந்தார். அத்துடன் இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு குருக்களும் 120 அன்பிய பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மறைமாவட்ட மரியாயின் சேனை புதிய கொமிசிய நிர்வாகம்

மரியாயின் சேனை கைநூலுக்கும், செனாத்துஸ் தலைமைப்பீடத்தின் அறிவுறுத்தலுக்கும் அமைவாகவும் தற்பொழுது பதவியில் இருக்கும் மன்னார் கொமிசிய உத்தியோகஸ்தர்களின் காலம் நிறைவுறுவதால் அதற்கான புதிய உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சி இடம்பெற்றது.

கடந்த 20.10.2012 சனிக்கிழமை அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலய மண்டபத்திலே சேனையாளர்கள் ஒன்று கூடினார்கள். புதிதாக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மன்னார் மேல் கியூரியா உத்தியோகஸ்தர்களாகவும், அதேவேளை மன்னார் கொமிசியத்தின் உத்தியோகஸ்தர்களாகவும் செயற்படுபவர். எனவே இத்தெரிவை மேற்கொள்ளுவதற்கு மன்னார் கொமிசிய உத்தியோகஸ்தர்களும், மன்னார் கொமிசியத்திற்கு உட்பட்ட அனைத்து கியூரியா உத்தியோகஸ்தர்களும், தற்பொழுது உள்ள மன்னார் கியூரியாவைச் சேர்ந்த அனைத்து பிரசீடிய உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து மொத்தம் 59 பேர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இம்முக்கிய நிகழ்வினை தலைமையேற்று நடத்திய ஆன்மீக இயக்குநர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அடிகளார் ஒரு செபவழிபாட்டினை நடாத்தி அதனைத் தொடர்ந்து இத்தெரிவுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்றும், நிர்வாக அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்படும்போது அவர்களின் அனுபவம், அறிவு, சேவை, பிரமாணிக்கம் போன்றவற்றோடு தந்தையாம் இறைவனின் சித்தத்தை நிறைவேற்றிய மரியாளுடைய வழியில் தமது கடமைகளைப் பொறுப்புடன் செயற்படுத்த வேண்டுமென்றும் சேனைக் கைநூலை மேற்கோள்காட்டி தெரிவின் விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார்!

**"ஒரு கியூரியாவுக்கு அதன் வழக்கமான அதிகாரங்களுடன் இன்னொரு கியூரியாவை அல்லது பல கியூரியாக்களை மேற்பார்வையிடும் சில அதிகாரங்களையும் வழங்கும் தேவை ஏற்படக்கூடும். அப்படிப்பட்ட ஒரு மேல்கியூரியாவுக்கு கொமிசியம் என்று பெயா".** (கைநூல்: 176) அந்தவகையிலே மன்னார் கியூரியாவே மன்னார் மறைமாவட்டத்தின் கொமிசியமாக இயங்குவதோடு அதன்கீழ் உள்ள வவுனியா, வேப்பங்குளம், பேசாலை, முருங்கன், தேவன்பிட்டி ஆகிய கியூரியாக்களை மேற்பார்வையிட்டு வளர்ச்சியடையச் செய்யும் பொறுப்பையும் கொண்டுள்ளது என இயக்குனர் மேலும் தெளிவுபடுத்தினார்.

இத்தெரிவானது கைநூலின் விதிமுறைக்கிணங்க இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகவோ அல்லது ஏகமனதாகவோ தெரிவு செய்யலாம் என எடுத்தியம்பியபோது அனைவரும் ஒரே மனத்துடன் ஏகமனதாக தெரிவுசெய்ய முன்வந்தனர். அதற்கமைய அடுத்த 03 ஆண்டுகளுக்கான பின்வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் - திரு. ச. அந்தோனி மிராண்டா - பேசாலைப் பங்கு
துணைத்தலைவர் - திரு. அ. சிங்கராயர்,- மன்னார் பங்கு
செயலாளர் - திருமதி ஜெ. கொலஸ்ரிக்கா பிகிறாடோ - பள்ளிமுனைப் பங்கு
துணைச் செயலாளர் - திரு. சூசையப்பு டலிமா - தாழ்வுபாடு
பொருளாளர் - திருமதி. ச. லெயோதினி குலாஸ், வங்காலை.

மேற்படி "மன்னார் கொமிசிய மாதாந்தக் கூட்டமானது" ஒவ்வொரு மாதத்தின் முதற் சனிக்கிழமைதோறும் குடும்பநலப் பணியகத்தில் காலை 10. 00 மணிக்கு நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு மன்னார் கொமிசிய உத்தியோகஸ்தர்களும் அதன்கீழ் இயங்குகின்ற 05 கியூரியாக்களின் உத்தியோகஸ்தர்களும், அதேவேளை மன்னார் மேல் கியூரியாவாகிய கொமிசியத்தின்கீழ் இயங்குகின்ற அனைத்து பிரசீடிய உத்தியோகஸ்தர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் எனத் தீர்மானிக்கப்பட்டது. இறுதியில் சேனையாளர்கள் அனைவரும் தம் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்து, மரியாளின் ஆசியைப் பெற்று தம்மை அர்ப்பணித்துக்கொண்டார்கள்.

# காத்தான் குளம் பங்கில் ஆங்கில மொழித்திறனை மேம்படுத்தும் முயற்சிகள்

மன்னார் மறைமாவட்டம் ஆங்கில மொழிப் பயன்பாட்டில் குறிப்பாக ஆங்கில உச்சரிப்பில் சிறப்பாக விளங்குவது பெருமைக்குரியது. இதற்கு அடித்தளமாக இருந்த காரணங்களில் ஒன்று கடந்த காலங்களில் மன்னார் பாடசாலைகளில் வெளிநாட்டு, உள்நாட்டு குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் சேவையாற்றி ஆங்கில அறிவை ஊட்டியமையாகும்.

காத்தான்குளம் பங்கிலும் பங்குத்தந்தையின் ஆலோசனை, மற்றும் வழிகாட்டலின்கீழ் கிராமப்புற சிறுவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் முகமாக ABC Home நிலையத்தின் செயற்பாடுகள் கடந்த ஒரு வருட காலமாக சிறப்பாக நடைபெற்று வருவதுடன் அதன் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு பரிசளிப்பு விழாவும் இனிதே நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காத்தான்குளம் பங்குத்தந்தை அருட்பணி. வசந்தகுமார் அவர்கள் கலந்துகொண்டு பரிசில்கள் வழங்கி சிறப்பிப்பதையும் படங்களில் காணலாம்.

தகவல்: அருள்நேசன், A.B.C.Home, கறுக்காக்குளம்.








# வேப்பங்குளத்தில் முதியோர் தினம்

வேப்பங்குளம் புனித சூசையப்பர் முதியோா சங்கத்தினர்க்கான முதியோர் தினவிழா கடந்த 14.10.2012 ஞாயிறு தினத்தில் பங்கு மேய்ப்புப்பணியினரால் முன்னெடுக்கப்பட்டு சிறப்புத் திருப்பலியுடன் ஆரம்பமானது. இதற்கென மன்னாரிலிருந்து முதியோர் சமாசப் பொருளாளர் திரு. ஆனந்தம் றோச் அவர்களும் தாழ்வுபாடு முதியோர் சங்கத் தலைவர் திரு. அல்வின் மிராண்டா அவர்களும் வரவழைக்கப்பட்டு பங்குத்தந்தையுடன் பங்குச் சபையினரால் வரவேற்கப்பட்டனர். தங்கள் இயலாமையையும் பொருட்படுத்தாது முதியோர் இதில் ஆர்வமுடன் பங்கேற்றனர். அனைவருக்கும் காலையுணர்வு வழங்கப்பட்டது.

முதலில் மறைக்கல்வி மாணவிகளால் நடன நிகழ்வு வழங்கப்பட்டு மகிழ்விக்கப்பட்டனர். "ஒவ்வொரு முதியோரும் ஒரு நற்செய்தி. இந்த முதியோர்கள் பற்றி இறைவார்த்தையில் எதுவும் சொல்லப்படவில்லை. காரணம் இவர்களே நற்செய்தி" எனத் தனது சிறப்புரையில் பங்குத்தந்தை றஜனிக்காந் அவர்கள் குறிப்பிட்டுரைத்தார். அன்றைய திருப்பலியில் சேகரிக்கப்பட்ட சிறப்புக் காணிக்கை ரூபா.10,000/= முதியோர் சங்கத்திற்கென அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். இது தவிர பங்குச்சபை சார்பில் செயலாளரால் ரூ. 10,000/= அன்பளிப்பாக வழங்கப்பட்டு முதியோர் சங்கப் பொருளாளர் திரு. அலேஸ் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முதியோர் சங்கச் செயலாளர் திருமதி எஸ். பிலோமினா, அவர்களால் நன்.றியுரையும், பங்குசபை நிர்வாக உறுப்பினர் திரு. அன்ரன் அவர்களால் நன்றிப்பிராத்தனையும் வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

### சிறுவர்களுக்கெதிராக இழைக்கப்படும் துஸ்பிரயோகங்களை இல்லாதொழிக்க

# நாம் கூட்டுமுயற்சியுடன் செயற்படவேண்டும்

### கறிற்றாஸ் சிறுவர் தின விழாவில் மன்னார் ஆயர்



சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் துஸ்பிரயோகங்களை இல்லாதொழிக்க நாம் கூட்டுமுயற்சியுடன் செயற்பட வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தெரிவித்தார். மன்னார் மறைமாவட்டத்தின் கறிற்றாஸ் வாழ்வுதய நிறுவனத்தின் தலைமையில் கறிற்றாஸ் செடேக்கின் (SEDEC) தேசியத் திட்டத்திற்கு அமைவாக கடந்த 13.10.2012 அன்று தமிழ் மறைமாவட்டங்கள் ஒன்றிணைந்து நடாத்திய 'சர்வதேச சிறுவர் தின நிகழ்வு' வவுனியா மகளிர் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆயர் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், இன்றைய நவீன கலாச்சார உலகில் சிறுவர்களை அடிமைப்படுத்தி சிறுவர்கள் மூலம் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் செயல்படுகின்றவர்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றனர். அத்தோடு கல்வியிலும் ஒழுக்க நெறியிலும் வளர்க்கப்பட வேண்டிய சிறுவர்கள் இன்று சமூகச் சீரழிவினால் சிறுவயதிலேயே தமது வாழ்வின் அர்த்தத்தை புரிந்து கொள்ளாமல் அலைக்கழிக்கப்படுகின்றார்கள்.

சிறுவர்களைத் துஸ்பிரயோகம் செய்கின்றவர்கள் யாராகிலும் சட்டத்தின்முன் நிலைநிறுத்தப்பட்டு மற்றவர்களுக்கும் பாடம் புகட்டப்படவேண்டும். அத்தோடு பிள்ளைகளின் எதிர்காலத்தைப்பற்றி பிள்ளைகளுக்கு நாம் அறிவூட்டுவது அவசியமாகின்றது. பிள்ளைகளுக்கு சிறுவயதிலிருந்தே அன்பைப்பற்றி, இரக்கத்தைப்பற்றி நாம் சொல்லிக்கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளைக்குள்ளும் உள்ளார்ந்த அன்பு ஊற்றெடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்தப்பிள்ளை அன்பிலும் சகோதரத்துவத்திலும் கட்டியெழுப்பப்படும். இவ்வாறான நல்ல சிந்தனைகளை ஊட்டி பிள்ளைகளை நேரிய வழியில் வளர்த்து சமகாலத்தில் சிறுவர்களுக்கெதிராக முன்னெடுக்கப்படும் துஷ்பிரயோகங்களை இல்லாதொழிக்க ஒன்றுபட்டு உழைக்க வேண்டியது எம் எல்லோருடயதுமான கடமை என்றார்.

இந்நிகழ்வை ஏற்பாடு செய்து நடாத்திய கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. எம். ஜெயபாலன் அடிகளார், வாழ்வுதயப் பணியாளர்கள் மற்றும் கறிற்றாஸ் SEDEC ஸ்தாபனத்தின் நிர்வாக அலுவலர் திரு. நியூமன் மற்றும் அவர்களோடு இணைந்து வருகைதந்த பணியாளர்கள் எல்லோருக்கும் விசேட நன்றிகளை தெரிவித்து தனது உரையினை நிறைவு செய்தார். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## ஆட்காட்டிவெளிப் பங்கில் ஆசிரியர் தினம்

ஆட்காட்டிவெளிப்பங்கின் ஆசிரியர் தின நிகழ்வுகள் கடந்த 14.11.2012 அன்று பங்குத் திருப்பலியை தொடர்ந்து இடம் பெற்றது. ஆட்காட்டிவெளிப்பங்கின் கத்தோலிக்க ஆசிரியர்கள், மறையாசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரைச் சிறப்பித்துக் கௌரவித்த இந்த நிகழ்வு பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஜெயபாலன் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது. ஆசிரியர்களைக் கௌரவிக்கும் இந்நிகழ்வில் அருட்சகோதரர், அருட்சகோதரி, ஆலய செயலாளர்கள் பங்கு மக்கள் உட்பட அனைவரும் கலந்துகொண்டார்கள். நிகழ்வின்போது கவிதை, பாடல், சிறு சொற்பொழிவுகள் மூலமாக ஆசிரியர்கள் பாராட்டப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மறையாசிரியர்களின் அயராத முயற்சியால் ஏற்கனவே மன்னார், வவுனியா கோட்டங்களில் காட்சிப்படுத்தப்பட்ட 'சகோதர யுத்தம்' (காயின் ஆபேல் கதை) என்ற கண்காட்சியும் பங்கு மக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டது. ஆசிரியர்களைச் சிறப்பிக்கும் முகமாக பங்குதந்தை சிறிய அன்பளிப்பு பொருட்களை அவர்களுக்கு வழங்கினார். பங்குத் தந்தையின் ஆசியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

## நானாட்டான் – உமநகரி எமில் அவர்கள் மொழிபெயர்ப்பாளராக நியமனம்



நீதி அமைச்சினால் 13.09.2012ம் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பாளருக்கான தேர்வில் சித்தியடைந்ததன் பேரில் மன்னார் நானாட்டான் உமநகரியைச் சேர்ந்த திரு. சூசைப்பிள்ளை எமிலியானுஸ்பிள்ளை (எமில்) அவர்கள் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பாளராக நியமனம் செய்யப்பட்டார்.

இவர் தனது சத்தியப்பிரமாணத்தை மன்னார் மாவட்ட நீதிபதி உயர்திரு. ஏ. யூட்சன் அவர்களிடம் எடுத்துக்கொண்டார். இவர் காலம் சென்ற திரு திருமதி சூசைப்பிள்ளை கிறிஸ்ரினா அவர்களின் மகனும் திருமதி எமில் மரியறோசாவின் கணவருமாவார். இவர் நானாட்டான் பிரதேச சபையின் ஓய்வுபெற்ற மேற்பார்வை - யாளராகவும் பணிபுரிந்துள்ளார். இவரின் பணிசிறக்க மன்னா வாழ்த்தி நிற்கின்றது.

## கற்கிடந்தகுளம் பங்கில் உறுதிப்பூசுதல் சடங்கு

### உறுதிப்பூசுதல் பெறும் பிள்ளைகள் எவ்வாறு வாழவேண்டும் என ஆயர் வலியுறுத்து

கற்கிடந்தகுளம் பங்கில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் திருச்சடங்கு கடந்த ஐப்பசி மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் கற்கடந்தகுளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது.

பங்கு முழுவதிலுள்ள ஆலயங்களைச் சேர்ந்த 53 பிள்ளைகள் போதிய ஆயத்தங்களுடன் இந்த அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர். இப்பிள்ளைகளுக்கு தொடர் பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஆயர் தமது மறையுரையில் வலியுறுத்தினார். உறுதிப்பூசுதல் பெறும் பிள்ளைகள் எவ்வாறு வாழவேண்டும் என்பது பற்றி மூன்று முக்கிய குறிப்புக்களை ஆயர் கூறினார். முதலாவது இறைவார்த்தையை தினமும் படித்து அதை தினமும் வாழுதல். இரண்டாவது செபம் செய்தல், இறைவாசிப்பை பயன்படுத்தி செபத்தில் ஈடுபடுதல். மூன்றாவது சமூகத்தில் - நாம் வாழும் பங்கில் நன்மை செய்ய பின்நிற்காது நன்மையான காரியங்களைச் செய்தல்.

தகவல் : மரியநாயகம், கற்கிடந்தகுளம்.

## உயிலங்குளம் பங்கில் மகா ஞானவொடுக்கம்

### மாபெரும் ஆன்மீகப் புதுப்பித்தல் நிகழ்வு

**வேதியர் இ. யக்கோவு சேரம்**

மன்னார் மறைமாவட்டம் திருச்சபை வாழ்விலும் வரலாற்றிலும் பல சிறப்புக்களைப் பெற்றுள்ளது. பன்னிரு திருத்தூதர்கள் பெயராலும் ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு மறைமாவட்டம் எனும் தனிச்சிறப்பும் இதற்குண்டு. இன்னும் குறிப்பாக இங்கே பல திருப்பயணத் தலங்கள் அமைந்திருப்பது அனைத்து மக்களும் அறிந்த உண்மை. இவற்றிலே மூன்று தலங்கள் உயிலங்குளம் பங்குத் தளத்தில் அமைந்திருப்பது இப்பங்கு பெறும் பேறாகும். இவை முன்னாள் பழமைமிகு பறப்பாங்கண்டல் தூய கூட்டத்து மாதா - பெரிய கோயில் திருத்தலமும், துவரங்கேணி தூய அந்தோனியார் திருத்தலமும், இந்நாள் பெருமைமிகு கட்டுக்கரை தூய வேளாங்கண்ணி அன்னை திருத்தலமும் ஆகும்.

இப்பங்கின் வட பகுதியின் சில கிராமங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களைக் கொண்டவை. இம்மக்கள் போரின் பேரிடர்களில் தோய்ந்து வந்தவர்கள். இங்கு கிறிஸ்தவ வாழ்வும் அதன் விழுமியங்களும் கைநெகிழப்பட்ட தன்மை காணப்படுகின்றது. இந்நிலை இக்கிராமத்தில் அக்கறை கொண்ட எல்லோருக்கும் மிகுந்த கவலையைத் தருவதாய் அமைந்திருக்கின்றது. இந்நிலையை மாற்றி மறைவாழ்வை மேம்படுத்த மன்னார் ஆயர் அவர்களும், பங்குத் தந்தையரும் ஆன்மீகப் பணியாளரும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாட்களில் இருந்து முனைந்து வருகின்றனர்.

இம்முனைப்புகளின் முதற்பெரும் முயற்சியாக, எமது அன்பிற்குரிய பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் மரி டி கோல் அவர்களின் சிந்தனையில் கருவாகத் தோன்றியதே ஒரு மாத கால சிறப்புத் தியானம் அல்லது மகா ஞானவொடுக்கம். பங்குத்தந்தையின் வேண்டுகையை ஏற்று வவுனியா அமதி அக மறையுரைஞர் குழுவைச் சார்ந்த ஐந்து அருட்பணியாளர்கள் தியான வளவாளர்களாக வருகைதந்து பறப்பாங்கண்டல், உயிர்த்தராசன்குளம் கிராமத்தில் முன்முயற்சிகளை மேற்கொண்டனர். திட்டமிட்டபடி தியானத்தை நடைமுறைப்படுத்தும் வேட்கையுடன் வளவாளர்களான அருட்பணி ஜெயபாலன், அமல்ராஜ், இயேசுதாஸ், கிளேயர், பிலிப் ஆகியோர் பறப்பாங்கண்டலுக்கு வருகைதந்து முகாமிட்டனர். இவர்கள் ஆனி 16 தொடக்கம் ஆடி 16 ஆம் நாள் வரை இங்கு தங்கிப் பணிசெய்தனர்.

ஆனி 16 மாலையில் பங்குத்தந்தை அவர்கள் தியானக் கொடியை ஏற்றி தியானத்தைத் தொடக்கிவைத்தார். எல்லாக் குருக்களினதும் ஈடுபாட்டுடன் திருப்பலி நிகழ்த்தப்பட்டது. தியான நிகழ்ச்சித்திட்ட அட்டையும், தியானப்பாடல் அட்டையும் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. தியானம் 'எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக' எனும் இறைமொழியையும், ஆன்மீகப் புதுப்பித்தலையும் கருப்பொருளாகக் கொண்டிருந்தது. தியானச் செயற்பாடுகளைச் சீராகச் செய்வதற்காக, பறப்பாங்கண்டல் மூன்று வலயங்களாகவும், உயிர்த்தராசன்குளம் இரு வலயங்களாகவும் வகுக்கப்பட்டன. அருட்பணியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க குழுக்கள் உருவாக்கப்பட்டன.

முதல் வாரத்தில் திருப்பலிகள், காலையில் பெரிய கோவிலிலும் உயிர்த்தராசன் குளத்திலும் இடம்பெற்றன. தொடர்ந்து குருக்கள் இல்லங்களைச் சந்தித்து மக்களின் நிலைபற்றிய செய்திகளை ஆய்ந்தறிந்து ஆன்மீக வளர்ச்சிக்குரிய அறிவுறுத்தல்களை அன்போடு வழங்கினர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கருப்பொருளைக்கொண்டு இளையோர், குடும்பம், முதியோர், தொழிலாளர், நோயாளர், பாவமன்னிப்பு, அன்னை மரியாள், நற்கருணை என கருத்தமர்வுகள் வளவாளர்களால் நடாத்தப்பட்டன. அடுத்த இரு வாரங்களிலும் மாலைத்திருப்பலியும், கலைநிகழ்ச்சிகளும் வலயங்களில் நடந்தன. இதனால் ஒவ்வொரு வலயமும் இறையாசீரைப் பெற்று மகிழ்ந்தது. மக்களுக்கிடையே கருத்து வேற்றுமைகள், உட்பூசல்கள் இருந்தாலும் அவற்றைச் சீர்செய்ய வழிபாடுகளில் கலந்து, திருவருட்சாதனங்களையும் பெற்றுக்கொண்டனர். பல அருட்பயன்களையும் கண்டுகொண்டனர்.

இந்நாட்களில் மரியன்னைப் பேரணியும் இடம்பெற்றது. வலய வீதிகள் அலங்கரிக்கப்பட்டு மூன்று வலய வீதிகளிலும் மரியன்னையின் திருச்சுருபம் ஊர்தியில் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. குணமாக்கலும், அருட்பலியும், அன்னையின் திருச்சுருப ஆசீரும் அருட்பணியாளர்களால் வழங்கப்பட்டது. இது ஆனி 24ம் நாளில் நடந்தேறியது.

ஆடி முதல் நாளில் நற்கருணைப் பேரணி இடம்பெற்றது. இரு ஊர் மக்களாலும் வீதியின் இருமருங்கும் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டது. இந்நற்கருணைப் பேரணி பறப்பாங்கண்டல் கட்டுக்கரை அன்னை வேளாங்கண்ணி ஆலய வீதிவழியாக உயிர்த்தராசன்குளம் கலையரங்கத்தை அடைந்தது. அங்கு குணமாக்கலும், நற்கருணை வழிபாடும் நடைபெற்றது. அருளுரைகளால் குருக்கள் மக்களை உற்சாகப்படுத்த, இறைபணிக்குழு, திருஇசைக்குழுவினரும் இறைமாட்சியைக் கருத்திற்கொண்டு திருநிகழ்வுகளுக்கு மெருகூட்டினர்.

பறப்பாங்கண்டல் தூய கார்மேல் அன்னை ஆலய திருவிழாக்காலமானதால் தியான இறுதி வார வழிபாடு அங்கு நடைபெற்றது. ஆடி 16ல் தியான இறுதித்திருப்பலி குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்களின் தலைமையில் நடைபெற்றுச் சிறப்பு ஆசீரும் வழங்கப்பட்டது.

பின் ஆயரின் திட்டத்தின்படி புதிய ஆலய அடிக்கல் நாட்டும் சடங்கை குருமுதல்வர், அருட்பணியாளர், பொதுநிலையினர் சேர்ந்து செய்தனர். பின் பெரிய கோயில் முச்சந்தியில் தியான நினைவுச் சிலுவை, சமாதான அன்னை திருச்சுரூபம் என்பவை திரை நீக்கம் செய்யப்பட்டன. மாலையில் தியான இறுதி நிகழ்வாக தியானம் சிறப்புடன் நடைபெற இறையுதவியோடு செயற்பட்டவர்களுக்கு நன்றிகூறி மதிப்பளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. குருமுதல்வர், பங்குத்தந்தை, மறையுரைஞர் குழுவினர் ஆகியோர் பொன்னாடை புனைந்து போற்றப்பட்டனர். பின் வலயக்கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் தியான முடிவு இறைவேண்டலும் செய்யப்பட்டு யாவும் இனிதே முடிவெய்தியது.

## கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் மூன்று முன்பள்ளிகளின் திறப்பு

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் கல்வி அபிவிருத்தி பணியில் ஒன்றாகிய முன்பள்ளிகளை நடாத்தும் பணி சிறப்பாக முன்னெடுக்கப்படும் அதேவேளை மடு பிரதேச செயலகப் பிரிவிற்குள் உள்ளடங்கும் கிராமங்களான கீரிசுட்டான், சின்னப் பண்டிவிரிச்சான், கல்மடு ஆகிய கிராமங்களில் மேற்படி முன்பள்ளிகள் கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் சகல வசதிகளையும் கொண்டு நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மடுத்திருப்பதியின் பரிபாலகர் அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரும், மடு பிரதேச செயலாளர் திரு. சத்தியசோதி அவர்களும், கலந்துகொண்டார்கள். இந்நிகழ்வில் இப்பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்கள், உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம பெரியார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சிறுவர்கள், கலந்து சிறப்பித்தனர். மேற்படி முன்பள்ளிகள் தரமான கட்டிட அமைப்பைக் கொண்டுள்ளதுடன் சிறுவர் பூங்கா, கிணறு, நீர்தாங்கி, மலசலகூட வசதி போன்றவற்றைக் கொண்டுள்ளன. இத்திட்டத்திற்கு Stromme Foundation நிறுவனம் விழங்கியுள்ளதும் குறிப்பிடததகககது.

இத்திட்டத்தோடு மேற்படி கிராமங்களில் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 85 குடும்பங்களுக்கு 40,0000/= பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாழ்வாதார உதவிகளின் மூலம் மக்கள் ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, சிறுகடை வியாபாரம், கோழி வளர்ப்பு, வீட்டுத் தோட்டத்திற்கான கிணறு போன்றவைகளைப் பெற்று தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு முயற்சியெடுப்பதை காணக்கூடியதாக உள்ளது. இவற்றைவிட முன்பள்ளிகளை எதிர்காலத்தில் சுயமாக அக்கிராம மக்களே கொண்டு நடத்துவதற்காக முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்களுக்கு பொதுப்பணமாக 150,000/= ரூபா பொருளாதார மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இடப்பெயர்வின் பிற்பாடு அத்தியாவசிய தேவையாகிய சிறுவர் பாடசாலைகளைப் புனரமைத்து எமது சமூகத்தின் பொக்கிசமான கல்வியை ஆரம்பத்திலிருந்தே உகந்த சூழ்நிலையிலிருந்து கற்பதற்கு வழிசமைத்த வாழ்வுதய இயக்குனர் அருட்பணி எம். ஜெயபாலன் அடிகளாரின் பணியை மேற்படி கிராமமக்கள் பாராட்டி தமது உள்ளார்ந்த நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவாச ஆண்டு சிறப்புப்பொழிவு

விசுவாச ஆண்டு சிறப்புக் கட்டுரை

# உறுதியான விசுவாசமும் காலத்துக்கேற்ப பணிகளுமே இன்றைய காலத்தின் தேவை

அருட்தந்தை றமேஸ் அ.ம.தி, ஞானோதயம், மன்னார்


"மனித வாழ்வு நம்பிக்கையில் கட்டப்பட்ட ஒரு வாழ்வு. நம்பிக்கையில்லா மனிதன் உண்மை மனிதனே அல்லன். எதிர்காலத்தை நோக்கி வாழ்தலே மனிதனின் உண்மை இயல்பு" என்று கூறுகின்றனர் புளோக் மற்றும் ஷார்டேன் என்னும் அறிஞர்கள்.

இறை நம்பிக்கையில் மனிதன் தன் வாழ்வின் உட்பொருளை அறிந்து, எதிர்காலத்தை நோக்குகின்றான். அதனால்தான் மனித வாழ்வு எதிர்பார்ப்பின் வாழ்வு என்று அழைக்கப்படுகிறது. மனிதன் தான் வாழும் இவ்வுலகில் எத்தனையோ குறைபாடுகளைக் காண்கிறான். சமுதாயத்தில் அநீதிகளைக் கண்டு கலங்குகிறான். ஆனால் இக்குறைபாடுகளும், அநீதிகளும் ஒருநாள் மறைந்தேதீரும் என்ற ஓர் எதிர்பார்ப்பும், நம்பிக்கையுமே அவனுக்கு உறுதியான உள்ளத்தை வழங்குகிறது.

விசுவாசம் என்பது ஒருவர்மேல் நாம் கொண்டிருக்கும் பற்று என்று கூறலாம். அதாவது வாழ்விலும் தாழ்விலும் அவரே தனக்கு ஏகதுணை என்ற நினைப்போடு, அவரிலே முழுமையான நம்பிக்கைகொண்டு வாழும் வாழ்வே விசுவாச வாழ்வு ஆகும். செல்வத்திலே செழித்து, இன்பத்திலே திளைத்து, நிம்மதியோடு வாழ்ந்த ஆபிரகாம் இறைவனின் அழைப்பை உள்வாங்கி, தெரியாத இடத்தில், புரியாத மனிதர்கள் மத்தியில் வாழப் புறப்படுகிறார் (தொ.நூ 12:1-4). இதுதான் உண்மையான விசுவாசம். தன்னை அழைத்த இறைவனுக்கு, அவரில் கொண்டிருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தும் பதில் மொழி என்றும் இதனை இனங்கண்டுகொள்ள முடியும். இறைவனில் விசுவாசம் கொண்ட மக்கள் எவ்வாறு தங்கள் வாழ்வில் இறைவனைப் பிரதிபலித்து வாழ்ந்தார்கள் என்று திருவிவியமும், திருச்சபைப் பாரம்பரியமும் எமக்கு சான்று தருகின்றன. இன்று புரியாத உலகில், அழிவுக் கலாச்சாரத்துக்குள், முகமூடி தரித்து வாழும் மக்கள் மத்தியில் வாழும் எமது விசுவாசம் எத்தகையதாக இருக்க வேண்டும்?

இன்று மனிதம் சிதைக்கப்படுகிறது. பணத்திற்காகவும், சுய இலாபத்திற்காகவும், மனிதனுடைய உரிமைகள் விலைபோகின்ற துர்ப்பாக்கிய நிலையே எமது சமுதாயத்தில் தலைதூக்கியுள்ளது. உண்மையைப் பேசுபவன் உலகறியாதவன் என்றும், ஏமாற்றிப் பிழைக்கத் தெரியாதவன் அனுபவமில்லதாவன் என்றும், நீதி நியாயம் பேசுபவர்களை புரட்சிக்காரர் என்றும் முத்திரை குத்தி மக்களை ஒரு மயக்கநிலைக்கு அழைத்துச் செல்லும் இக்காலத்தில் எமது விசுவாசம் குடத்தில் இட்ட விளக்காக அல்ல மாறாக சமூகத்தில் படர்ந்திருக்கும் பொய்களுக்கும், போலிகளுக்கும் எரியூட்டும் பிழம்பாக மாற வேண்டும். மக்களின் மயக்கநிலைகள் தெளிய, உண்மை நிலையை அவர்கள் உணர, சமூகம் ஒரு நல்ல மாற்றத்தை அடைய எமது இன்றைய பணிகள் அமைய வேண்டும். இதுவே இன்றைய தேவையும்கூட. நற்செய்தியின் ஒளியில் சிந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இதிலே ஒரு தெளிவும், இப்பணியை செய்யவேண்டும் என்ற உறுதியும் எழும் என்பதில் ஐயமில்லை.

காலத்தின் அறிகுறிகளை அறிந்து, நற்செய்தியின் ஒளியில் அதற்கு விளக்கம் கொடுப்பது திருச்சபையின் கடமை என்கிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம் (இ.உ.தி 4). எனவே கிறிஸ்துவின் பணியாளர்களாகிய எமது விசுவாசம் குறுகிய நோக்கங்களுக்கும், கோணல் மனப்பான்மைகளுக்கும் இடங்கொடாமல் உலகத்தை நோக்கி ஒரு பரந்த விசுவாசமாக அமையவேண்டும். விசுவாசத்தை பாதுகாக்க நாம் உலகத்தைவிட்டு ஓட நினைப்பது - நாம் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல - நம் விசுவாசம் இன்னும் உறுதி பெறவில்லை என்பதனையே காட்டுகிறது. எமது விசுவாசம் உறுதியானது என்றால் அது எமது பணிகளிலே குறிப்பாக நற்செய்தி அறிவுப் பணியிலே வெளிப்பட வேண்டும். இன்றைய பொருளாதார, சமூக அடிமைத்தளைகளிலிருந்து மக்களை விடுவிக்கும் பணியில் நாம் முன்வரவில்லையென்றால், காலத்தின் அறிகுறிகளை நாம் கண்டுணரவில்லையென்றால், மக்களின் இன்றைய தேவைகளில் நாம் கண்மூடிவிட்டோம் என்றுதான் பொருள்.




திருத்தந்தை 6ம் சின்னப்பர் கூறுவதைப்போல "கோடிக்கணக்கான மக்களின் விடுதலையை அறிவிப்பதும், அதற்குத்துணை செய்வதும், சான்றுபகருவதும், திருச்சபையின் கடமை. இது நற்செய்திப்பணிக்கு புறம்பானதல்ல. மாறாக இதுவே இன்றைய தேவை."

கருவறையில் தோன்றி கல்லறைக்குள் மறையும்வரை இந்த மண்ணிலே வாழும் ஒவ்வொரு மனிதனது உள்ளத்தின் ஆழத்தில் உறைந்திருக்கும் ஒவ்வொரு வகையான எதிபார்ப்புக்களும் கருவாகி, உருவாகி, உயிருள்ள உணர்வுகள் உயிர்த்துடிப்பாகி, மலர்ந்து இறுதியில் உலர்ந்து மனதைவிட்டு உதிர்வடைந்து விடுகின்றன.

வாழ்க்கை எம்முடையதுதான் ஆனால் பல சந்தர்ப்பங்களில் அதன் தன்மை எமக்கே புரிவதில்லை. இதனால் வாழ்வில் எதிர்பார்த்த நிகழ்வுகள் அமையாதவிடத்து வாழ்வை தட்டிக்கழிக்கும் மனநோக்கு எழுவது இயல்பு. அது தவறு. கற்பனையும், கடினவுழைப்பும், தீவிரமான சிந்தனையும், துணிச்சலான செயற்பாடும் இணைந்த எதிர்பார்ப்பில் மலர்வதுதான் வெற்றிகரமான வாழ்க்கை.

கிறிஸ்தவர்களாகிய எங்களது எதிர்பார்ப்பு கிறிஸ்துவே. கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு வளமான, புரட்சிகரமான வாழ்க்கையை மேற்கொள்ள முனையும்போது, பெரிய ஆபத்துக்களும், பாரிய இழப்புக்களும் ஏற்பட நேர்ந்தாலும் உரிய நேரத்தில் அவற்றை எதிர்கொள்ளும் ஆற்றலை இறைவன் எமக்குதருவார் என்பதில் ஐயமில்லை.

இன்று எமது சமுதாயத்தில் பெரும் பகுதி மக்கள் தங்களிலே பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், குழப்பங்களுக்கும், மனவேதனைகளுக்கும், இழப்புக்களுக்கும் ஆளாகி வாழ்வில் நம்பிக்கையிழந்து, வாழ்வின் பொருள் மறந்து, வாழ்வே வேண்டாம் என்று நடைப்பிணங்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையில் அவர்கள் மட்டில் எமது கடப்பாடு என்ன?

புனித யாக்கோபு தனது கடிதத்தில் குறிப்பிடுவதைப்போல "ஒரு சகோதரன் அல்லது சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது அவர்கள் உடலுக்கு தேவையானவற்றை ஒன்றும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவரைப் பார்த்து, நலமே சென்று வாருங்கள் குளிர்காய்ந்து கொள்ளுங்கள் பசியாற்றிக்கொள்ளுங்கள் என்பாரென்றால் அதனால் பயன் என்ன?" (யாக் 2: 15-16).

இன்று கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெற்று, கிறிஸ்தவனாக அழைப்புப் பெற்ற ஒவ்வொருவருக்கும் அவர்கள் மட்டில் பல பொறுப்புக்கள் காத்திருக்கின்றன. ஒவ்வொருவரும் நற்செய்தி தரும் விசுவாச ஒளியில் முன்சென்று, இன்றைய காலத்தின் தேவையினை சமூக நோக்கில் விளங்கிக்கொண்டு, கிறிஸ்தவ விழுமியங்களை தங்கள் வாழ்வில் பிரதிபலித்து, தாம் கொண்டிருக்கும் விசுவாசத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதே இன்றைய தேவை. அதுவே அர்த்தமுள்ள கிறிஸ்தவ வாழ்வும் ஆகும்.

# விசுவாசத்தை வளர்க்கும் இறைவார்த்தை

(நவம்பர் மாதத் தொடர்ச்சி)

### திருத்தூதர் வாழ்வில் இறைவார்த்தை

இயேசுவின் சீடர்கள் வாழ்வில் இறைவார்த்தை ஏற்படுத்திய தாக்கம் அளப்பரியது. அவர்கள் மூன்று ஆண்டுகள் இயேசு செய்தவைகளைப் பார்த்தும், போதித்தவைகளைக் கேட்டும் நம்பினர். அதன் விளைவாக இயேசுவுக்கு சாட்சியாக வாழ்ந்தனர். இதைப் பற்றிய அனுபவ வாழ்வை திருத்தூதர் பணிகள் நூல் எடுத்தியம்புகின்றது.

நம்பிக்கை பெற்ற திருத்தூதர்கள் முடங்கிவிடாமல் இறைவார்த்தையை துன்பங்களுக்கு மத்தியில் முன்னெடுத்துச் சென்றதையும், பல மக்கள் அவ்வார்த்தைகளைக் கேட்டு, கூடி இறைவேண்டுதலில் உறுதியாய் நிலைத்து நின்றதையும் (திப 2:42-47), இயேசுவின் விடுவிக்கும் பணியைத் தொடர்ந்தாற்றி பல வல்ல செயல்களைச் செய்து தங்களது நம்பிக்கையை வெளிப்படுத்தி, சாட்சிகளாய் உலா வந்ததையும் திருத்தூதர் பணிகள் நூல் எடுத்துரைக்கின்றது. (3:6, 4:31-32,5:14-15,7:55-57,9:42:46).

நம்பிக்கை கொண்ட இயேசுவின் சிறு குழுமம் ஒரு பேரியியக்கமாக வளர்ந்தது. எருசலேம், யூதேயா, சமாரியா உலகின் கடையெல்லை வரை பரவியதும் இறைவார்த்தை தந்த பரிமாணமே. இதன் பலனாக இறைவார்த்தை பலருக்கும் நம்பிக்கைகளை வளர்ப்பதற்கும் வாழ்வு பெறுவதற்கும் கருவியாக அமைந்திருந்தது. திப 19:20ல் 'ஆண்டவரின் வார்த்தை ஆற்றல் பொருந்தியதாய் பரவி வல்லமையுடன் செயல்பட்டது' எனக் காண்கிறோம் (14:1-3,19:11-18,15:19,18:9-11). மேலும் கடவுளின் வார்த்தை எவ்வாறு பவுலை ஒரு திருத்தூதராக மாற்றியது. அவர் வழியாக எப்படி நற்செய்தி பரவியது என்பதற்கு அவரது 13 கடிதங்களும் சான்று பகர்கின்றன.

### புனிதர்களின் வாழ்வில் இறைவார்த்தை

அன்று மட்டுமல்ல இன்றுவரை இறைவார்த்தை உயிருள்ள உள்ளங்களை ஊடுருவும் வல்லமை கொண்டது என்பதை (எபி 4:12) புனிதர்களின் வாழ்விலிருந்து காண்கிறோம். எல்லாப் புனிதர்களும் ஏதோ ஓர் இறைவார்த்தையால் ஈர்க்கப்பட்டுள்ளார்கள். ஒரு சிலரை இங்கு உதாரணமாகக் காண்போம்.

அசிசியாருக்கு மத் 6:24ம், இஞ்ஞாசியார் சவேரியார் வாழ்வுக்கு மத் 16: 26ம், வின்சன்ட் தே பவுலுக்கு மத். 25: 40ம், குழந்தை தெரேசாவிற்கு மத் 24:35ம் அகஸ்தினாருக்கு கொலோ 3:5-8ம் அவர்களைத் தூண்டி நம்பிக்கையை வளர்த்து புனிதர்களாக்கிய இறைவார்த்தைகள் என அறிகிறோம்.

இதுபோல ஆண்டவரின் வார்த்தைகள் இவர்கள் வழியாக பலரைச் சென்றடைந்தன. அவ்விறைவாக்குகள் நம்பிக்கையூட்டி இன்றளவும் அப்பணிகளைத் தொடர்வதற்கு காரணமாக அமைந்துள்ளன. அப்பணியானது தொடர்வதும் நமது அனுபவங்களாகும் (யாக் 2:17 1 யோவா 5:4 திவெ 1:5).

### இன்றைய சூழலில் இறைவார்த்தை

நம்பிக்கையை வளர்க்கும் இறைவார்த்தை என்று எண்ணுகின்றபோது இன்றைய சூழலில், இறைவார்த்தைத் தேடலும் ஆன்மீக வாழ்வில் ஆழம் பெறவேண்டி அதனை வாசிப்பதும் தியானிப்பதும் பரவலாக்கப்பட்டு இருப்பதை உணர முடிகிறது. அன்பியங்கள், விவிலிய வகுப்புகள், கருத்தமர்வுகள், நற்செய்தி அறிவிப்பு மையங்கள், குழுக்கள், தம்பதியர் பயிற்சி போன்றவைகளிலும் 'இறைவார்த்தை' எந்தளவு நம் நம்பிக்கை வாழ்வை வளமாக்க உதவுகின்றது என்று கண்கூடாகப் பார்க்கிறோம். எனவே கடவுள் அன்று மட்டுமல்ல இன்றும் பேசுகின்றார் என்ற அனுபவத்தையும் நம் வாழ்வில் நம்பிக்கையில் வளர இறைவார்த்தை என்றும் உதவுகின்றது. 'ஆண்டவரின் அருள்வாக்கு' என்ற திருத்தந்தையின் திருத்தூது மடலில் நம்பிக்கை வழியாக நம்மோடு பேசும், வெளிப்படுத்தும் கடவுளுக்கு பதிலளிப்புத் தரவேண்டும் என்றும் இத்தகைய நிலையையே, உறவையே மீட்பின் வரலாறு காட்டுகிறதென்றும் எடுத்தியம்பியுள்ளார். இதனால் திரு அவையின் நம்பிக்கையை இறைவார்த்தையின் ஒளியில் புதுப்பிக்க வேண்டும் என்கிறார். (ஆ.அ. 24) நம்பிக்கை வாழ்வுக்கு நம் அன்னை மரியா சிறந்த மாதிரி.

எனவே 1. நமது நம்பிக்கைப் படகை ஆழமான பகுதிக்கு இட்டுச் சென்று அவரது வார்த்தையை வாசிப்பதிலும் பதிலளிப்பதிலும் நம்மை ஈடுபடுத்துவோம்.

2. திரு அவையில் இறைவார்த்தையைக் கொண்டாடி இறை நம்பிக்கையில் வளர முற்படுவோம்.

3. நற்செய்தியோடு கொண்டுள்ள தொடர்பு, உலகிற்கு இயேசுவை அறிவிப்பவர்களாக நம்மை மாற்றி, நம்பிக்கையை வளர்த்து, சாட்சிய வாழ்வுக்கு இட்டுச் செல்லும். அப்போது பெயரளவில் அல்லாமல் உண்மைக் கிறிஸ்தவராக நாம் உலா வரமுடியும். அப்போது நம் நம்பிக்கை வாழ்வு 'இறைவார்த்தையில் ஊன்றி வளர்ந்து "இயேசுவுக்கு சாட்சி பகரத்தூண்டுகின்றது' என்று அனைவரும் கண்டுகொள்வர்.

# வேப்பங்குளம் முதியோர் சங்கத்தினரின் ஆன்மீகச் சுற்றுலா

வேப்பங்குளம் பங்கைச் சேர்ந்த புனித சூசையப்பர் முதியோர் சங்கத்தினர் கடந்த 20.09.2012இல் பங்குத்தந்தை அ. றஜனிகாந் அடிகளாரின் வழிநடத்தலில் புத்தளம் தலவில புனித அன்னம்மாள் யாத்திரை ஸ்தலம் நோக்கித் திருயாத்திரை சென்றனர்.

புனித அன்னம்மாளின் தரிசனம், 250 ஆண்டு யூபிலி கொண்டாடி மகிழும் ஆலய அமைப்புச் சூழல், அதனருகே வாயிலில் இரு மருங்கிலும் வானதூதர் நின்று கைகூப்பி வரவேற்கும் ஓர் ஆலயம், உள்ளே கடலலை தாலாட்டிக் காற்றலை வழங்கிடும் அழகிய, எழிலான, விந்தையான அமைதியே உருவான நற்கருணை நாதரின் பிரசன்னம் ஆகிய அனைத்துமே அனைவரையும் பரவசத்தில் ஆழ்த்தியது.

ஈற்றில் பங்குத்தந்தையின் கல்வாரிப் பலியில் அனைவரும் இணைந்து ஆசிவேண்டி அன்னையின் பாதம் பணிந்து நன்றி கூறியபின் கடற்கரையில் கலங்கரை விளக்கென உயரே காட்சி தரும் அன்னையையும் தரிசித்து, அங்கிருந்து விடைபெற்று பாலைக்குடா புனித அந்தோனியாரின் பிரசன்னத்திலும் மகிழ்ந்து மீண்டனர்.



உழைத்து இளைத்துக் களைத்த முதியோர் ஒதுங்கி ஒய்வெடுக்க வேண்டும் என்ற இன்றைய உலகிற்கு இச்சுற்றுலா ஒரு சவால்! இச்சுற்றுலாவை ஒழுங்குசெய்ய ஆலோசனை வழங்கிய ஆண்டவரைப் புகழ்ந்து போற்றி நன்றி கூறி, மந்தைகளை வழிநடத்திய தந்தையர்க்கும் நன்றி கூறி ஆசிவேண்டுகின்றனர்.

வேப்பங்குளம் புனித சூசையப்பர் முதியோர் சங்கம்

## விசுவாச ஆண்டு தொடர்பான ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

2013ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து மன்னார் மறைமாவட்டத்தில் விசுவாச ஆண்டாகக் கொண்டாட இருப்பதால் இந்த விசுவாச ஆண்டு தொடர்பான உங்கள் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். ஆக்கங்களின் தரம் கண்டு பிரசுரிப்போம். விசுவாச ஆண்டு தொடர்பாக பங்குகளில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகள் பற்றிய செய்திகளையும் எழுதி அனுப்புங்கள். - மன்னா ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

### சிறந்த திட்டமிடலோடும் நீண்ட ஆயத்தத்தோடும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய

# திருக்குடும்ப சபையினரின் முப்பொன்விழா இனிதே நிறைவெய்தியது

திருக்குடும்ப சகோதரிகள் தம் ஆதித்தாய்மார் இலங்கை மண்ணில் கால்பதித்த நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவை நன்றியோடு நினைவுகூரும் முகமாக கடந்த ஒக்ரோபர் 27ஆம் திகதி முப்பொன்விழாவின் உச்ச நிகழ்வாகிய நன்றித் திருப்பலியை கொண்டாடி மகிழ்ந்தனர்.

முப்பொன் விழாவின் ஆரம்ப நிகழ்வாக செப்ரெம்பர் 29ம் திகதி இளைஞர்களுக்கான ஒன்றுகூடல் யாழ் திருக்குடும்ப கன்னியர் தேசிய பாடசாலையில் ஒழுங்குசெய்யப்பட்டது. திருக்குடும்ப சகோதரிகள் பணியாற்றும் பாடசாலைகளிலிருந்து ஆண்களும் பெண்களுமாக முன்னூறு இளைஞர் வரையில் இதில் பயனுறப்பங்கேற்றனர். ஓக்ரோபர் 17ம் திகதி திருக்குடும்ப அருங்கொடை, ஆன்மீகம், அர்ப்பணத்தை வெளிப்படுத்தும் பாடல்கள் அடங்கிய 'நாமே இருக்கிறவர்' என்னும் இறுவட்டு வெளியிடப்பட்டது. அத்துடன் holyfamilysistersjaffna.org இணையத்தளம் ஒன்றும் மாகாணத்திற்கென திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து ஒக்ரோபர் 19, 20, 21 இல் திருக்குடும்ப சபை சார்ந்த கண்காட்சியும் விற்பனையும் சபையின் ஆதித் தாய்மாரின் முதல் இல்லமாகிய யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் உயிர்த்துடிப்போடும், உற்சாகத்தோடும் நடைபெற்றது. சபையின் ஊற்றுக்கள், சபையின் தாய்மாரின் வருகை, மக்களோடு இயங்கி பணி புரிந்த தன்மை, வளர்ச்சி, சபையின் குழுக்களின் விபரங்கள், ஐந்து கிளைகளின் வரலாறு என்பன ஒவ்வொரு கட்டத்திலும் விரிவாகக் கொடுக்கப்பட்டது. சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், அதிஷ்ட சீட்டிழுப்பு, வீட்டுப்பாவனை பொருட்களின் விற்பனை, தாகம் தீர்க்க பசியாற பானங்கள், உணவு வகைகள் இன்னும் பல்வேறு செயற்பாடுகள் இதில் இடம்பெற்றன. ஏற்கனவே தயாரிக்கப்பட்டு தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா ஒலிபரப்பு நிலையத்திலும், இணையதளத்திலும் வெளியிடப்பட்ட 'பாதச் சுவடுகள்' என்னும் ஒளிப்பேழையின் நிகழ்ச்சிகள் யாவும் கால்கோள் சுவடுகள், வரலாற்றுச் சுவடுகள், அனுபவச் சுவடுகள் என்னும் பாகங்களாக பிறிதொரு மண்டபத்தில் கணனியில் ஓடிக்கொண்டேயிருந்தன. பல பாகங்களிலும் இருந்து வந்த மக்கள் கண்காட்சி, விற்பனை என்று வந்தாலும், தம் அறிவையும் ஆன்மீகத்தையும் அகலமாக்கி, ஆழப்படுத்தியதை வெளிப்படுத்தினர்.

ஈற்றில் ஒக்டோபர் 27 எம் நிறுவுனரின் பிறந்த நாள். முப்பொன் விழாவின் உச்ச நிகழ்வாகிய நன்றித்திருப்பலி யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பரிசுத்த தந்தையின் பிரதிநிதி அதிவந். யோசவ் ஸ்பிரேறி அவர்களின் தலைமையில் நிறைவேறிய இத்திருப்பலியில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள், இரத்தினபுரி ஆயர் கிளீற்றஸ் பெரேரா அவர்கள், யாழ் அமலமரி தியாகிகள் முதல்வர் போல் நட்சத்திரம் அடிகளார், திருக்குடும்ப துணைக்குரு ஜே. நிக்கலஸ் அடிகளார் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். பல மறைமாவட்டக் குருக்கள், துறவற சபைக் குருக்கள், துறவிகள், பொது மக்கள் பாடசாலைப் பிள்ளைகள் இப்பலியில் நன்றியோடு கலந்துகொண்டனர்.

ஆதித்தாய்மாரின் வருகையின் அடையாளமாக ஒரு சிறிய வள்ளம் அதில் ஆயர் சமேரியா, ஆறு கன்னியர்களின் உருவம் தாங்கிச் செல்லப்பட்டு, பாஸ்கு மெழுகுவர்த்தியுடன் திருப்பீடம் வைக்கப்பட்டது.




திருப்பலியின்போது ஆங்கிலத்திலும், தமிழிலும் மறையுரை ஆற்றப்பட்டது. ஏராளமான மக்கள், தென் பகுதி அருட்சகோதரிகள் உட்பட இந்நன்றிப்பலியில் உணர்வுபூர்வமாகப் பங்கெடுத்தனர். தமிழ், ஆங்கிலம், சிங்களம், இலத்தீன் மொழிகளில் பாடல்கள் இசைக்கப்பட்டன. பரிசுத்த தந்தையின் ஆசீயுடன் நிறைவுபெற்ற இத்திருப்பலியில் பின்னர் அனைவரும் ஒழுங்குசெய்யப்பட்ட இடங்களில் விருந்துண்டு மகிழ்ந்தனர்.

பி. ப. 4.30 மணியளவில் விழாக்கோலம் பூண்ட சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. விழாவின் முக்கிய விருந்தினர்கள் நாதஸ்வர இசையுடன் அழைத்து வரப்பட்டு, குத்து விளக்கேற்றி இறை வணக்கம் இசைக்கப்பட்டு மாகாணத் தலைவியின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முப்பொன் யூபிலி மலரான Bountiful Blessings யாழ் திருக்குடும்ப மாகாண முதல்வர் அருட்சகோதரி யோலன்ட் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டு சிறப்பிதழ்கள் வழங்கப்பட்டன. இடையிடையே சிறப்புப் பிரமுகர்களான யாழ் மேயர், செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன், அமதிகளின் யாழ் மாகாண முதல்வர், திருக்குடும்ப தியான யோக கிளை முதல்வர், பரிசுத்த திருத்தந்தையின் பிரதிநிதி, யாழ் ஆயர் என்பவர்களால் சிறப்புரைகள் நிகழ்த்தப்பட்டன. யாழ் திருக்குடும்ப கன்னியர்கள், பிள்ளைகள், திருமறைக் கலாமன்றத்தினர் ஆகியவர்களால் நடனம், பாடல்கள், இன்னிசை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. இடைவெளியில் யூபிலி கேக் மேடையில் வெட்டப்பட்டு, திருக்குடும்ப சபையை சார்ந்த பிள்ளைகளுக்கு பரிமாறப்பட்டது. பணித்தளங்களில் இணைந்து எந்த வேளையிலும் மனமுவந்து தங்கள் நேரத்தையும், ஆற்றல்களையும் நல்கிய சகோதர சகோதரிகளில் நால்வர் பொன்னாடை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இறுதியில் யாழ் மாகாண ஆலோசகர் அருட்சகோதரி ஜீவமலர் அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டு, Bountiful Blessings என்னும் பாடலுடன் முப்பொன் யூபிலி விழா அனைவரின் மன மகிழ்வோடும், திருக்குடும்ப ஆசீரோடும் நிறைவுபெற்றது.

## யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாபெரும் செபமாலைப் பேரணி

அன்னை மரியாளுடைய வணக்க மாதமாகிய ஒக்டோபர் இறுதி ஞாயிறு யாழ் மறைமாவட்ட திருச்சபை வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மாபெரும் செபமாலைப் பேரணி நடைபெற்றது. இலங்கையின் பல பாகங்களில் இருந்து கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் வருகை தந்த பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்க மக்கள், மிகவும் பக்தியான முறையில், அன்னை மரியாளின் அன்புப்பிள்ளைகள் என்ற உணர்வுடன் கைகளில் செபமாலையினை ஏந்தியவாறு தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் செபமாலையை சொல்லிக்கொண்டும் அன்னையினுடைய பாடல்களைப் பாடிக்கொண்டும் யாழ் பட்டணத்தை சுற்றி நாங்கள் அன்னை மரியாளுடைய சேனையினர் என்பதைப் பறைசாற்றினார்கள்.

சேனாருஸ் (Senstus) என்னும் மரியாயின் சேனை கொழும்பு அமைப்பும், யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனையின் கொமிசியமும் இணைந்து அன்னையின் புகழைப் பறைசாற்றும் முகமாகவும் நிரந்தர சமாதானத்தை வேண்டியும் கடந்த 28.10.2012 அன்று இந்த மாபெரும் செபமாலைப் பேரணி இடம்பெற்றது. யாழ் மறைமாவட்ட அதிவணக்கத்திற்குரிய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஆலோசனைக்கமைய, குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்கள், மரியாயின் சேனை உறுப்பினர்கள் மற்றும் பொதுநிலையினருடைய உதவியுடன் இந்நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த மாபெரும் பேரணியில் திருத்தந்தையினுடைய இலங்கைக்கான பிரதிநிதி மேதகு பேராயர் ஜோசப்ஸ்பிரேரி மற்றும் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு ஆயர் கிளிற்ரஸ் அவர்களும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுக் குறித்து ஆயர்களின் அறிக்கை

பிரதம நீதியரசர்மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, அவரைப் பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் அகற்றும் முயற்சிகள் குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தனது கருத்தை வெளியிட்டுள்ளது. அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சுயாதீனத்தன்மை மற்றும் சுமூகமான செயல்பாட்டிற்கு தற்சமயம் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை மிகுந்த கரிசனையோடு இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் அவதானிக்கிறது.

உண்மையான சனநாயக நாட்டில் சட்டமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித்துறை தத்தமது செயல்பாடுகளை இலங்கை யாப்பின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு அமைய நடைமுறைபடுத்துவது அவசியமாகும். மேலும் நிறைவேற்று அதிகாரம் மற்றும் சட்ட மன்றம் நீதித்துறையுடனான முறுகல்களில் சுமூகமான தீர்வுகளையே நாடவும் வேண்டும்.

சட்டத்தை முறையான விதத்தில் விளக்கவேண்டிய கடப்பாட்டையுடைய நீதித்துறையானது அதற்கே உரித்தான சுயாதீனம் மற்றும் சுமூக செயற்பாடு மதிக்கப்படல் வேண்டும். இது இல்லாத பட்சத்தில் சனநாயகமும், சட்டமும் ஒழுங்கு சீர்குலைக்கப்படும் நிலை உருவாகும்.

தற்போதைய சூழலில் நிறைவேற்று அதிகாரமும் சட்ட சபையும் ஒன்றுசேர்ந்து நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்க முன்வர வேண்டும் எக்காரணத்தைக் கொண்டும் சீர்குலைக்கப்படலாகாது என இலங்கை ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

## யாழ் குருக்களுக்கான வருடாந்த ஞான ஒடுக்கம்

யாழ் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த ஞான ஒடுக்கமானது கடந்த நவம்பர் மாதம் இரு குழுக்களாக பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்றது. முதல் குழுவினருக்கான தியானம் நவம்பர் 04ம் திகதி முதல் 10ம் திகதி வரையும், இரண்டாம் குழுவினருக்கான தியானம் நவம்பர் 18ம் திகதி முதல் 24ம் திகதி வரையும் நடைபெற்றது. இத்தியானங்களை இயேசு சபைக்குருக்களான அருட்பணி லசந்த, அருட்பணி சேவியர் ஞானசேகரம் ஆகியோர் நெறிப்படுத்தினர். இத்தியானத்தில் ஆயர், குருக்கள் இணைந்து தமது ஆன்மீக வாழ்வை புதுப்பித்துக்கொண்டனர்.

## பிறப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளின் ஞாயிறு



கருக்கலைப்புக்கு எதிரான தங்கள் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக நவம்பர் மாதம் 11ம் திகதியை பிறப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளின் ஞாயிறு என இலங்கை ஆயர் பேரவையினர் அறிவித்துள்ளனர். கருக்கலைப்பு என்பது எத்தகைய சூழலிலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது மட்டுமல்ல இத்தகைய பாவச்செயலில் ஈடுபடுவோர் திரு அவையிலிருந்து நீக்கி வைக்கப்படும் ஆபத்தையும் எதிர்கொள்கின்றனர் என ஆயர்கள் மேலும் கூறியுள்ளனர்.

## திருகோணமலை பிராந்திய வின்சன் டி போல் சபை மறைமாவட்ட சபையாக தரம் உயர்வு

திருகோணமலை மீண்டும் தனிமறைமாவட்டமாக தனித்துவம் பெற்றுள்ள நிலையில் கடந்த 27.11.2012 அன்று நடைபெற்ற பிராந்திய சபை அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜே. கிங்சிலி சுவாமிப்பிள்ளை ஆண்டகை அவர்கள் எமது சபை மறைமாவட்ட சபையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதை உத்தியோக பூர்வமாக அறிவித்தார். மறைமாவட்ட சபையின் ஆன்மீக இயக்குனராக மூதூர் தூய அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி யூஜின் ஜொனார்த்தன் அடிகளார் ஆயரினால் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரையில் திருகோணமலையில் பிராந்திய வின்சன் டி போல் சபை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. - *ஜி. அல்பேட், மறைமாவட்ட செயலாளர்.*

### முன்னாள் சுதேச யாழ் மறைமாவட்ட ஆயர்கள் இருவரினதும் மறைக்கல்விப்பணி

## ஆயர் வ. தியோகுப்பிள்ளை அறக்கொடை பேருரை

யாழ் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் யாழ் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் அறக்கொடை பேருரை ஏற்பாடு செய்யப்படுகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டும் "முன்னாள் சுதேச யாழ் மறைமாவட்ட ஆயர்கள் இருவரினதும் மறைக்கல்விப்பணி" எனும் தலைப்பில் அருட்பணி. கு. யே. அன்ரனிபாலா அடிகளாரால் பேருரை சிறப்பாக நிகழ்த்தப்பட்டது.

யாழ் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் அருட்பணி எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையிலும் ஒன்றியத்தின் செயலாளர் அருட்பணி எஸ். ஜே. கியூ. ஜெயரஞ்சன் அடிகளாரின் ஏற்பாட்டிலும் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார். இந்நிகழ்வில் பல குருக்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

நான்கு தமிழ் மறைமாவட்டங்களிலும் 2012இல் மறைக்கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக மறைந்த முன்னாள் சுதேச யாழ் மறைமாவட்ட ஆயர்களான பேரருட்திரு. ஜேக்கப்பிள்ளை ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி, பேரருட்திரு வஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை இருவரதும் மறைக்கல்விப்பணி பற்றி சிந்தித்தமை சிறப்பான ஒரு விடயமாகும். மேற்படி நடைபெற்ற அறக்கொடை பேருரையானது யாழ் மாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐந்தாவது நினைவுப் பேருரை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரான்ஸ் நாட்டில் இயங்கும்

# மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு

## அடுத்த வருடம்

### சிறப்பு ஒன்றுகூடலும் மலர் வெளியீடும்

புலம்பெயர் நிலையிலும் மன்னார் மாவட்ட மக்கள் ஒன்றுகூடி உருவாக்கிய 'மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு' கடந்த 6 வருடங்களாக சீராகவும் சிறப்பாகவும் இயங்கிவருகின்றது.

இந்த அமைப்பு சில சாதனைகளை, அரும் செயல்களைப் படைத்து வந்தபோதிலும் 2006 வைகாசியில் இருந்து இங்கு வருகை தந்த அருட்பணி. பெனோ அலக்ஸ்சாண்டர் அவர்களின் வழிநடத்தலில் பிரான்ஸ் அரசின் அங்கீகாரம் பெற்று பதிவுசெய்யப்பட்டு இயங்கிவருகின்றது.

இந்த அமைப்பு ஊடாக எமது மக்களின் மேம்பாட்டிற்கு காலத்திற்குக் காலம் நாம் உதவிகள் செய்துகொண்டே இருக்கின்றோம். விசேடமாக எம் மண்ணில் எவ்வித வசதிகளும், உதவிகளும் இல்லாத 25 பிள்ளைகளை 'கரித்தாஸ் வாழ்வுதயம்' மூலம் தெரிவுசெய்து அவர்கள் பல்கலைக்கழகம் வரை பயில்வதற்கு உதவிவருகின்றோம். இதற்காக எமக்கென ஒரு உத்தியோகஸ்தரை நியமித்து எமது செயல்பாட்டினைச் செய்து வருகின்றோம். இங்குள்ள மன்னார் வாழ் மக்களின் தாராள உதவிகளே இத்தகைய எமது முயற்சிகளுக்கு முக்கிய காரணமாகும்.

இதுமட்டுமன்றி நாம் சமூக செயல்பாட்டிலும் அக்கறையுடன் ஈடுபட்டுவருகின்றோம். மன்னார் மாவட்டத்தில் இருந்து உதவிகள் கோரிவரும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து காலத்துக்குக்காலம் உதவிகள் செய்கின்றோம். தொடர்ந்து தொடர்புகளைப் பேணி வருகின்றோம். வேறு சில ஐரோப்பிய நாடுகளிலும் எம் மக்கள் அமைப்புக்கள் நடாத்தியும், உதவிகள் புரிந்தும் வருவதால் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி இன்னும் கூடியமுறையில் உதவிகளை, அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிகள் எடுத்துவருகின்றோம்.

இங்குள்ள எம் மக்களை மென்மேலும் ஒன்றுகூட்டும் முகமாகவும், எமது இந்த அமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையிலும், இன்னும் கூடிய உதவிகளைப் புரியும் வகையிலும் எதிர்வரும் 2013ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் பெரிய அளவில் ஒரு ஒன்றுகூடலை நடாத்தி ஒரு 'சிறப்பு மலரையும்' வெளியீடு செய்ய உத்தேசித்துள்ளோம். இதற்காக உங்கள் அனைவரது அன்பான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். எம்மோடு சேர்ந்து இயங்க விரும்பும் நல் உள்ளங்களை அன்போடு வரவேற்கின்றோம்.

இதைக் காணும் மக்கள் (பிரான்ஸ்) 00330954832163 / 0146773895 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை அறிந்துகொள்ளலாம்.

தகவல்:- என். எம். ஜெயரட்னம், பிரான்ஸ்.

### மடு தியான இல்லத்தில் நடைபெற்ற

# 57வது தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றுகூடல்

57வது தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றுகூடலானது மடு தியான இல்லத்தில் கார்த்திகை மாதம் 9ம் திகதி வெள்ளி மாலை 4.30 மணி தொடக்கம் 11ம் திகதி ஞாயிறு மதியம் வரை இடம்பெற்றது. இலங்கையில் உள்ள சகல மறை மாவட்டங்களிலும் இருந்து ஏறத்தாள 148 கத்தோலிக்க இளைஞர் யுவதிகள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

தொடக்க நிகழ்வின்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

சிங்கள, தமிழ் மொழி பேசுகின்ற கத்தோலிக்க இளைஞர்கள், அந்தந்த மறைமாவட்ட இளைஞர் இயக்குனர்கள் கலந்துகொண்ட இந்த அரிய சந்தர்ப்பத்தில் எமது தாயகப்பிரதேசத்தில் தமிழ் கத்தோலிக்க இளைஞர் யுவதிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், சவால்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்விற்கு வளவாளர்களாக வந்திருந்த அருட்பணி. எஸ். ஜெயபாலன் குரூஸ், திருவாளர் வரப்பிரகாசம் இவர்களின் நெறியாளுகையில் 'இடப்பெயர்வும், மீளக்குடியமர்த்தலும்' என்ற பின்புலத்தில் மனித உரிமைகள் தொடர்பாக கருத்தமர்வும். களச்சந்திப்பும் (இடம்பெயர்ந்தோரின் வீடுகள் தரிசிக்கப்பட்டது) இடம்பெற்றது.

அருட்பணி. இரவிச்சந்திரன் (யாழ்ப்பாணம் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர்) தமது கருத்துப் பகிர்தலில் போருக்கு பின்னரான இராணுவ நில அபகரிப்பு பற்றியும் தமிழர்களின் பொருளாதாரம் படிப்படியாக திட்டமிட்டு நசுக்கப்படுகின்ற தன்மையையும் அரச பயங்கரவாதத்தையும் சிங்களக் குடியேற்றங்கள் ஊடாக தமிழர் தாயகப்பிரதேசம் கபடத்தனமாக அபகரிக்கப்படுவதையும் விலாவாரியாக விளங்கப்படுத்தினார். இதுவரை காலமும் இதைப்பற்றி எதுவும் அறிந்திராத பல சிங்கள இளைஞர்கள் இதனால் தெளிவுபெற்றனர். இன்னும் சில சிங்கள இளைஞர்களால் இப்படியான நிகழ்ச்சி நிரல் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாக இருந்தது.


இருந்தபொழுதிலும் மன்னார் ஆயர் அவர்களின் உரையில் கத்தோலிக்க இளைஞர்கள் இளைஞன் இயேசுவைப்போல நீதிக்காக குரல் கொடுப்பவராகவும், அடக்கி ஒடுக்கப்படுகின்ற மக்கள்பால் இரக்கமும் ஈடுபாடும் கொண்டு விடுதலைக்காக உழைக்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். ஆயரின் இந்த உரையானது எல்லா இளைஞர்களையும் உண்மையிலேயே சிந்திக்கவும் செயல்படவும் தூண்டியிருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

மன்னார் மறைமாவட்ட இளையோர் பணி மைய இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ் அவர்களின் முயற்சியில், இளையோர்களின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்ச்சி சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்விற்கு ஒத்தாசையும் உதவியும் அளித்த அனைவருக்கும் செபங்களோடு கூடிய நன்றிகளை மன்னார் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் தெரிவித்துநிற்கின்றது.

கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்,
மன்னார் மறைமாவட்டம்.















### வாழ்வில் அமைதியும் ஆறுதலும் இழந்த

### முதியவர்களுக்கோர் நற்செய்தி!

## மருங்கோடி முதியோர் ஓய்வகம் உங்களை அழைக்கின்றது!

மருங்கோடி முதியோர் ஓய்வகம் மன்னார் - சங்குப்பிட்டி பாதையில், மன்னாரில் இருந்து ஏறத்தாழ 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பள்ளமடு என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது.

இது மன்னார் மறை மாவட்ட ஆயர் அவர்களின் அனுசரணையுடன் அருட்பணியாளர்கள் ஏ. எவ். எக்ஸ். ஜெயசேகரம் மற்றும் ஜே. பி. தேவராஜா ஆகியோரின் தூர நோக்குச் சிந்தனையுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மருங்கோடி என்பது "சுற்றத்தில் இருந்து விடுபட்டவர்கள்" என்பது பொருள். அதாவது எமது நடைமுறைப் பேச்சு வழக்கில் கூறுவதாயின் யாரும் இல்லாதவர்கள், உதவி அற்றவர்கள் எனக் கூறலாம். ஆனால் "நான் உங்களோடு இருக்கின்றேன்" என்ற யேசுவின் இறைவார்த்தைக்கு அமைவாக இந்த இல்லம் அமைந்துள்ளது.

**இந்த இல்லத்தின் செயற்பாடுகள்**

முதியோர் தம் வாழ்வில் ஏற்படும் சவால்களை தாங்கிக்கொள்ள மாட்டார்கள். தம் குடும்ப உறவுகளோடு ஏற்படுகின்ற சிறு சிறு பிரச்சினைகளால் விரக்தியடைந்த நிலையில் இருப்பார்கள். சில விபரீதமான முடிவுகளை மேற்கொள்ளத் துணிவார்கள். எனவே அன்பும், அமைதியும் இழந்து விரக்தி நிலையில் வாழுகின்ற முதியோர் ஆறுதலும் அமைதியும் பெற விரும்பின் இந்த இல்லத்தில் வந்து தங்கலாம்.

குறிப்பிட்ட முதியவர்களின் உறவுகளோடு இந்த இல்லப் பணியாளர்கள் கலந்துரையாடி அவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்துகொண்டு மீண்டும் இவர்கள் தம் உறவுகளோடு இணைந்து வாழ வழிவகுப்பார்கள்.

ஆனால் தனித்தவர்கள், உறவுகள் அற்றவர்கள் இவ் இல்லத்தில் எப்போதும் தங்கி வாழ முடியும். அவர்களின் அடிப்டைத் தேவைகள் அனைத்தையும் இவ் இல்லம் பொறுப்பேற்றுக் கவனிக்கும். இதனால் முதியவர்கள் தம் முதுமையிலும் கூட்டுறவுடன் மகிழ்ச்சியாக காலம் கழிக்க முடியும். இவ் இல்லம் பற்றிய மேலதிக விபரங்களை அறிய விரும்பியவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

**மருங்கோடி முதியோர் ஓய்வகம், பள்ளமடு, விடத்தல்தீவு.**
தொலைபேசி இல. 0717565324

# அமலமரி மறைபரப்பு அர்ப்பண சபை – OMMI



"அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு"

### இறை பணியில் ஆர்வம் கொண்ட இளம் தங்கையரே!

**மக்களோடு மக்களாக மக்களில் ஒருவராக வாழ்ந்துகோண்டே**
**எங்கள் சபையில் இணைந்து இறைபணி ஆற்றி வாரீர்!**

"தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கே மானிட மகன் வந்தார்" – (மத் 20:28)

நவீன உலகில் சவால்களுடன் நன்றே செய்திட அதை இன்றே செய்திட, துடிப்போடு செயல்பட்டு வெற்றியின் படிகளை நோக்கிப் பயணித்து வைரவிழாக் கண்டிடும் எமது அமலமரி மறைபரப்பு அர்ப்பண சபை (OMMI சபை) தற்போது பிரதேச ரீதியாகப் பிரிக்கப்பட்டு செயற்பட இருக்கின்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வரலாற்றில் நாம்:**

**நிறுவியவர்:-** அருட்பணி லூயி மரி பரான் OMI (கனடா)
**தோற்றம்:-** கனடாவில் :- 1952 இலங்கையில் :- 1966
பாப்பிறை அங்கீகாரம் :- 1984

கனடாவைத் தலைமை இடமாகக் கொண்டு கடந்த 60 ஆண்டுகளாக 20 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கும் எமது சபையானது இன்று தன்னிறைவு கண்டு தனித்தனிப் பிரதேசங்களாக (Region) இயங்க உள்ளது. இதற்கான திட்டமிடல் சிறப்புக்கருத்தமர்வு எம் சபையின் உபதலைவி சிமோன் (கனடா) அவர்களின் தலைமையில் கடந்த 25.10.2012 முதல் 30.10.2012 வரையான ஆறு நாட்கள் இந்தியாவின் புதுடில்லியில் அமைந்துள்ள சலேசிய மாகாணத் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்த அமர்வில் இலங்கை. இந்தியா, தாய்லாந்து, லாவோஸ், வியட்னாம், மொறீசியஸ், றொட்றிக் ஆகிய ஏழு நாடுகளைச் சேர்ந்த 48 சிறப்பு உறுப்பினர்கள் பங்குகொண்டு பயனடைந்தோம். இந்நிகழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவதோடு இறைமக்களாகிய நீங்களும் எங்கள் சபைக்காக செபியுங்கள் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

"அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு" எனவே இறைபணியில் ஆர்வம் கொண்ட இளம் தங்கையரே! மக்களோடு மக்களாக மக்களில் ஒருவராக வாழ்ந்துகொண்டே எங்கள் சபையில் இணைந்து. இறைபணி ஆற்றிட வாரீர்.

விரும்பியவர்களின் தொடர்புக்கு:-
Vocation Promoter OMMI, Louis Nursery, 31/25 Kurusukkovil Road, Muththamil Nagar, Mannar.
Tel : 023-2223288/0776660287



சபையின் உபதலைவி சிமோன் விளக்கேற்றுகின்றார்



ஏழு ஆசிய நாடுகளைச் சேர்ந்த சபையின் சகோதரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# இறையழைத்தல்களை உருவாக்குவதில் குடும்பங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது

**குருத்துவத்துக்கான எந்த ஓர் அழைப்பும் இறைவனின் கொடையாக இருந்தாலும், குடும்பங்கள், பங்குத்தளங்கள், கிறிஸ்தவச் சமூகங்கள், குருக்கள் ஆகியோர் கிறிஸ்தவ வாழ்வை இக்காலத்தில் வாழ்வதைப் பொறுத்தும் குருத்துவத்தின் வருங்காலம் அமைந்துள்ளது என்று வத்திக்கான் கத்தோலிக்கக் கல்வி பேராயமும், குருத்துவ அழைத்தலை ஊக்குவிக்கும் திருத்தந்தை பணியகமும் இணைந்து குருத்துவ திருப்பணிக்கு அழைத்தல்களை ஊக்குவிப்பதற்கான அருட்பணி வழிகாட்டி என்ற தலைப்பில் வெளியிட்ட 27 பக்க ஏடு கூறுகிறது.**

இன்றைய உலகில் இறையழைத்தல்களின் நிலை, இறையழைத்தல் மற்றும் குருத்துவத்தின் தனிப்பண்பு, குருத்துவ வாழ்வுக்கு இறையழைத்தல்களை ஊக்குவித்தல் என மூன்று முக்கிய தலைப்புக்களில் வெளிவந்துள்ள இவ் ஏட்டின் மேற்கில் உள்ள பாரம்பரிய கிறிஸ்தவ நாடுகளில் பரவிவரும் உலகப்போக்கான மனநிலை இளைஞர்கள் குருத்துவ அழைப்பைப் புறக்கணிக்க வைக்கிறது என்று கூறியுள்ளது.

இறையழைத்தல்கள் குறைவதற்கு பொது வாழ்க்கையில் இருந்து குருக்கள் மெல்ல மெல்ல ஒதுக்கப்படுவது, பொது வாழ்வில் குருக்கள் தங்களது வாழ்வின் இயல்பை இழந்து வருவது, பல இடங்களில் மணத்துறவு கேள்விக்கு உட்படுத்தப்படுவது, உலகப்போக்கு மனநிலை, திருஅவைக்குள்ளே மனத்துறவு குறித்த தவறான கருத்துக்கள் போன்ற பல காரணங்களைச் சுட்டிக்காட்டியுள்ளது இவ்வேடு.

# திருச்சபையில் பொதுநிலையினர் ஒத்துழைப்பாளர்கள் அல்ல உடன் பொறுப்பாளர்கள்

## திருத்தந்தை வலியுறுத்து

திரு அவையின் வாழ்விலும் செயலிலும் பொதுநிலையினர் அருட்பணியாளர்களின் ஒத்துழைப்பாளர்களாகக் கருதப்படாமல் உடன்பொறுப்பாளர்களாகக் கருதப்பட வேண்டுமென்று திருத்தந்தை கூறியுள்ளார்.

முதல் கிறிஸ்தவர்களின் பண்புகளை நினைவில் கொண்டு வாழவேண்டுமென அவர் பொதுநிலையினரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அருட்பணியாளர்களுக்கும் பொதுநிலையினருக்குமிடையே உள்ள உள்ளங்கலந்த உரையாடலின் மூலம் திரு அவைக்குப் பல நன்மைகள் உண்டாகும். அதனால் பொதுநிலையினரிடையே பொறுப்புணர்வு வலுப்பெற்று, ஆர்வம் வளர்ந்து அருட்பணியாளர்களின் பணியோடு அவர்களின் ஆற்றல் எளிதாக இணைந்து செயல்பட இயலும். அருட்பணியாளர்கள் பொதுநிலையினரின் அனுபவங்களால் பயன்பெற்று ஆன்மீக, உலகக் காரியங்களில் இன்னும் தெளிவான, ஏற்ற தீர்வுகளை எடுக்க முடியும் என்ற லூமென் ஜென்சியும் மறைக்கொள்கைத்திரட்டின் கூற்றை திருத்தந்தை சுட்டிக்காட்டியுள்ளார்.



## டுவீட்டரில் இணைந்தார் பரிசுத்த பாப்பரசர்

கத்தோலிக்க திருச்சபையின் செய்திகளைப் பரப்பும் நோக்குடன் பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பர் சமூக வலைத் தளங்களில் ஒன்றான டுவிட்டரில் இணைந்துள்ளார்.

"பாப்பரசரிடம் கேட்கப்பட்டிருக்கின்ற கேள்விகளுக்கான பதில்களை அவரே டிசெம்பர் 12 ஆம் திகதி முதல் "டுவிட்" தகவல்களாக வெளியிடத் தொடங்குவார். தன்னிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஆங்கிலத்திலும் அரபு உள்ளிட்ட ஏனைய 7 மொழிகளிலும் பாப்பரசர் பதில்களை அளிப்பார்." என்று வத்திக்கான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வத்திக்கான் கத்தோலிக்க திருச்சபை ஏற்கனவே சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டது.

உலகளாவிய ரீதியில் றோமன் கத்தோலிக்கத் தலங்களை இணைக்கின்ற இணைய பக்கமொன்றை வத்திக்கான் அண்மையில் தொடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வத்திக்கானின் கலைப் பாரம்பரியம்

வத்திக்கானின் கலைப் பாரம்பரியம் உலகிற்கு ஒருவகை உவமையாக இருக்கிறது. இதன் வழியாக உலகின் பல்வேறு மதங்கள் மற்றும் கலாச்சார மனிதர்களிடம் திருச்சபையால் பேச முடிகின்றது எனத் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறியுள்ளார்.

'கலையும் நம்பிக்கையும் - வத்திக்கானின் அழகு' என்ற தலைப்பில் வத்திக்கான் அருங்காட்சியகம் பற்றிய போலந்து திரைப்படத்தை இவ்வியாழன் மாலையில் பார்த்த பின்னர் திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

வத்திக்கான் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்துப் பொருட்களிலும் வெளிப்படும் கலைக்கும் நம்பிக்கைக்கும் இடையே இருக்கும் தொடர்பு குறித்து விளக்குவதற்கு எடுக்கப்பட்ட முதல் முயற்சியாக இத்திரைப்படம் இருப்பதுடன், நம்பிக்கை ஆண்டின் தொடக்கத்தில் இத்திரைப்படம் வெளிவருவது சிறப்பான மதிப்பைப் பெறுகின்றது என்றும் திருத்தந்தை கூறினார்.

## திருச்சபையில் ஏழு புதிய புனிதர்கள்

தூய்மையான வாழ்க்கை வாழ்பவர்கள் எல்லா மதங்களிலுமே தூயவர்கள், புனிதர்கள் என அழைக்கப்படுகின்றனர். கத்தோலிக்கத் திரு அவையில் பலர் புனிதர்கள் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு போற்றப்பட்டு வருகின்றனர். புனித அந்தோனியார், புனித சவேரியார், புனித அருளானந்தர், புனித அல்போன்சா, புனித தெரேசா, புனித யூதா ததேயு, புனித தோமையார் எனப் பல புனிதர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி நமக்குத் தெரியும்.

இந்தப் புனிதர்கள் பட்டியலில் இவ்வாண்டு அக்டோபர் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மேலும் ஏழு பேர் புதிதாக இணைக்கப்பட்டார்கள்.

இந்நாளன்று ஜாக்குவஸ் பெர்த்தியு (1838 -1896), பெத்ரோ கலுங்சாட் (1654-1672), ஜியோவான்னி படிஸ்டா பியாமார்த்தா (1841-1913), கார்மெல் சலேஸ் ஓய் பராங்குவேராஸ் (1848-1911), மேரியான் கோப் (1838- 1918), கட்டேரி டெகாக்விதா (1656-1680), அன்னா ஸ்கா'.பர் (1882-1925) ஆகிய எழுவரையும் புனிதர்கள் என அறிவிக்கிறார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.

வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் திருத்தந்தை நிகழ்த்தும் திருப்பலியில் இவர்கள் புனிதர்கள் என அறிவிக்கப்பட்டார்கள்.

# இலங்கையின் சனத்தொகையில் கத்தோலிக்கர் எத்தனை வீதம்?

## முழுவதையும் படித்துப் பாருங்கள்

2கோடியே 2இலட்சத்து 63 ஆயிரத்து 723 பேரைக் கொண்ட இலங்கை சனத்தொகையில் ஒரு கோடியே 4 இலட்சத்து 31 ஆயிரத்து 322 பேர் (51.5) வீதம் பெண்களென இலங்கை தொகை மதிப்புப் புள்ளி விபரவியல் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ஐ.வை.எல். பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு சனத்தொகைக்கணிப் பீட்டு நடவடிக்கையின் ஏனைய சனத்தொகைக் கணக்கெடுப்பின் ஒப்பீடுரீதியான அறிக்கையை வெளியிட மேலும் சில காலம் செல்லுமெனவும் அவர் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு சனத்தொகை கணிப்பீட்டின் இரண்டாம் கட்ட அறிக்கை அண்மையில் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, இலங்கையின் சனத்தொகை 2 கோடியே 2 இலட்சத்து 63 ஆயிரத்து 723 பேர் ஆகும். இதில் 48.5 சதவீதமான ஆண்களும் (9,832,401) 51.5 சதவீதமான பெண்களும் (10,431,322) அடங்குகின்றனர். அத்துடன் இலங்கை சனத்தொகையில் 15 வயதுக்கு குறைவானோர் (5,2228,927) பேரும் 15-59 வயதுக்கு இடைப்பட்டவர்கள் 12,566,467 பேரும் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் 2,468,329 பேரும் அடங்குகின்றனர்.

இனரீதியான தொகையில், 74.9 சதவீதமான சிங்களவர்களும் (15,173,820), 11.2 சதவீதமான இலங்கைத் தமிழர்களும் (2,270,924), 4.2 சதவீதமான இந்தியத்தமிழர்களும் (8,421,323), 9.2 சதவீதமான இலங்கை முஸ்லிம்களும் (1,869,820) உள்ளனர். அத்துடன் 0.2 சதவீதமாக பறங்கியரும் (37,061), 0.2 வீதமான மலே இனத்தவர்களும் (40,189) வசிக்கின்றனர்.

மதரீதியான சனத்தொகை மதிப்பீட்டினை நோக்கும்போது இலங்கையில் உள்ள மக்களில் 70.2 சதவீதமானோர் பௌத்த சமயத்தினையும் (1,42,221,844), 12.6 சதவீதமானோர் இந்து சமயத்தினையும் (2,554,606), 9.7 சதவீதமானோர் இஸ்லாம் மதத்தினையும் (1,967,227), 6.1 சதவீதமான ரோமன் கத்தோலிக்கத்தையும் (1,237,038), 1.3 சதவீதமானோர் ஏனைய கிறிஸ்தவ மத பிரிவுகளையும் (2,72,568) பின்பற்றுவதாக இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மன்னாரில் கத்தோலிக்கர் எத்தனை பேர்?

### வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் ரீதியாக புள்ளிவிபரத் திணைக்களம் தகவல்

வடமாகாணத்தில் 7 இலட்சம் இந்துக்களும், 2 இலட்சம் கிறிஸ்தவர்களும், 34 ஆயிரம் இஸ்லாமியர்களும் தற்போது வசிக்கின்றனர் என்று புள்ளி விவரத் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: யாழ். மாவட்டத்தில் 4 இலட்சத்து 83 ஆயிரத்து தொளாயிரம் இந்துக்களும், மன்னார் மாவட்டத்தில் 23 ஆயிரத்து 464 இந்துக்களும், வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 286 இந்துக்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 69 ஆயிரத்து 628 இந்துக்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 93 ஆயிரத்து 84 இந்துக்களுமாக வட மாகாணத்தில் 7 லட்சத்து 89 ஆயிரத்து 362 இந்துக்கள் வாழ்கின்றனர்.

றோமன் கத்தோலிக்க மதத்தை யாழ். மாவட்டத்தில் 75 ஆயிரத்து 33 கிறிஸ்தவர்களும், மன்னார் மாவட்டத்தில் 52 ஆயிரத்து 230 கிறிஸ்தவர்களும், வவுனியா மாவட்டத்தில் 14 ஆயிரத்து 857 கிறிஸ்தவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 ஆயிரத்து 756 கிறிஸ்தவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 11 ஆயிரத்து 973 கிறிஸ்தவர்களுமாக ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 849 கிறிஸ்தவர்கள் பின்பற்றுகின்றனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# அருளாளர் தேவசகாயம்பிள்ளையின் வீர வாழ்க்கை

தமிழகத்தின் கோட்டாறு மறைமாவட்டத்தில் 1712ம் ஆண்டு முதல் 1752ம் ஆண்டு வரை வாழ்ந்தவர் நீலகண்டபிள்ளை. இவர் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவின் நீதிமன்றத்தில் அதிகாரியாக பணியாற்றியவர். இந்துவாகிய இவர் டச்சு கப்பற்படைத் தளபதி யுஸ்டாக்கியஸ் டி லான்னாய் என்பவரின் தூண்டுதலால் கத்தோலிக்கத்தை தழுவினார். 1745ம் ஆண்டு திருமுழுக்குப் பெற்று தேவசாயம் என்ற பெயரை ஏற்றார்.

அவரது மனைவியும் மனம் மாறி ஞானப்பூ அம்மாள் என்ற பெயரை ஏற்றார். நீலகண்டப்பிள்ளை கிறிஸ்தவரான பின்னர் மற்றவர்களும் திருமுழுக்குப்பெற தூண்டினார். 'எல்லாச் சாதியினரோடும் சமூகத்தின் எல்லாத் தரப்பினரோடும் எவ்வித வேறுபாடும் காட்டாமல் நன்றாக பழகி வந்தார். இதனால், பலரது வெறுப்புக்கு உள்ளானார். அரசருக்கும் இந்து தெய்வங்களுக்கும் இவர் அவமரியாதை செய்கிறார் எனக் குற்றம் சாட்டப்பட்டார். இதனால் 1749ம் ஆண்டு பெப்ரவரி 23ம் திகதி திருவிதாங்கூர் மன்னரின் ஆணைப்படி கைது செய்யப்பட்டு, மூன்று ஆண்டுகள் ஒவ்வொரு ஊராக இழுத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். கிறிஸ்தவத்துக்கு மதம் மாறினால் என்ன நடக்கும் என்பதை உணர்த்தி, மற்ற மக்களை எச்சரிக்கவே இப்படி செய்ததாக அதிகாரிகள் கூறினர். இறுதியில் ஆரல்வாய்மொழி என்ற ஊரில் பல கொடிய சித்திரவதைகளுக்கு உள்ளாகி 1752ம் ஆண்டு ஜனவரி 14 அல்லது 15ம் திகதியன்று படைவீரர்களால் 5 கனத்த ஈயக் குண்டுகளால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு பின்னர் ஒருநாள் அந்த இடத்துக்கு அருகில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவன் ஒருவன் அங்கிருந்த பாறையைத் தட்டியவுடன் அது மணி அடித்தாற் போன்று கேட்டது. இந்த அதிசயத்தை கேட்ட ஊர் மக்கள் அவ்விடத்திற்கு வந்தபோது, அதற்கருகில் மறைசாட்சி தேவசகாயத்தின் சுடப்பட்ட உடலைக் கண்டனர். பின்னர் அதை எடுத்து நாகர்கோவிலிலுள்ள கோட்டாறு மறைமாவட்ட பேராலயமான புனித பிரான்சீஸ் சவேரியார் பேராலயத்தில் அடக்கம் செய்தனர். இவர் அடக்கம் செய்யப்பட்ட நாள் முதல், மதம், இனம், மொழி என்ற பாகுபாடின்றி ஆயிரகணக்கான மக்கள் இவரது கல்லறையை தினமும் தரிசித்து வருகின்றனர். பல புதுமைகளும் நடைபெற்று வருகின்றன.

இறையடியார் தேவசகாயம் வருகின்ற டிசம்பர் 2 அன்று அருளாளர் என அறிவிக்கப்படவுள்ளார். புனிதர் நிலைக்கு உயர்த்தும் வத்திக்கான் பேராயத்தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ இந்த பெருவிழா திருப்பலியை நிகழ்த்துவார்.

மறைசாட்சி இறையடியார் தேவசகாயம் அவர்களின் வாழ்க்கை குறித்து வத்திக்கானிலிருந்து வெளிவரும் 'லாசர்வெத்தோர் ரொமானா' என்ற நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கர்தினால் அமாத்தோ தேவசகாயத்தின் வாழ்க்கை உண்மையிலேயே அசாதாரணமானது. இந்திய திருஅவை இக்காலத்தில் அடக்குமுறைகளுக்கு உள்ளாகி வருவதால், தேவசகாயம் இந்தியாவுக்கு மாபெரும் வியத்தகு சான்றாகத் திகழ்கிறார் என்று குறிப்பிட்டார்.

இந்தியாவில் பிறந்த ஒருவர் கிறிஸ்தவ நம்பிக்கைக்காக கொல்லப்பட்டு அருளாளர் நிலைக்கு உயர்த்தப்படுவது இதுவே முதல்முறையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறை மாவட்டத்தில் சமரசம், மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான அக்கறை தொடர்பாக

# மன்னார் ஆயர் ஜனாதிபதிக்கு வழங்கிய அறிக்கை

தமிழ் மொழியாக்கம் – திரு. ஆரோக்கியம் குரூஸ், உதவிக் கல்விப் பணிப்பாளர், மடு வலயம், (வங்காலை)

மன்னார் மறைமாவட்டத்தில் காணப்படும் ஒப்புரவு, மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஜனாதிபதி மகிந்த இராஜபக்ச அவர்களுக்கு நீண்ட அறிக்கையொன்றை கையளித்துள்ளார். கடந்த செப்ரம்பர் மாதம் 13ஆம் திகதி கொழும்பில் உள்ள பேராயர் இல்லத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரிடம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டது. ஜனாதிபதியின் சார்பில் இந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்ட அரச தரப்பினர் இதில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தனர். 11 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் 16 விடயங்கள் விரிவாக சுட்டிக்காட்டப்பட்டு ஒவ்வொரு விடயம் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கு உதவியாக ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. - ஆசிரியர்



### (சென்ற இதழ் தொடர்ச்சி)

### 11. காணி விடயங்கள் : அரச மற்றும் தனியார் நிலம் இராணுவத்தினரால் தொடர்ந்தும் கையகப்படுத்தப்படுதல்

☐ இராணுவத்தினரும், பொலிசாரும் அரச மற்றும் தனியார் நிலத்தை சட்டத்திற்கு புறம்பாக தொடர்ந்தும் கையகப்படுத்தி வருகின்றனர். சிவில் நிருவாகமானது நடப்பது என்னவென்று அறியாவண்ணம் பெருமளவு காடுகள் அழிக்கப்படுகின்றன. மன்னார் மாவட்ட செயலகம் அறியாவண்ணம் முசலிப்பிரதேசத்தில் அமைந்துள்ள சிலாவத்துறை, முள்ளிக்குளம் வீதியில் பெருமளவு அரச நிலம் அமைச்சர் றிசாட் அவர்களின் வழிகாட்டலில் துப்பரவு செய்யப்படுகின்றது.

**ஆலோசனைகள்**

☐ முள்ளிக்குளம், வங்காலைப்பாடு, பள்ளிமுனை போன்ற இடங்களில் இராணுவம் மற்றும் பொலிசாரால் கையகப்படுத்தப்பட்டுள்ள எல்லா நிலமும் சட்ட ரீதியான மற்றும் வாடிக்கையான குடியிருப்பாளர்களுக்கு விட்டுக் கொடுக்கப்படல் வேண்டும். அநேகமான குடியிருப்பாளர்கள் பரம்பரை பரம்பரையாக அந்நிலங்களில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் அவர்களிடம் சட்டபூர்வமான ஆவணங்கள் இல்லாதிருப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

☐ இராணுவத்தினருக்கு இராணுவத் தேவைகளுக்காக நிலம் தேவைப்படுமாயின் சட்ட ரீதியான நடைமுறைகளைப் பின்பற்றி நிலத்தை பெற்றுக்கொள்ளலாம். ஆயினும் பயிர்ச்செய்கை மற்றும் பொது மக்கள் தேவைகள், தனி குடிமக்கள் போன்றவற்றிற்கே முன்னுரிமை வழங்கப்படல் வேண்டுமேயன்றி இராணுவத்தினர்க்கு மிகக் குறைந்த அளவு நிலமே ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். பாதுகாப்புப் படையினரால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் குடியேற்றங்களுக்காகவோ, உல்லாசப் பயண விடுதிகள் அமைப்பதற்காகவோ, பணம் சம்பாதிக்கும் முதலீடுகளுக்காகவோ ஒருபோதும் பயன்படுத்தப்படலாகாது.

☐ கிடைக்கத்தக்க அரச நிலத்தினை காருண்யமிக்கதும், நலனோம்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

☐ பெருமளவிலான அரச காணியை துப்பரவு செய்வது மாவட்ட செயலகத்தின் கட்டுப்பாட்டில் நடைபெற வேண்டும். அதற்கான காரணம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும்.

☐ அநேகமான காணி விடயங்கள் மற்றும் காணி தொடர்பான பிணக்குகளுடன் தொடர்புபடும் வண்ணம் சுதந்திரமான கட்டமைப்பு ஒன்று காணப்படல் வேண்டும்.

☐ மன்னார், விடத்தல்தீவு போன்ற இடங்களைச் சேர்ந்த சொந்த இடங்களுக்குத் திரும்பிய அனைத்து நிலமற்றவர்களுக்கும் தெளிவான உரிமைகோரலுடன் கூடியதாக நிலம் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். அவர்களுக்கு வீட்டுத்திட்டமும், வாழ்வாதாரமும் எவ்வித இன, மத, அரசியல் பிணைப்பு அடிப்படையிலான பூரண பாகுபாடு அற்ற வகையில் வழங்கப்படல் வேண்டும்.

☐ வடக்கு, கிழக்கில் உள்ள மாவட்டங்களின் குடித்தொகையில் மாற்றம் செய்தல், தேர்தல் தொகுதி சமமின்மையை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக தெற்கில் உள்ள சமூகங்களை வடக்கு, கிழக்கில் குடியேற்றுவதற்கென அரச காணிகளை பகிர்ந்தளிப்பதை அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. (யுத்தத்தின்போது இடம்பெயர்ந்தவர்கள் தமது பாரம்பரிய காணிகளை உரிமை கோருவதையோ, எந்த சமூகத்தை சேர்ந்தவர்களும் தனியார் நிலத்தை சொந்தம் கொண்டாடுவதையோ, வாங்குவதையோ இட்டு எமக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது)

### 12. உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கான மீள் குடியேற்றம்

☐ மன்னார், வவுனியா மாவட்டங்களில் ஏற்கனவே விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் இருந்து உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் மீளவும் தமது கிராமங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆயினும் 30 மாதங்களுக்கு மேலாக அவர்களில் அநேகமானவர்களுக்கு வீடமைப்பு, வாழ்வாதாரம் மற்றும் அடிப்படைத் தேவைகளில் மிக சொற்பமானவையே அரசிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. அவர்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள், கோவில்கள், மற்றும் நலன் விரும்பிகளிலேயே பெருமளவு தங்கி வாழ்பவர்களாக உள்ளனர். மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட 6 மாத கால நிவாரணப் பொருட்களில் அடங்கிய 12 கூரைத்தகடுகளின் கீழேயே அநேகமான குடும்பங்கள் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றன. 2007 ம் ஆண்டு இடம்பெயர்ந்த முள்ளிக்குளம் கிராம மக்கள் இதுவரை மீள் குடியேற்றப்படவில்லை. இக்கிராம மக்கள் யானைகளும், விசஜந்துக்களும் நிறைந்த தமது கிராமத்தின் எல்லைப் பிரதேசத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் நகர்ந்துள்ளனர். இம்மக்களை மீள்குடியமர்த்தும் விடயம் இதுவரை இழுபறி நிலையிலேயே உள்ளது.

**ஆலோசனைகள்**

☐ அரசாங்கமானது தேசிய வரவு செலவுத்திட்டத்தில் இராணுவ செலவினங்களை அதிகரிப்பதற்கு பதிலாக கணிசமான தொகையினை உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிக்காக குறிப்பாக அவர்களது வீடமைப்பிற்கென ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

☐ மீள் குடியேற்றத்தின் முன்னரேயே உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களது உடனடித் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன், முள்ளிக்குள கிராம மக்களைப் போன்று துப்பரவு செய்யப்படாத காடுகளில் மீள் குடியேற அவர்கள் கட்டாயப்படுத்தப்படக்கூடாது. முள்ளிக்குள கிராம மக்களது அபிலாசைகள் கவனத்தில் கொள்ளப்படுவதுடன், எவ்வித தாமதமும் இன்றி அவர்களது மீள் குடியேற்றம் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

☐ தேவைகள் மதிப்பீடுகள் மூலம் பயனாளிகள் அடையாளம் காணப்படல் வேண்டும்.

ஏற்கனவே உதவிகளைப் பெற்றுக்கொண்டவர்களைவிட இதுவரை உதவிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் அல்லது குறைந்தளவான உதவிகளை பெற்றுக்கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

☐ தீர்மானம் மேற்கொள்வதிலோ, பயனாளிகளினைத் தெரிவுசெய்வதிலோ அரசியல்வாதிகளோ அன்றேல் இராணுவத்தினரோ தலையிடுவதோ அல்லது செல்வாக்கு செலுத்துவதோ கூடாது. அரசியல்வாதிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளும்போது அந்த பிரதேசங்களினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகல அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகளுடனும் ஆலோசனை மேற்கொள்ள வேண்டும்.

☐ புதிதான நிரந்தர வீடொன்றினை நிர்மாணிப்பதற்கு குறைந்தது 750,000 ரூபா செலவிடப்படல் வேண்டும். கூடுதலாக செலவு செய்ய விரும்புகின்ற நன்கொடையாளர்கள் அவ்வாறு செய்வதற்கு சுதந்திரமாக அனுமதிக்கப்படல் வேண்டும்.

☐ உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுடன் பணியாற்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் எதுவித கட்டுப்பாடுகளுமின்றி அனுமதிக்கப்படல் வேண்டும்.

☐ யுத்தத்தின்போது தமது குடும்பச்சுமையை தாங்கியவர்களை இழந்து தவிக்கின்ற உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கும், அக்குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் கல்வி மற்றும் வருமானம் ஈட்டித்தருகின்ற செயற்றிட்டங்களை உள்ளடக்கிய விசேட உதவிகள் வழங்கப்படல் வேண்டும்.

☐ முற்றாக அழிக்கப்பட்டதும், பாரிய அளவிலான சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டதுமான வீடுகள் பற்றிய தரவுகளை உள்ளடக்கிய மொத்த வீட்டுத் தேவைகளுக்கு மாறாக இன்றுவரை கட்டப்பட்ட வீடுகளின் மொத்த எண்ணிக்கை, அதற்கான செலவினம் தொடர்பான ஆய்வொன்றினை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்,

☐ தமது வீடுகள் அழிக்கப்பட்ட உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களது மொத்த வீட்டுத் தேவைகளை நிறைவுசெய்கின்ற தெளிவான கொள்கையினையும், செயற்றிட்டத்தையும் பொதுமக்களுக்கு அரசாங்கம் அறியத்தர வேண்டும்.

### 13. மீன்பிடி

தெற்கில் உள்ள மீனவர்களுக்கு இல்லாத பாஸ் நடைமுறை எனும் கட்டுப்பாடு வடக்கில் உள்ள மீன்பிடியில் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இராணுவ மற்றும் அரசியல் தலையீடுகளினால் பாரம்பரிய மீன் பிடிக்கும் உரிமைகள் மற்றும் ஜீவாதாரம் மேலும் கட்டுப்படுத்தப்படுகின்றது. மீன்பிடிப்பதற்கான ஒழுங்குமுறையான பொறிமுறை அமைப்பில் அமைச்சர்கள் தலையிட முயற்சிப்பதுடன் இராணுவமும்கூட மீனவர்களது உடமைகளை கையகப்படுத்தியுள்ளது.

**ஆலோசனைகள்**

☐ எல்லா சமூகங்களினதும் பாரம்பரிய மீன்பிடிக்கும் உரிமைகள் மதிக்கப்படுவதுடன் யுத்தத்திற்கு முன்னர் அவர்களுக்கிருந்த மீன்பிடிப்பதற்கான உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்.

☐ மன்னார் பிரதேசத்தைச் சாராதவர்கள் இப்பிரதேசத்தில் மீன் பிடிப்பதற்கும் குறிப்பாகக் கடலட்டை, நண்டு, இறால், கணவாய், போன்றவற்றைப் பிடிப்பதற்கும் அனுமதிக்கப்படலாகாது.

☐ பதட்ட நிலைமைகள் காணப்படுகின்றபோது சிவில் அதிகார சபைகளும், நீதிமன்றமும் அரசியல்வாதிகள், இராணுவத்தினரது தலையீடுகளின்றி அவற்றை தணிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படல் வேண்டும்.

☐ வடபகுதி மீனவர்களுக்கு மட்டுமே மேலதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்படாமல் மீன்பிடி [illegible] ஒரேவித மீன்பிடி ஒழுங்கமைப்பு முறை பின்பற்றப்படல் வேண்டும்.

☐ முள்ளிக்குளம் கிராமத்தினுள் இராணுவம் நுழைந்தபோது அம்மக்கள் விட்டுச்சென்ற படகுகள், மீன்பிடிவலைகள், மற்றும் விடத்தல்தீவில் உள்ள மீனவரது வாடிகள் போன்ற மீனவர்களது உடமைகள் இராணுவத்தினரால் மீளக் கையளிக்கப்பட வேண்டும். இது சாத்தியமாகாதவிடத்து முழு அளவிலான நட்ட ஈடு வழங்கப்படல் வேண்டும்.

☐ பாஸ் வழங்குதல் உள்ளிட்ட மீன்பிடித் தொழிலை ஒழுங்கமைக்கின்ற செயற்பாடுகளில் அரசியல்வாதிகளும், இராணுவத்தினரும் தலையிடக்கூடாது.

### 14. கலாச்சார அதிகாரம் செலுத்துகை

எமது பிரதேசங்களில் பௌத்த மக்கள் வாழாதபோதும் புத்தர் சிலைகள், விகாரைகளை நிறுவுகின்ற வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. பெரும்பான்மை தமிழ் பேசுகின்ற மாவட்டங்களில் நடைபெறுகின்ற அரசாங்க நிகழ்வுகளில் சிங்கள மொழி பயன்படுத்தப்படுவதும், அரசாங்க அதிகாரிகள் சிங்கள மொழியையே பயன்படுத்துவதும் தொடந்துசெல்கிறது.

**ஆலோசனைகள்**

· பொலிஸ் நிலையங்கள் உள்ளிட்ட எல்லா அரசாங்க காரியாலயங்களிலும் எல்லாவித அலுவலக கடிதத் தொடர்பாடல்களும், செய்திப் பரிமாற்றங்களும் தமிழ் மொழியிலேயே நடைபெறவேண்டும். பௌத்த மக்கள் வாழாத பொது இடங்களில் புதிதாக புத்தர் சிலைகளையும், விகாரைகளையும் நிர்மாணித்தலாகாது.

### 15. பொருளாதாரத்தில் இராணுவத்தினரது தலையீடுகள்

தமது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் வர்த்தகர்கள், தொழிலாளர்கள், உள்ளூர் சிறுவிவசாயிகள் போன்றோரிடமிருந்து சந்தைகளைக் கைப்பற்றுதல், கடைகள் உணவகங்களினை நடத்துதல் ஊடாக உள்ளூர் பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் இராணுவத்தினரால் தடைசெய்யப்படுகின்றன.

மன்னாருக்கு வருகின்ற உல்லாசப் பயணிகளுக்கான இலாபம் தருகின்ற படகுச் சேவையினை கடற்படையினர் நடாத்துவதனூடாக உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் அல்லது உள்ளூர் வர்த்தகர்கள் அத்தகைய சேவையில் ஈடுபடுவதைத் தடுத்து நிற்கின்றனர்.

**ஆலோசனைகள**

இராணுவத்தினர் எல்லாவகையான பொருளாதார நடவடிக்கைகளினையும் நிறுத்தி உள்ளூர் மக்களும், உள்ளூர் அரச நிறுவனங்களும் அவற்றை நடாத்துவதற்கு அனுமதிக்க வேண்டும்.

குறிப்பாக இம்மாதம் நடைபெற்ற மடுக்கோவில் திருவிழாவின் போது கடைகளையும், உணவகங்களையும், நடாத்தியதுபோன்று இராணுவத்தினர் இனிமேல் முயற்சிக்கக்கூடாது.

### 16. இராணுவமயப்படுத்தலை தடுத்தலும். இயல்பு நிலைக்கு திரும்புதலும்

எமது பிரதேசங்களில் இராணுவத்தினரது பிரசன்னத்தைக் குறைப்பதும் அபிவிருத்தி, பொருளாதாரம், பொதுவாக சிவில் நிர்வாகம் போன்ற வாழ்வின் பல்வேறு அம்சங்களில் அவர்களது தலையீட்டை குறைப்பதுமே இயல்புநிலைக்கு வாழ்வு திரும்புவதை எடுத்துக்காட்டும் பிரதான குறிகாட்டி ஆகும்.

பெருமளவு எண்ணிக்கையிலான இராணுவ அதிகாரிகளது பிரசன்னமானது மக்களை அரசாங்கத்திடமிருந்து அந்நியப்படுத்துவதாக அமையும்.

**ஆலோசனைகள்**

இராணுவப்பணியாட்களது எண்ணிக்கை முடிந்தளவு குறைக்கப்படுவதோடு அவர்கள் அனைவரும் போர் வீரர் குடியிருப்புக்குள் எல்லைப்படுத்தப்படல் வேண்டும்.

நேரடியான இராணுவ நடவடிக்கையில் அன்றி வேறெந்த நடவடிக்கைகளிலும் இராணுவம் சம்பந்தப்படக்கூடாது.

2012ம் ஆண்டின் இறுதியளவில் சிவில் நிர்வாகம், அபிவிருத்தி பொருளாதாரம் மற்றும் அனைத்து இராணுவத்திற்கு புறம்பான நடவடிக்கைகளில் இருந்தும் இராணுவம் விலகிக்கொள்ளவேண்டும். அத்துடன் ஒட்டுமொத்த சிவில் நிர்வாகம் திரும்புவதற்கு பாதை சமைக்க வேண்டும்.

இவ்விடயங்களில் தங்களது மேலான கவனத்தைசெலுத்தி உரிய நடவடிக்கைகளினை மேற்கொள்வீர்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

எமது தாய்த்திருநாட்டிற்கு நீடித்த சமாதானத்தையும் உண்மையான இணக்கப்பாட்டினையும் கொண்டுவருவதற்கான தங்களது அர்ப்பணிப்பினை இறைவன் ஆசீர்வதிப்பாராக!

**தங்கள் உண்மையுள்ள, மன்னார் ஆயர்**

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்புப் பொழிவு

# கிறிஸ்மஸ் சிறப்புக் கட்டுரைகள்





## புனிதம் ஒன்று மனிதமானது

கி. அருளப்பு
தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளன்
விடத்தல்தீவு

எந்தவொரு சிறப்புக்கொடையையும் மனிதன் இறைவனிடமிருந்து பெறுவதற்கு முன் அவன் தயாரிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஓர் தயாரிப்பு இஸ்ராயேல் குலத்தில் பல நூற்றாண்டுகளாக இடம்பெற்று வந்தது. கடவுள் தனது இறைவாக்கினர் மூலமாக அவர்களைத் தயாரித்து வந்தார். மெசியாவின் வருகைக்காக அவர்கள் தயாரிக்கப்பட்டு வந்தார்கள்.

இன்று நாம் ஒவ்வொருவரும் அந்த மெசியாவின் இரண்டாம் வருகைக்காக தயாரிக்கப்பட்டு வருகின்றோம்.

மீட்பர் ஆனதால் அவர் யேசுவானார். அருள்பொழிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டதால் அவர் மெசியாவானார். எம்மோடு என்றும் தங்கி இருப்பதால் அவர் இம்மானுவேல் ஆனார். தாவீதின் வழிவந்ததால் தாவீதின் குமாரரானார். நம் ஒவ்வொருவரையும் அவர் அன்பு செய்வதால் நல்ல மேய்ப்பர் ஆனார். நம்முடைய பாவங்களை அவர் மன்னிப்பதால் கடவுளின் செம்மறியானார். அகில உலகை அவர் ஆண்டு நடத்துவதால் உலக அரசரானார். அந்த உலக இரட்சகரின் பிறப்பு நாளை இந்நாள்களில் நாம் நினைவுகூர்கின்றோம்.

வாழ்நாள் முழுவதும் எமக்குத் திருவருகைக்காலம்தான். அதை எதிர்பார்த்துக் காத்திருப்பதே எம் கிறிஸ்தவ வாழ்வு. மார்கழி பிறந்தால் மண் குளிரும். மரிமகன் பிறந்தால் மனம் குளிரும். இயேசு பிறப்பது மீட்புக்காக, அந்த மீட்பை அடைவோம் யாவருமே.

*உருவிலான் உருவாக! உலகிற்கு காருமகன் உதிப்பக்*
*கருவிலாக் கருத்தாங்கி கன்னித்தாய் ஆகினாளே?*

என்று பாடினார் வீரமாமுனிவர். அதாவது உருவம் இல்லாத கடவுள் மனுவுரு எடுக்க கருவுற இயலாத ஓர் பெண் கன்னியாகினாள். மனிதனின் முழுமை இறைவனின் மகிமை! மனிதனின் மகிழ்ச்சி இறைவனின் இதய நெகிழ்ச்சி! கடவுளைத் தேடும் மனிதனைக் கடவுளே தேடி வருகின்றார். எட்டாக்கனியென எட்டவைக்கப்பட்ட கடவுள், கிட்ட வந்து நலம் விசாரிக்க வருகிறார். தெய்வம் மண்ணில் கலந்தது, மானிடத்தில் கரைந்தது. படைப்புக்குள் சங்கமித்தது. புனிதமொன்று மனிதமானது. கடவுளின் மகன் யேசு காலங்களுக்கு உட்பட்டவராக தம்மையே கையளிக்கின்றார். இயேசு என்ற மனிதத்தன்மை நமக்குக் கூறுவது என்ன? "நான் உங்களுடைய வாழ்வில் பிறக்க வேண்டும். என் எளிமையான கொட்டில் நீங்கள்தான். என் ஒளிமிக்க பிரகாசம் உங்களில் வீச வேண்டும். இந்த உலகில் நீங்கள் எனக்கு உயிர் உள்ள சாட்சியாக வாழவேண்டும் என்பதற்காகத்தான் உங்களை நான் பிறப்பித்தேன்! இதுதான் எனது பிறந்தநாளில் நான் உங்களுக்குத் தரும் செய்தி. நல்லதையே நினையுங்கள், நல்லதையே செய்யுங்கள். என் பிறப்பானது உங்களை என் மீட்புப்பணிக்கு அழைக்கின்றது."

கிறிஸ்மஸ் வந்தாலே காலநிலைகளில் மாற்றம். சூழ்நிலைகளில் மாற்றம்! எம் ஒவ்வொருவரின் மன நிலைகளிலும் மாற்றம்! அதாவது இன மத மொழி சமய வேறுபாடின்றி நம் எல்லோருக்கும் ஓர் சந்தோசமான மகிழ்ச்சியான நாளே இந்தக் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்.

இது கிறிஸ்மஸ் சந்தோசமா? அன்றேல் கிறிஸ்து பிறப்பு சந்தோசமா? கிறிஸ்மஸ் சந்தோசமென்றால் சீசன் முடிந்தவுடன் நின்றுவிடும். ஆனால் கிறிஸ்து பிறப்பு சந்தோசம் அப்படிப்பட்ட ஒன்று அல்ல. அது அந்த உன்னதமானவரோடு நாம் கொண்டுள்ள உறவை மற்றவர்களோடு சேர்ந்து பகிர்ந்துகொள்வதில்தான் உள்ளது.

அப்படிப்பட்ட ஓர் பகிர்வைத்தான் அன்று அந்த மேய்பர்கள் செய்தார்கள். ஆண்டவரின் தூதர் அவர்கள்முன் தோன்றி "அஞ்சாதீர் இதோ எல்லா மக்களுக்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார்." (லூக். 2:10-11) அதைத்தான் அந்த மேய்பர்கள் தங்களைச் சுற்றியுள்ள அக்கம்பக்கத்தாருக்கு அறிவித்தார்கள். அப்படிப்பட்ட ஓர் சான்று வாழ்வு வாழத்தான் நாங்கள் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டுள்ளோம். "வாக்கு மனிதரானார், நம்மிடையே குடிகொண்டார்."

பொய்மையில் இருந்து மெய்மைக்கும், சாவில் இருந்து வாழ்விற்கும், இருளில் இருந்து ஒளிக்கும் இட்டுச்செல்ல வந்தவரே ஆண்டவர் யேசு.

*அயராச்சுகமும் மதுவும் கீதமும் ஆயிரம் இன்பங்கள்! இதை - அடைவதுதானே பெருமையென்றெண்ணும் மானிட உள்ளங்கள்! வயிறே பெரிதாய் வாழ்ந்திடும் வாழ்வில் ஓடிடும் எண்ணங்கள்! இது வாழ்வல்ல என்பது யேசுவின் வார்த்தை கூறிடும் சின்னங்கள்!* (யேசு காவியம்)

## கிறிஸ்து விரும்பும் கிறிஸ்து பிறப்பு

அருட்சகோதரர் வே. றஞ்சன் சேவியர்,
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

ஒளியும் இருளும், இன்பமும் துன்பமும், போரும் அமைதியும், வறுமையும் செல்வமும், வாழ்வும் தாழ்வும் கலந்து நிறைந்ததுதான் இந்த உலகம். இதில் இனிமையை தேர்ந்தெடுத்துக்கொள்வதுதான் அறிவுடமை. முள் இருக்கின்றதே என்று வெறுத்து ஒதுக்குவது முட்டாள்தனம். இனிய மலர் இருக்கின்றதே என்று எண்ணி இணைந்து வாழ்வதுதான் புத்திசாலித்தனம்.

இன்று நேற்றல்ல, பல்லாண்டு காலமாக கிறிஸ்து பிறப்பு விழாவை பரம்பரைக் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் கோலாகலமாக கொண்டாடி வருகின்றோம். பல வேளைகளில் நம்முடைய கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டங்கள் தண்ணீரில் மூழ்கிய பூச்செடியாய் தத்தளித்தும் இருக்கின்றது என்றால் அதனை யாராலும் மறுக்க முடியாது. கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டம் இன்று அர்த்தமற்ற அகராதியாக காட்சியளிப்பது நம்முடைய நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய்த் தைக்கின்ற கசப்பான நிஜமாகும். இன்றைய நம்முடைய கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டங்கள் விழா நாயகனாகிய கிறிஸ்துவை இரும்பு விலங்குகளால் பூட்டிவிட்டு சாவியை தொலைத்துவிட்ட கதையாகவே மாறியிருக்கின்றது. பிறப்பின் நாயகனை நாம் மறந்துவிட்டு, நாங்கள் நாயகர்களாக மாற முயல்வது தெய்வமின்றி தேர் இழுத்த கதையாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இன்றைய சூழலில் கிறிஸ்துபிரானின் அமுத மொழிகள் வாழப்படாமல் வெறுமனே நாம் விழாக்கோலம் பூண்டுகொண்டு விழலுக்கு இறைத்த நீராகவே கருதப்படும் இன்றைய சூழலில் கிறிஸ்துவின் கிரீட மொழிகள் வாழப்படுகின்றனவா? இல்லை....!

தீர்ப்பிடுதலுக்கு தீர்ப்புச் சொன்னார் இயேசு. ஆனால் இன்று தீர்ப்பிடாமலேயே தீர்ப்பிடுதலுக்கு தண்டனை விமோசனம் பாருங்கள்..... உயிர்களைப் பாதுகாக்க பரிந்து பேசினார் இயேசு. ஆனால் இன்று பாவத்தின் இருப்பிடமாய் மனிதர் மாறும் மிருக வேலையைப் பாருங்கள்... தாய், தந்தையை மதிக்க புத்திமதி சொன்னார் இயேசு. ஆனால் இன்று மதிப்பிற்காய் மிதிக்கப்படும் அன்னையரின் அவலம் பாருங்கள்.... சமாதானத்தை சாதனை செய்ய வந்தார் இயேசு. ஆனால் இன்று சவக்குழிகளில் சாதிக்கப்படும் சமாதானத்தின் சங்கடம் பாருங்கள்.... மண உறவிற்கு "திரு" என மதிப்பளித்தார் இயேசு. ஆனால் இன்று காமுகர்களால் கற்பழிக்கப்பட்ட கன்னியர்களின் கருமாதி பாருங்கள்.... விதவைகளுக்கு விமோசனம் செய்தார் இயேசு. ஆனால் இன்று விபசாரத்திற்காய் விதவைகளாக்கப்படும் அரிவையரின் அவலம் பாருங்கள்...

கிறிஸ்துவின் போதனைகள் நம்முடைய சூழலில் போசாக்கின்றிப் போனால் நம்முடைய கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டங்கள் எப்படி கிறிஸ்து விரும்புவதாய் அமையும்? இன்றைய நம்முடைய பிரதேசங்களில் யுத்த காவியம் பெயரளவில் முற்றுப்பெற்றுவிட்டது. இன்னமும் நம்மால் பிரசவிக்கப்படாத சமாதானக் குழந்தையை நம்முடைய சூழலில், சிறப்பாக நமது குடும்பங்களில் நாம் பிரசவிக்கும்போது, இந்த ஆண்டில் நாம் கொண்டாடக்கூடிய கிறிஸ்து பிறப்பு விழா ஒரு அர்த்தம் சுமந்த அத்திவாரமாகும் என்பதில் சந்தேகமில்லை.

மூடப்பட்ட நமது முன்னோர்களின் விசுவாசக் கதவை அகலத் திறந்துவிட முயன்று பார்ப்போம். வீடுகளற்ற உன்னுடைய சோதரர்கள் சோகத்தில் ஆழ்ந்திருக்கையில் நீ சோபித்திருந்தால் கிறிஸ்து எப்படிப் பிறப்பார்? உன்னுடைய வீட்டில்? உணவின்றி உன் உறவுகளின் உதடுகள் உஷ்ணமடைகையில் உன் புத்தாடைக் குதூகலத்தில் எப்படி பிறப்பார் கிறிஸ்து? உன் மனக் கண்களை விசாலமாக்கு. பூமியின் ஒவ்வொரு கோணத்தையும் புதிதாகப் பார். புதியதொரு உலகம் படைக்க முயற்சி செய். உன்னுடைய மனம் பெத்லேகேமாக மாறுவதை நீ உணர்வாய். உன் செவிகளில் வானதூதரின் வாழ்த்து மொழி கேட்பதை நீ அனுபவிப்பாய். அப்போது கோவில் போன்று காட்சிதரும் உன்னுடைய வீட்டில்.... "இதோ உங்களுக்காக ஒரு மீட்பர் ஊரில் பிறந்திருக்கின்றார்" (லூக்கா 2:11) என்ற வானோரின் நற்செய்தி அறிவிக்கப்படும். இதுவே கிறிஸ்து விரும்பும் கிறிஸ்து பிறப்பு. இதுவே உண்மையான கிறிஸ்து பிறப்பு.

எனவே புறப்படுவோம்! கிறிஸ்துவை நம் பிளவுபட்ட உள்ளங்களில் பிரசவிக்க புறப்படுவோம். வருடாந்தம் வழமை மாறாமல் நாம் வெற்றுச் சடங்காக அனுசரிக்கும் கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு புத்துடலும், புது உயிரும் கொடுப்போம். அப்பொழுது நம்முடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் நம் பெருமான் இயேசு இங்கிதமாய் அவதரிப்பார்.

உங்கள் அனைவருக்கும் அமைதியும் அருளும் நிறைந்த கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.




## கிறிஸ்து இல்லாமல் கிறிஸ்மஸ் இல்லை

அருட்சகோதரர் ராஜ் (கெ. இளங்கோ)
டொன் பொஸ்கோ, முருங்கன்

மார்கழி மாதம் வந்துவிட்டாலே எல்லோருக்கும் கிறிஸ்மஸ் நினைப்புத்தான். கடைகளில் பலூன்கள், அலங்காரப்பொருட்கள், அலங்கார மின்விளக்குகள், நத்தார் தாத்தா முகமூடிகள் என பல்வேறு பொருட்கள் குவிந்து விடும். பங்குகளில் கறோல் பாடல்கள் பழக்கப்படும். பாடசாலைகளில் ஒளி விழாக்கள் என பல குதூகலங்கள்.

ஆனால் பெரும்பாலும் நாம் செய்கின்ற மிகப்பெரிய தவறு கிறிஸ்மஸ் நிகழ்வில் கிறிஸ்துவுக்கு முக்கிய இடத்தினை கொடுக்க மறந்துவிடுகின்றோம். கிறிஸ்மஸ் விழாவின் கதாநாயகனாகிய கிறீஸ்துவை நாம் ஓரம் கட்டி விடுகின்றோம். இந்த வேளையில் ஒரு சிறிய கற்பனைக் கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. அந்தக் கதையை உங்களுடன் பகிர்ந்துகொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

இயேசுக் கிறிஸ்து மனித அவதாரம் எடுத்து மண்ணிற்கு வந்து அவர் மீண்டும் விண்ணகத்திற்குபோன பின் இயேசு அவருடைய தந்தையிடம் கேட்டார்,

"அப்பா நான் மண்ணகத்திற்கு சென்று வர எனக்கு அனுமதி தாருங்கள்"

அதற்கு தந்தை (கடவுள்), "ஏன் மகனே அவசரம்? நீ மண்ணுலகிற்கு சென்று வர அப்படி என்ன அவசரம்? மக்களுக்கு போதித்தது மட்டுமன்றி அவர்களுக்காக உன் உயிரையே பலியாக்கி மனுக்குலத்திற்கு மீட்பு அளித்து விட்டுத்தானே வந்தாய?"

"இல்லை தந்தையே நான் 2000 ஆண்டுகளுக்கு முன் மண்ணுலகத்தில் மனிதனாக அவதாரம் எடுத்த கிறிஸ்மஸ் பெருவிழாவை எவ்வாறு நம் மக்கள் கொண்டாடுகிறார்கள் என அறிய வேண்டும்!"

தந்தையும் மகன் கிறிஸ்துவுக்கு அனுமதி வழங்கினார்.

இப்போது நவீன காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இயேசு முதல் உடுத்திய ஆடையை உடுத்த முடியாது. பைத்தியம் என்பார்கள். எனவே இயேசு ஒரு நவீன உலக மனிதனைப்போல் ஒரு டெனீம் போட்டு, கொலைவெறி ரீசேட் அணிந்து ரை, சப்பாத்து எல்லாம் போட்டுக்கொண்டு விஜய் மாதிரி நியூயோர்க் நகரம் நோக்கி 24 ஆம் திகதி போகிறார்.

நியூயோர்க் நகரத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் பல பெறுமதியான பரிசுப் பொருட்கள் பரிமாறப்படுகின்றன. சிறியவர் முதல் பெரியவர் வரை யாவரும் பரிசுகளை பரிமாறிக் கொள்கின்றார்கள். இயேசு அங்கிருந்த ஒருவரிடம் கேட்டார் "இன்று என்ன விசேடம் பெரியவரே?" என்று கேட்டார்.

"என்ன தம்பி உலகம் தெரியாத ஆள் மாதிரி பேசுறீங்க. இன்று கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடுகின்றோம்."

"பரிசுகளை ஒருவருக்கொருவர் பரிமாறுவதுதான் கிறிஸ்மஸ் விழாவா?" என்று மனதில் நினைத்தவராய் இயேசு வேறு இடம் நோக்கி தனது பயணத்தை மேற்கொண்டார்.

இயேசு இப்போது இலண்டன் மாநகரத்தில் உள்ள ஒரு இடத்திற்குச் சென்றார். அந்த மண்டபம் முழுவதும் ஆயிரகணக்கான மக்கள் நடனமாடிக் கொண்டிருந்தனர். கைகளில் மதுக்குவளையுடன் ஜோடியாக நடனம் ஆடி மகிழ்ந்துகொண்டு இருந்தார்கள். இயேசு அங்கு ஆடிக் கொண்டிருந்த ஒரு பெண்மணியிடம், "ஏன் எல்லோரும் சந்தோஷமாக நடனம் ஆடிக்கொண்டிருக்கிறீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு அந்தப் பெண்மணி "என்னப்பா நீ கற்காலத்தில் வாழ்ந்தவன்போல் பேசுகின்றாய். இன்று கிறிஸ்மஸ் விழா உலகமெங்கும் கொண்டாடப்படுகின்றது. நாங்கள் விடிய விடிய குடித்து மகிழ்ந்து நடனம் ஆடுவோம். அதுதான் எங்களின் கிறிஸ்மஸ்" என்று கூறினார் அந்தப் பெண். இயேசுவுக்கோ ஒன்றும் புரியவில்லை நடனமாடுவதுதான் கிறிஸ்து பிறப்பு விழாவா? கிறிஸ்மஸ் விழாவின் புனிதத்துவத்தையும் அர்த்தத்தையும் தலைகீழாக்கி விட்டார்களே என நினைத்து கவலை உற்றவராய் இயேசு ஜேர்மன் நோக்கி தனது பயணத்தை மேற்கொண்டார்.

ஜேர்மனியில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மாபொரும் விருந்து ஒன்று நடைபெற்றது. அங்கு அறுசுவை உணவு, பல்வகைப் பழங்கள், பல்வேறு வகையான மதுபான வகைகள், பல்வேறு வகையான குளிர்பானங்கள் என மக்கள் வயிறு நிறைய சாப்பிடுவதையே குறிக்கோளாக கொண்டவர்களாக இருந்தார்கள். இயேசு அவர்களில் ஒருவரிடம், "ஐயா ஏன் இந்த மாபெரும் விருந்து?" எனக் கேட்டார். அதற்கு அவர், "தம்பி நீ ஒருவன்தான் உலகம் தெரியாத பிள்ளையாய் இருக்கிறாய். இன்று நாங்கள் கிறிஸ்மஸ் விழாவை கொண்டாடுகின்றோம். உண்டு குடித்து மகிழ்வதுதான் கிறிஸ்மஸ்" என்று அவர் சொன்னார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கவிதைகள்

## பாரினை மீட்கவந்த பாலன்

மாதமும் மார்கழி வந்ததுவே
பனித்துளி கடுங்குளிர் வாட்டிடுதே
கால்களும் நடந்து நொந்திடுதே
யாரின் வீட்டிலும் இடமில்லையே
மாட்டுக் கொட்டில் மனையானதே.

பாவத்தை மீட்க இயேசு வந்தார்
பாவியை மீட்க பாலனாய் வந்தார்.

நீதி வாழ்வின் தேவபாலன்
சாத்தானை வெல்லும் தேவபாலன்
அடிமைகளை விடுவிக்கும் தேவபாலன்
அன்பின் உருவாய் வந்துதித்தார்.

ஏழைக்கிரங்கி வாழ்வு தந்திட
ஏழ்மையின் வடிவாய் வந்தாரே!
மாந்தர் நம்மை விடுவிக்க
மானிடக் கோலத்தில் வந்தாரே!

*பா. துஸ்யந்தி,*
*பாலைக்குழி, நானாட்டான்.*

## பாவ இருள் நீக்கிய பாலன்

மார்கழிக் குளிரில் மாமரி மடியில்
பாலகனாய் உதித்தார்
பாவம் போக்க சாபம் நீக்க
பூமியில் அவதரித்தார்.
ஞானிகள் வணங்க தூதர்கள் பாட
தெய்வ மகன் பிறந்தார்.

*மகேந்திரன் நிறோஜா,*
*பெரிய கோமரசன்குளம்,*
*வவுனியா.*

## மண் மீது வந்த பாலா

மண்மீது வந்த பாலா
மானிடரை மீட்க வந்த பாலா
மாடடை குடியில் உதித்த பாலா
மரியின் மடியில் தவழ்ந்த பாலா

எம் துயர் நீக்க வந்திடுவாய்
எம்மை அரவணைக்க வந்திடுவாய்
உள்ளக் குடிலில் எழுந்து வா
ஏழைகள் எம்மை ஏற்றிடுவாய்.
உனது வரவுக்காய் காத்திருந்தோம்
உள்ளக்களிப்புடன் பார்த்திருந்தோம்
இறையே மகனே வந்திடுவாய்
ஏழைகள் எம்மேல் இரங்கிடுவாய்.

*ம. நோயல்,*
*பிச்சகுளம், முருங்கன்.*

## நம் மீட்பர் பிறந்தார்

பரமன் படைத்த பூமியிலே
பாலன் வந்தார் பாரினிலே
பாலர் நாம் பக்தியுடன்
பாடி புகழ்ந்து பணிவோமே.

தேவனின் அன்னை மரியாளாம்
இயேசு என்பதே அவர் பெயராம்
அவரின் தந்தை சூசையாம்
அவரது இல்லம் குடிலாமே.

இயேசுதானே நம் மீட்பர்
இன்றைய உலகம் போற்றிடுமே
இயேசு பிறந்த தினத்தையே
நத்தார் தினம் என்றழைப்பர்
நத்தார் தினமும் வந்தாச்சு
இயேசு பாலனும் பிறந்தாச்சு

*ஜே. சகாய சுகன்யா,*
*மாதா கோவில் வீதி,*
*தலைமன்னார்.*

## பாலன் யேசு

மாடடைக் குடியில்
மரியின் மடியில்
பிறந்தார் இயேசு பாலன்
பாவத்தில் இருந்தும்
சாபத்தில் இருந்தும்
மீட்டிடப் பிறந்தார் யேசு பாலன்
உலகிற்கு ஒளியாய்
உண்மையின் வழியாய்
பிறந்தார் யேசு பாலன்
அவரை வாழ்த்துவோம்
அவரை வணங்குவோம்
வாழ்வைப் பெற்றிடுவோம்.

*எஸ். யூட் அனுசியா,*
*ஸ்ரீராமபுரம், வவுனியா.*

## வணங்கிடுவோம்

மாமரியின் மடியினிலே
மாட்டுத் தொழுவத்திலே
மாபெரும் குளிரினிலே
வானவர் சூழ்ந்திட
வாழ்த்துக்கள் பாடிட
உதித்த பாலனை
வணங்கிடுவோம்.

*மெக்டலொஸ் பேர்டினற்,*
*தோட்டவெளி, விடத்தல்தீவு.*

## மன்னவனே நீ ஏன் மலர்ந்தாய்

அலைகடலின் ஓசையுடன்
தாரகையின் கண்சிமிட்டலுடன்
வெண்முகில் கூட்டமது வெண்பனி தூவ
காரிருள் மேகமது வான்மழை பொழிய
விடிவெள்ளி வானெங்கும் பூத்திருக்க
வானவரின் வாழ்த்துச் செய்தியுடன்
மார்கழி மாதக்குளிர்தனிலே
பாலகனே நீ மலர்கின்றாய்.

பூவுலகமே மகிழ்கின்றது உன் வருகையால்
ஆனால் ஈழத்தேசத்தின்மீதொரு
மௌனப் பூகம்பம்!
இரத்த ஆடையினால் ஈழத்தேசம்
போர்த்தப்பட்டிருக்கின்றது
மறைந்து போகும் மானிட வாழ்விலே
உலகின் தேடலுக்காய்
உடன்பிறப்பை அடகுவைக்கும் நாகரீக வாழ்வு.
ஈழத்தால் நொந்திங்கு பெற்றெடுத்த மானிடம்
மண்ணாகும் வேளைதனிலே
மன்னவனே நீ ஏன் மலர்ந்தாய்?

பாலகனே உம்மை தன் குழந்தையாய் எண்ணி
தாலாட்ட ஏங்கும் தாயுள்ளம் பலவுண்டு.
தன் மழலையை தொட்டுத் தாலாட்டுகையிலே
செல் ஒன்று வந்து தன் செல்வத்தைக்
கொண்டு சென்றதினால்
அத்தினமே தாலாட்டை மறந்துபோன
தாயுள்ளம்தான் எத்தனை எத்தனை
ஈழத்தில் இனி உம்மை யார் …?
தாலாட்ட தாயற்று இருக்கையிலே
மன்னவனே நீ ஏன் பிறந்தாய்?
இழப்புக்களும், இடப்பெயர்வுகளும்
உள்ளத்தின் துடிப்பாய் மாறிவிட்ட நிலையிலே
முழுமனித விடுதலைக்காய்
இன்று மலர்ந்த இரத்தினமே
அப்பாவி ஏழைகளின் கூக்குரலை
ஏரெடுத்துப்பார்க்க எவருக்குமே மனமில்லை
இந்நிலையிலே மன்னவனே
நீ ஏன் மலர்ந்தாய்?

*ப. ஜெஸ்ரீனா குருஸ், பேசாலை.*

## விண்ணின் அரசர் மண்ணில் மனிதன்?

விண்ணில் தோன்றிய வால் வெள்ளி கண்டோம்
மண்ணின் வேந்தர் யாம் விரைந்தே சென்றோம்.
வண்டின் மாட்டின் கொட்டிலைக் கண்டோம்!
பூண்டின் மெத்தையில் கிடத்திடக்கண்டோம்

தூதர்கள் சூழ இடையர்கள் மகிழ
வேந்தனைக் கண்டோம்!
பாதகர் பதைக்க பாலத்தை நீக்க
தேடி வந்த தேவனைக் கண்டோம்
போதகர் திகைக்க வேந்தர்கள் பகைக்க
உதித்திட்ட ஒளியினைக் கண்டோம்
நாத்திகன் உணர உண்மைகள் உரைக்க
வந்த சாட்சியும் இவரே

நொறுங்கிய உள்ளங்கள் மகிழட்டுமே!
குறுகிய மனங்கள் விரியட்டுமே!
திறங்கிட்ட கதவுகள் திறக்கட்டுமே!
இறங்கியே மனிதர் வாழட்டுமே!

வீட்டில் அமைதி பெருகிடுமே!
நாட்டில் சமத்துவம் கிடைத்திடுமே

*தொ. கிறிஸ்ரியான், பேசாலை*

# கிறிஸ்மஸ் சிறுகதை

அ. ஜஸ்மின் ஷறோன்,
ஆவணம், நானாட்டான்.

## சோகத்திலும் ஒரு சுகம்

"ஐயோ! கடவுளே! நாலு வருசமா நாதியற்றுத் தவிக்கின்றேனே! என்ர புள்ள குட்டிகளுக்கு நல்ல சாப்பாடு தண்ணி இல்லையே! இறைவா… அதுகள் படிச்ச படிப்புக்கு இப்ப குட்டிச்சுவரா போயிற்றுதுகளே! என்ன செய்வேன் …….? எப்பதான் இதுக்கெல்லாம் ஒரு விடிவு வருமோ? ஆண்டவரே எங்களைக் கொஞ்சம் ஏறெடுத்துப் பாராப்பா…." என்று மாரடித்துப் புலம்பினாள் தங்கம்மா. அழுது புரண்டவள் தன் கடந்தகால வாழ்க்கைக்குள் மூழ்கிப் போனாள்.

சோமசுந்தரம் என்றாலே ஊரே நடுங்கும். அப்படி மதிப்பும், மரியாதையும் நிறைந்த கணவனை உடையவள் தங்கம்மா. மூன்று பிள்ளைகளுக்கு தாயான அவள் இரண்டு பெண் பிள்ளைகளையும் ஒரே ஒரு ஆண் சிங்கத்தையும் பெற்றெடுத்தாள். ஆண் சிங்கம் என்று சொல்வதற்குக் காரணம் அவனைப்போல வேறு யாரும் இல்லை. படிப்பிலே கெட்டிக்காரன். விளையாட்டுத் துறையிலே சம்பியன் எடுக்காமல் திரும்பமாட்டான். தீய நண்பர்களோ, தீய பழக்கங்களோ எதுவுமே இல்லாதவன். தாய் சொல்லைத் தட்டாதவன். மூத்த பிள்ளை ஆதலால் குடும்பத்தைக் கட்டிக்காக்கும் முயற்சியில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியும் அப்படிப்பை மேற்கொள்ளாமல் தொழில் முயற்சியில் ஈடுபட்டு குடும்பப்பொறுப்பை தன்னுள் சுமந்துகொண்டவன். தங்கைகளின் படிப்புச் செலவிற்கு பணம் தேவை என்றபடியால் எந்த வேலையையும் செய்யத் துணிவு கொண்டவனாய் மின்சாரத் திணைக்களத்தில் இணைந்து வீடுகளுக்கு மின் இணைப்பு செய்யும் பணியில் தன்னுடன் நான்கைந்து பேரை இணைத்துக்கொண்டு வேலை செய்துகொண்டிருந்தான். இப்படியாக அவனது வாழ்க்கை நகர்ந்துகொண்டிருந்தது.

ஒருநாள் இரவு ஒன்பது மணி இருக்கும். அப்போது வீட்டிற்கு வெளியே, "சோமசுந்தரம், சோமசுந்தரம்" என்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு வெளியே வந்தார் சோமசுந்தரம். 4, 5 பேர் சூழ்ந்து நிற்க இங்கு 'கலையரசன்' என்பது யார்? என்று கேட்டார்கள். "எதுக்கு கேக்கிறிங்க? எங்கிருந்து வாறீங்க…?" என்று பதட்டப்பட்டார் சோமசுந்தரம். "அதெல்லாம் உங்களுக்கு தேவயில்லாத விசயம். நாங்க கேட்டது கலையரசனை." என்றான் அவர்களில் ஒருவன். வீட்டினுள் இருந்து வெளியே வந்து, "நான்தான் கலையரசன்…! என்ன வேண்டும்? என்று கேட்டான் கலையரசன். உடனே எதுவும் பேசாமல் இருவர் கையைப் பிடிக்க, ஒருவர் வாயைப் பொத்த அவனை இழுத்துக்கொண்டு கேற்றுக்கு வெளியே நின்ற வாகனத்தில் போட்டுக்கொண்டு பறந்து சென்றனர்.

செய்வதறியாத தங்கம்மா ஓலமிட்டு அழ, திகைத்துப்போன சோமசுந்தரம் பொத்தென்று அப்படியே நிலத்தில் சாய்ந்தார். அன்று சாய்ந்தவர்தான் இன்னமும் எழுந்திருக்கவில்லை. அண்ணனைக் கடத்திக்கொண்டு போயிட்டாங்க நாங்க படிச்சு என்னத்த கிளிக்கப்போறம் என்று பிள்ளைகள் இருவரும் படிப்பை இடைநிறுத்தினர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்.)

# கொஞ்சம் சிரிங்க

காவலாளி :- மன்னா, அந்தபுரத்தில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.
*மன்னன்* :- வெடிகளை அப்புறப்படுத்து. கன்னிகளை பத்திரப்படுத்து.
*கிசோக்குமார் மிதுசா, மன்னார்.*

*ஒருவன்* :- அது கோல்ட் சாம்பார்.
*மற்றவர்* :- எப்படி சொல்லுற?
*ஒருவர்* :- அதில 24 கரட் கிடந்ததே

……………………………………

*நோயாளி* :- டாக்டர் நீங்க என்னிடம் காசு வாங்காமல் மருந்து தந்ததாக கனவு கண்டேன்.
*மருத்துவர்* :- அதை எல்லாம் கெட்ட கனவாக மறந்து காசை கட்டிட்டு போங்க.
*கமில்டன் றிலுஷன், மன்னார்.*

*சுனில்* :- டேய்! நண்பா கிளி ஏண்டா பச்சையா இருக்குது.
*புனில்* :- டேய்! மச்சான் அதை சமைக்கவில்லை அதுதானடா பச்சையா இருக்கு.

……………………………………

*வைரம்* :- அடியே பாக்கியம் நீ ரொம்ப குடுத்து வைச்சவ
*பாக்கியம்* :- ஏனடி நீ அப்படி சொல்லுறா
*வைரம்* :- உன்ர புருசன் உன்ன செல்லமா பாக்கி பாக்கி எண்டு அல்லோ கூப்பிடுறார்
*பாக்கியம்* :- அத ஏனடி நீ கேட்கிறா. அவருக்கு நான் கொடுக்க வேண்டிய சீதனத்துல இன்னும் பாக்கி இருக்கு. அதுதான் அப்படி கூப்பிடுறாரு!
*வைரம்* :- ??? ……………!!!

……………………………………

*மகன்* :- அப்பா நான் நல்லா விளையாட சேர் என்ன ஒவ்வொரு நாளும் முட்டை சாப்பிடச் சொன்னார்.
*அப்பா* :- டேய் நீ பரீட்சையில வாங்கின முட்டை நிறைய இருக்கு. அத ஒவ்வொரு நாளும் சாப்பிட்டிரு போ.

*எஸ். றோமி, சாளம்பன், ஆண்டான்குளம்.*

# மன்னா விளம்பரப் பலகை

உளி படாத கல் சிலையாவதில்லை. உழைப்பில்லாத கனவு நனவாவதில்லை.
*தே. வினோதினி, கீரி, மன்னார்.*

ஒரு வாசகனுக்குத் தெரிவதெல்லாம் வாக்கியங்களின் வாளிப்பு மட்டும்தான். அந்த வாக்கியத்துக்குப் பின்னால் இருக்கும், தன் உணர்ச்சியை அவன் சித்தரிக்க எத்தனித்த ரணம் இவை யாவும் மர்மமாக மறைந்து கிடக்கின்றன.
(கவிஞர் வைரமுத்து.)

பாரதி மகாகவி என்பதில் சந்தேகப்படுகிறவர்களைவிட சராசரி மடையர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.
அவன் மகாகவிதான் என்பதற்குரிய நிருபணங்களாக விளங்குபவை அவனது கவிதைகள் மட்டுமல்லா – வாழ்க்கையும்தான். (கவிஞர் மு. மேத்தா)
- *ஜெயா பாலாஜி, முருங்கன்.*

"எழுந்திரு விழித்திரு எண்ணியதை அடையும்வரை சோர்ந்து விடாதே"
"வெற்றியும் சந்தோசமும் எப்போதும் ஒன்றாகவே இருக்கும். நீங்கள் விரும்புவதை அடைவது வெற்றியாகும். நீங்கள் அடைந்ததை விரும்புவது சந்தோசமாகும்"
- *அ. சுதாஜினி, ஆட்காட்டிவெளி.*

கவலை மிகுமானால் கனவுகள் வரும். சொல் மிகுமானால் மூடத்தனம் வெளியாகும். கடவுளுக்கு நீ ஏதாவதொரு வாக்குக் கொடுத்திருந்தால் அதை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்தாதே. - *யோ. நிதர்சன், பெரியகுஞ்சுக்குளம்.*

"முடியும் என்று நினைத்து – நாம் துணிந்துவிட்டால்
எம்மால் முடியாத காரியம் எதுவுமில்லை"
சி. கீர்த்தனா, சாளம்பன்.

"வாழ்க்கை என்பது குழந்தை கையிலிருக்கும் முட்டைபோல. எப்போதாவது விழுந்து உடைந்து விடும்"
சி. றோமி, சாளம்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

அத்தியாயம் – 22

– ஆங்கில மூலம் –

அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குருஸ்

*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

# டைற்றானிக் கப்பலின் சோகநாடகம்



"தலைவர்களிடம் நம்பிக்கை வையாதீர்கள், மனிதனை நம்பவேண்டாம். அவனால் மீட்பு இல்லை அவனுடைய ஆவி பிரிய தான் தோன்றிய மண்ணுக்கே திரும்புகிறான், அப்போது அவன் திட்டங்கள் எல்லாம் பாழாகும்" (சங்கீதம் 145:3-4).

திருப்பாடலில் உள்ள இந்த வாக்கியங்களை எனது வகுப்பு மாணவர்களுக்கு விளங்கப்படுத்திக்கொண்டிருக்கும்பொழுது சரித்திர நிகழ்ச்சி ஒன்று என் மனதில் பளிச்சிட்டது.

டைற்றானிக் ஒரு மிக அழகான கப்பல். அது "மூழ்கும் தன்மையற்றது" அந்த கப்பலைக் கட்டியவர்கள் அவர்களுடைய திறமையான வேலைப்பாட்டைப்பற்றி உண்மையில் பெருமை கொண்டனர். டைற்றானிக் மிகவும் கம்பீரமாகவும் மாட்சிமையுடனும் நின்றது. அதை 'மூழ்கும் தன்மையற்ற டைற்றானிக்' என அழைத்தார்கள். காரணம் அதன் ஒரு பகுதி உடைந்தாலும் மறுபகுதி சில தூரங்கள் கடலில் மிதக்கும் தன்மையுடையதாக அதைக்கட்டியிருந்தனர்.

அந்த "மூழ்கும் தன்மையற்ற டைற்றானிக்" இயந்திர வல்லுனர்களின் ஒரு சாதனை. அது இங்கிலாந்தில் இருந்து அத்திலாந்து சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்காவுக்கு தன்னுடைய கன்னிப்பயணத்தை ஆரம்பிக்க இருந்தது. செல்வந்தர்களும், ஐசுவரியவான்களும் அந்த கௌரவமான டைற்றானிக்கின் சரித்திரப் பயணத்துக்கான அனுமதிச்சீட்டை பெற்றுக்கொள்வதில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டனர். ஒரே பரபரப்பும் சுறுசுறுப்புமாக இருந்தது. நகரம் முழுவதும் இந்தக் கன்னிப் பயணத்தைப் பற்றியே பேசிக் கொண்டனர். செய்திப் பத்திரிகைகள் எல்லாம் "மூழ்கும் தன்மையற்ற டைற்றானிக்" பற்றிய அநேக பாராட்டுச் செய்திகளை வெளியிட்டுக்கொண்டிருந்தன.

ஒரு பிரகாசமான நாளாகிய 1912ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 14ம் திகதி இரவு டைற்றானிக் தனது கன்னிப் பயணத்தை ஆரம்பிக்க இருந்தது. பிரயாணிகள் எல்லோரும் மிக நேர்த்தியான நகரிகமான ஆடைகள் அணிந்து ஆவலுடனும் பரபரப்புடனும் தங்களை வழியனுப்ப துறைக்கு வந்திருந்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் வாழ்த்துக் கூறிக்கொண்டிருந்தனர். அவர்கள் ஒருவர் ஒருவருக்கு தாங்களாகவே அறிமுகம் செய்யத் தொடங்கினர். அத்துடன் புதிய அறிமுகங்களையும் செய்து கொண்டனர். இந்தப் பிரயாணம் மறக்க முடியாத ஒன்றாக இருக்கப்போகின்றது. அப்படித்தான் அவர்கள் எண்ணினார்கள்.

"மூழ்கும் தன்மையற்ற டைற்றானிக்" மிகுந்த கரகோஷத்தின் மத்தியில் நிதானமாகவும், எடுப்பாகவும் பரந்த சமுத்திரத்தில் நழுவியது. சந்தோஷ ஆரவாரங்களும், சங்கீத முழக்கங்களும் அங்கு தயாராக இருந்த வாத்திய குழுக்களால் ஒலிக்கப்பட்டன. அங்கே ஒரே ஆரவாரமும், எக்காளமும், அக்களிப்பும், களியாட்டங்களுமாக இருந்தன. புதுமையான ஆரம்பத்துடன் பயணம் பார்ப்பதற்கு எல்லாம் நன்றாகவே தெரிந்தன. சூரியன் அஸ்தமித்து பூமியை இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. அதிசயமிக்க டைற்றானிக் முழுமையான ஒளியுடன் பிரகாசமான ஆபரணம் போன்று ஜொலித்தது. படிப்படியாக அதுவும் பார்வைக்கு மறைந்தது. கேளிக்கையான களியாட்டங்களும் மிதமிஞ்சிய ஆனந்தமும் அடைந்த பயணிகள் யாவரும் களைத்து படுக்கைக்கு சென்றனர்.

நடுச்சாமத்திலே நினைக்க முடியாத ஒன்று நடைபெற்றது. "மூழ்கும் தன்மையற்ற டைற்றானிக்" கருமையான அத்திலாந்து சமுத்திரத்தினுடாக வேகத்தை அதிகரித்துச் சென்று கொண்டிருக்கும்போது ஒரு பாரிய பனிக்கட்டியுடன் மோதியது. சப்தம் காதுகளை அடைத்தது. இலேசான தூரத்தில் இருந்த பயணிகள் கட்டில்களிலிருந்து தரையில் தூக்கி வீசப்பட்டனர். டைற்றானிக் இரண்டாகப் பிளந்தது. ஒரு பகுதி விரைவாக முழ்கிக் கொண்டிருந்தது. பிரயாணிகள் பேரிரைச்சல் இட்டனர். பயத்தினால் வீரிட்டனர். தங்களைப் பாதுகாக்க தாறுமாறாக அங்குமிங்கும் ஓடினர். திகிலினால் தாக்கப்பட்ட சிலர் தரையில் முழந்தாளிட்டு ஜெபித்தனர். சிலர் பாய்ந்து உயிர்ப் பாதுகாப்புப் படகுகளை நோக்கி ஓடினர். எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. வாக்குவாதங்களினால் ஒன்றும் செய்யமுடியாத கப்பல் தலைவன் பித்துப்பிடித்து டைற்றானிக்கின் உதவிக்கு வருமாறு மற்றக் கப்பல்களுக்கு சமிக்கை கொடுத்தான். அது மிகவும் தாமதமாகிவிட்டது. மூழ்கும் தன்மையற்ற டைற்றானிக் அத்திலாந்து சமுத்திரத்தின் அடியில் மூழ்கிவிட்டது. கிட்டத்தட்ட 2000 பயணிகளில் 1500 பயணிகள் அன்றிரவு மாண்டு மடிந்தனர். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அது மிக கெடுதிமிக்க ஒரு விபத்தாகும்.

"டைற்றானிக்" 11 ஒஸ்கார் பரிசுகளுடன் பயணம் போய்விட்டது. மூழ்கிய பெரிய கப்பல் ஹொலியூட்டின் சரித்திர துறைமுகத்திலே தனி ஒரு திரைப்படத்துக்கான மிகத் திறமை மிக்க அக்கடமி விருதான 11 ஒஸ்கார் (தங்கச்சாலை) பரிசுகளை கட்டிவைத்து விட்டு டைற்றானிக் பயணம் மேற்கொண்டுவிட்டது. படத்தின் உதவித் தயாரிப்பாளரும், திரைவசன எழுதுனரும், துணை வெளியீட்டாளரும், இயக்குனருமாகிய ஜேம்ஸ் கமெறோன் திறமையான படத்துக்கான மூன்றாவது இரவுக்குரிய பரிசைப் பெறும்பொழுது "நீ இதை ஒரு மறக்க முடியாத இரவாக்கிவிட்டீர். வாருங்கள் விடியும் மட்டும் கொண்டாடுவோம்" என்று கோஷித்தார்கள்.

சிறந்த படம், சிறந்த இயக்குனர். படப்பிடிப்பு, ஒலியமைப்பு, கற்பனைக்காட்சிகள் வெளியீடு, சித்திர இயக்கம் மூல இசை பாடல், உடுப்பு ஆகிய 11 ஒஸ்கார் பரிசுகளை டைற்றானிக் என்ற படம் தட்டிக்கொண்டது.

14 ஒஸ்கார் விண்ணப்பத்தில் 11 பரிசைத் தட்டி 1959ம் ஆண்டில் வெற்றி வாகை சூரிய "பென்கர்" படத்தின் சாதனையை முறியடித்துள்ளது. சர்வதேச பாராட்டுதலைப் பெற்ற "எனது இதயம் போய்க்கொண்டிருக்கும்" என்ற பாடலுக்கும் இசைக்கும் இந்த படம் வெற்றி பெற்றது. ■

# உங்களுக்குத் தெரியுமா?

# மறையறிவுப் போட்டி – 112

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் 104ம் திருப்பாடல் முதல் 108ம் திருப்பாடல் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன. 104ம் திருப்பாடல் 35 திருவசனங்களைக் கொண்ட பெரிய பாடல். உலகிலும் வானிலும் உள்ள அனைத்தும் கடவுளின் கைவண்ணமே என்று புகழ்ந்து பாடும் பாடல். கடவுள் படைப்பின் தேவன்; பராமரிப்பின் தேவன் எனச் சொல்கின்றது.

105ம் திருப்பாடல் 45 திருவசனங்களைக் கொண்டு சூசையின் மகனான யாக்கோப்பு எகிப்துக்கு அடிமையாக்கப்பட்டதிலிருந்து இஸ்ராயேல் மக்கள் மோசேயால் மீட்கப்பட்டது வரையான வரலாற்றை பாடல் வரிகளாகக் கொண்டுள்ளது. வரலாறுகள் ஆவணமாக்கப்படாத அந்நாட்களில் இதுபோன்ற வழிபாட்டு வாய் மொழிப் பாடல்களே இஸ்ராயேல் மக்களின் வரலாற்றையும் ஏனைய நினைவுகளையும் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு வந்தன.

106ம் திருப்பாடலும் 48 திருவசனங்களைக் கொண்ட ஒரு பெரிய பாடல். இதுவும் ஒரு வரலாற்றுப் பாடல்தான். விடுதலைப் பயணத்தில் 40 வருடங்களில் யூதமக்கள் இறைத்தந்தையின் கோபத்துக்கு ஆளாகினர். ஆட்டுக்குட்டி ஒன்றை பொன்னால் செய்து அதைக் கடவுளாக்கிப் பார்த்தனர். பிற இனத்தவர்களின் போலித் தெய்வங்களை வழிபடுவதற்காகத் தம் புதல்வர் புதல்வியரையே பலியாக்கினர். இதுபோன்று இறைவனுக்கு எதிரான பல கருமங்களைச் செய்தனர். இதனால் கடவுளால் பலமுறை தண்டிக்கப்பட்டனர். கடவுளிடம் கையேந்தியபோது மீண்டும் கடவுள் அவர்களுக்கு இரங்கினார். அவர்களைத் துன்பங்களிலிருந்து மீட்டெடுத்தார்.

விடுதலைப் பயணத்தின் காலம் 40 வருடங்கள். இந்த நாற்பது வருடங்களில் அவர்கள் தங்கள் வாழ்க்கையையும் வாழ்ந்து கொண்டுதான் சென்றார்கள். திருமணங்கள், பிறப்புக்கள், இறப்புக்கள் என்பனவும் நிகழ்ந்துகொண்டுதான் இருந்தன. கடவுளால் தண்டிக்கப்படும் மக்கள் இறந்து போயினர். ஆக கானான் தேசத்துக்கான விடுதலைப்பயணத்தை எகிப்திலிருந்து ஆரம்பித்த மக்களில் 10% - 20% வீதமான மக்கள்தான் தம் அடுத்த சந்ததியினரோடு கானானை வந்தடைந்தனர். மோயீசன் கூட கானானை அடையவில்லை.

இனி நமது வினாக்களுக்கு வருவோம் :

01. இறைவனின் ஆடை எது? உறைவிடம் எது? தேர் எது? தூதர் யார்? பணியாளர்கள் யார்?
02. பூவுலகம் எதனால் நிறைவடைகிறது?
03. இடைவெளிகளை நிரப்புங்கள்
நீர் கொடுக்க அவை ............... ...................
நீர் உமது கையைத் திறக்க ............. ................
04. நம் கடவுளாம் ஆண்டவரின் நீதித்தீர்ப்புக்கள் யாருக்குரியன?
05. இஸ்ராயேலரின் விடுதலைக்காக எகிப்தியர்மேல் அனுப்பப்பட்ட பத்துக் தண்டனைகளும் எவை?
06. பாலைநிலத்தில் இஸ்ராயேலர் இறைவனுக்கெதிராகப் பாவம் செய்ததால் நிலம் பிளந்து யாரை விழுங்கியது?
07. 'அவர் முன் உடைமதில் சுவர்போல் காவலன்போல் நின்று அவரது கடும் சினம் அவர்களை அழிக்காதவாறு தடுத்தார். தடுத்தது யார்?
08. இஸ்ராயலேரிடையே கொள்ளை நோய் பரவியபோது யாருடைய தலையீட்டால் கொள்ளை நோய் நின்றது?
09. சிலர் காரிருளிலும், சாவின் நிழலிலும் கிடந்தனர். விலங்கிடப்பட்டு துன்பத்தில் உழன்றனர். ஏன்?
10. ஆண்டவரே மக்களினங்களிடையே உமக்கு நன்றி செலுத்துவேன். எல்லா இனத்தாரிடையேயும் உம்மைப்புகழ்ந்து பாடுவேன். ஏன்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 110 இற்கான கேள்விகளுக்கு 30 பேர் விடையளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.

## பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. றெ. அன்ரனி கிளிங்ரன் பீரிஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
2. அ. மேரி மரினா, இல - 8, திரேசாள் வீதி, பேசாலை.
3. கு. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
4. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
5. யோ. மிரியம் டர்ஷிக்கா, நானாட்டான்.
6. சி. ஜோன்சி, இல - 01, ஸ்ரீராமபுரம், வவுனியா.
7. எம். தேவி, இல-118/3, எமில்நகர், மன்னார்.
8. ச. பிரவீன், குழந்தை யேசு ஆலயம், தாஸ்கோட்டம், வவுனியா.
9. கு. கத்தறின், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
10. வி. ஆன் சௌமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.

# யோசவ்வாஸ் நகர் மக்களின் முன்மாதிரிகை!

பம்பைமடு பங்கு 2000ம் ஆண்டு 05ம் மாதம் 27ம் திகதி வவுனியா பங்கிலிருந்து புதிய பங்காக உதயமாகியது. பம்பைமடுவில் ஆலயம் இல்லாத காரணத்தால் வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயம் பம்பைமடு பங்கின் தாய்க்கோவிலாக இருந்து வந்தது. 2011 வைகாசி மாதம் வேப்பங்குளம் புதிய பங்காக பம்பைமடு பங்கிலிருந்து பிரிக்கப்பட்டதால் பம்பைமடு பங்கின் தாய்க்கோவிலாக கார்மேல் மாதா ஆயலம் உருப்பெற்றது.

காலப்போக்கில் இட நெருக்கடி, மழை, வெயில் போன்ற தாக்கத்தோடு மக்கள் திருப்பலியில் பங்கெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையைப்பற்றி எமது ஆயருக்கு தெரிவித்தோம். அவர் தோட்டவெளிப்பங்கில் வாழும் யோசவ் வாஸ் நகர் மக்களிடம் பம்பைமடு ஆலயத்திற்கு ஒரு கொட்டகை அமைத்து உதவும்படி கேட்டுக்கொண்டார். ஆயரின் வேண்டுகோளை புனிதமாக மதித்து யோசவாஸ் நகர் மக்கள் 20பேர் மட்டில் முன்வந்து கடந்த 11.11.2012 ஞாயிற்றுக்கிழமை ஒரு அழகிய கொட்டகையை அமைத்துத் தந்துள்ளார்கள்.

இது எமது மக்கள் நல்லமுறையில் திருப்பலியில் பங்கெடுத்து செபிக்க பேருதவியாக உள்ளது. ஆகவே இந்தத் தாராள உள்ளம் கொண்ட யோசவாஸ் நகர் மக்களுக்கும் இதனை ஊக்கப்படுத்திய எமது ஆயருக்கும் மனம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் ஊக்கப்படுத்திய தோட்டவெளிப் பங்குத்தந்தை நேரு அடிகளாருக்கும் எமது நன்றிகள், இறையாசீர் வேண்டி நிற்கின்றோம்.

- பங்குமக்கள் - பம்பைமடு.





*யோசவ்வாஸ் நகர் மக்கள் பம்பைமடுவில் உள்ள கார்மேல் அருட்சகோதரிகளுடன் காணப்படுகின்றனர். கொட்டகை கிடுகால் வேயப்படும் காட்சி.*

## உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர்களே!

உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையின் முகவரிக்குக் கீழே உங்கள் சந்தாக் காலம் குறிக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்து உரிய காலத்தில் உங்கள் சந்தாவைப் புதிப்பித்துக்கொள்ளுங்கள். சந்தாவை புதிப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு அறியத்தருகின்றோம்.

- மன்னா நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.125

## சாலமோனின் ஞானம் 01 முதல் 19 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை ஜனவரி மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | 02 |
| | | | 04 | | | | | | 20 |
| | 07 | 06 | | 03 | 21 | | | | 22 |
| 05 | | | | 26 | ★ | ★ | ★ | | |
| | | | 08 | | | ★ | | 24 | 23 |
| | | | | 25 | ★ | | | 13 | |
| | | | | ★ | ★ | ★ | | | 18 |
| | 11 | | | ★ | | | | | 17 |
| | 12 | | | 15 | | | | 16 | 19 |
| 09 | | 10 | | | 14 | | | | |

(—— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1 ........................ உள்ளத்திலிருந்து அச்சத்தையும் ——
8. அவரது ...................... ஆண்டவருக்கு ஏற்புடையதாயிருந்தது.
9. அறிவிலிகளின் ..................... க் கண்ணிகள்.
11. அலகையின் பொறாமையினால் ............. உலகில் நுழைந்தது.
14. இதன் விளைவாக எங்கும் ஒரே ......................
15. ஆனால் பகைவர்கள் கதறியழுத ........................ கள் எதிரொலித்தன.

### வலமிருந்து இடம்

2. அது அறிவிலிகளை ...................... காட்டிவிடும்.
4. அநீதி .................... யில் அது நாணி ஒதுங்கும்.
13. நிலத்தின்மீது ...................... காலைப் பணியின்——
16. நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் ................... உள்ளன.
17. .................... குரிய வழியில் அவர்களை நடத்திச்சென்றது.
18. போர் வீரனைப்போல் ...................... க்கென குறிக்கப்பட்——
19. அங்கும் இங்கும் கலைக்கப்படும் ........................ போன்றது.
20. விபச்சாரிகளின் ................... முதிர்ச்சி அடையமாட்டார்கள்.
22. ..................... என்பது பகுத்தறிவின் துணையைக் கைவிடுவதே
23. இன்பத்தின் ....................... களை எங்கும் விட்டுச் செல்வோம்.

### மேலிருந்து கீழ்

4. அவர்கள் ............. நாட்டினரைப் பகைவர்களென நடத்தினார்கள்.
5. அழிவுக்குரிய ............ ஆன்மாவைக் கீழ்நோக்கி அழுத்துகிறது.
6. அவற்றில் ஆற்றல் ...................... த் தண்டிப்பதில்லை.
7. நீதிமான்களின் ஆன்மாக்கள் ..................... கையில் உள்ளன.
8. ஆண்டவருடைய ஊழியர் ஒருவரின் ................. நுழைந்தது.
12. சினம் செறிந்த ...................... மழை விழும்.
22. அவர்களை ..................... த்திக் கொன்றுவிடக்கூடியவை.
26. எனவே ................ சொற்களால் நற்பயிற்சி பெறுங்கள்.

### கீழிருந்து மேல்

3. வாழ்வின் மேலும் .......... மேலும் உமக்கு அதிகாரம் உண்டு.
5. .............ஆராய்ந்தறியும் அளவுக்கு ஆற்றல் அவர்களுக்கு
9. ..................... ன் அடிமைகளாகவும்——கடத்தப்பட்டார்கள்.
10. வழியில் ................டன் தன்னையே காட்டுகிறது.
21. ...................... மக்கள்மீது நமது ஆட்சி செலுத்துவேன்.
24. அவர்களுடைய ...................... மரபினர் சபிக்கப்பட்டவர்கள்.
25. முடிவுக்குப் .................. நாம் மீண்டும் வருவதில்லை.

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 123ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
டோனியஸ் ஜெகநாயகி,
2ம் பாம், செட்டிகுளம்.

**இரண்டாம் பரிசு:**
செ. ஆன் நியூசிக்கா துரம்,
மரியாள் வீதி,
தாழ்வுபாடு.

**மூன்றாம் பரிசு:**
திருமதி. யூ.றோசலினா,
மளுவராயர் கட்டையடம்பன்,
மடுறோட்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 80 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 60 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 123ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. கி. கிருஸ்டினா, அருப்பே சி. இல்லம், பூவரசங்குளம், வவுனியா.
2. பீ. கஸ்தூரி, இல - 42, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
3. ற. உதேனி, அருப்பே சி. இல்லம், பூவரசங்குளம், வவுனியா.
4. கி. கிருஷாந், வீரபுரம், நேரியகுளம்.
5. சி. பிரான்சிஸ்கா, அரிப்பு, சிலாவத்துறை.
6. அ. கரோலினி கிறிப்திக்கா,41, புனித மரியாள் வீதி, திருகோணமலை.
7. எ. மேரி மரினா, இல - 8, திரேசாள் வீதி, பேசாலை.
8. எஸ். சகாயஸ்ரெலா பீரிஸ், அரிப்பு, சிலாவத்துறை.
9. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலயவீதி, தோட்டவெளி.
10. அருட்சகோதரி கிருஷானி, அ.சி.இல்லம், பூவரசங்குளம், வவுனியா.
11. ச. மேரி மரினா, அருப்பே.சி.இல்லம், பூவரசங்குளம், வவுனியா.
12. ச. வீஜினி மேரி, அருப்பே.சி.இல்லம், பூவரசங்குளம், வவுனியா.
13. எஸ். றொனால்ட் றீகன், இல-240, வீரபுரம், நேரியகுளம்.
14. யே. டொய்சி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
15. அருட்சகோதரி மேரி எமலின், அ.சி.இல், பூவரசங்குளம், வவுனியா.
16. சி. மில்றோய் பீரிஸ், முத்தரிப்புத்துறை.
17. சிபோள் மரிய காணிக்கை பீரிஸ், முத்தரிப்புத்துறை.
18. பெ. பிரகாசமேரி, அ. சிறுவர் இல்லம், பூவரசங்குளம், வவுனியா.
19. யே. டெனுஷா, அ.சி.இல்லம், பூவரசங்குளம், வவுனியா.
20. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
21. ஞா. சங்கீதா, அருப்பே சி. இல்லம், பூவரசங்குளம், வவுனியா.
22. எஸ். பிரான்சிஸ் பீரிஸ், முத்தரிப்புத்துறை.
23. யே. அருளம்மா, இலுப்பைக்குளம், செட்டிக்குளம்.
24. கே. டினேஸ் துரம், அரிப்பு, சிலாவத்துறை.
25. பா. எபிரோன், இத்திக்கண்டல், அடம்பன்.
26. அகுஸ்தீன் இசைக்கியேல், யோசவாஸ் நகர், தோட்டவெளி.
27. ஈ. நிஷாந்தினி கூஞ்ஞு, குழந்தையேசு வீதி, 8ம்வட்டாரம், பேசாலை.
28. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
29. எ. மார்கிறட், தபால்கந்தேர் வீதி, மன்னார்.
30. ம. மத்தியூஸ் குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை.
31. கு. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
32. ம. நீசாராசமலர் குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை.
33. ம. கென்றீசன் சுகந்தினி, பொன்தீவுகண்டல், அளவக்கை.
34. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை.
35. எஸ். சி. சி. நவரத்தினராஜா, பாடசாலைவீதி, முதலியார்குளம்.
36. என். சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
37. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
38. ராணி அரசரத்தினம், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
39. யோ. றூக்மன் ராஜ், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
40. ஜி. அல்பேட், வெல்கம் லேன், பாலையூற்று, திருகோணமலை.
41. எ. விவேதனா, பாலைக்குழி, நானாட்டான்.
42. லவராணி அன்ரனி, திருக்குடும்ப மாகாண இல்லம், யாழ்ப்பாணம்.
43. எஸ். மேரி குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
44. ம. கிளின்ரன் குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை.
45. கு. கத்தறின், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
46. டெபோறா மோகன்ராஜ், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
47. ந. ஜெஸ்மின், பாடசாலை வீதி, முதலியார்குளம்.
48. யே. யூக்கலிஸ்ரா, இத்திக்கண்டல், அடம்பன்.
49. பிறின்சி லியோன், அரிப்பு, சிலாவத்துறை.
50. தேவிகா பத்மராஜா, தபால்கந்தோர் வீதி, மன்னார்.

## இல.123 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ய | து[02] | க் | கி | ல் | ❋ | ரு | க[26] | தி | ர் |
| லி | ப[08] | ணி | ❋ | ய | அ[29] | இ[04] | ரு | ம் | பு[28] |
| கூ[6] | ம் | ஒ[19] | லி | வ[14] | ன் | த | வெ[07] | மு[17] | ய |
| வி | ❋ | ஆ[36] | ஓ[33] | து | பு[24] | ய | ய | த | ம் |
| யை | வா[16] | சி[27] | ய் | ❋ | கு[11] | ம் | ர் | ற் | ❋ |
| ❋ | நி[25] | றை | வு | வ[03] | ர | தீ[21] | ❋ | க | ❋ |
| டை | ட் | பா[15] | ழ் | மா[31] | லை | கொ[10] | ❋ | னி | ப[35] |
| உ[5] | லா | ❋ | வா[34] | யி | ல் | டு | மு[18] | ன் | ந[32] |
| ன் | வா | சா[09] | ன | ❋ | க[34] | வி[30] | ல | க[22] | டு |
| ணை | மு[12] | க | ம் | ல | நி[01] | செ[20] | ❋ | று | வே[13] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.124ற்கான முடிவுகளை 2013ம் ஆண்டு ஜனவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# அனைவருக்கும் ஆங்கிலம்

## நியு லைட் ஆங்கில ஆசிரியர்

அனைவருக்கும் ஆங்கிலம் என்ற நோக்கத்தை அடிப்படையாக கொண்டு வங்காலை பிரத்தியேக ஆங்கில ஆசிரியர் (English Tution Teacher) திரு எஸ். அந்தோனிப்பிள்ளை (எம். ஏ., எம். பில்) அவர்களால் இரண்டு ஆங்கில நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. புத்தகத்தின் பெயர் 'நியுலைட் ஆங்கில ஆசிரியர்' (New Light English Teacher)

*முதலாவது புத்தகம்* - Basic English (அடிப்படை ஆங்கிலம்) என்பதாகும். இது A 4 அளவில் x + 389 பக்கங்களைக் கொண்டது. இதில் 5 பகுதிகளாக ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது.

1. Grammar - இலக்கணம்
2. Spoken English - பேச்சு ஆங்கிலம்
3. Improe your English –
ஆங்கிலத்தை வளர்த்து கொள்ளுங்கள்.
4. Verb Pattern – வாக்கிய அமைப்பு
5. Classified Vocabulary – வகைப்படுத்திய சொற்கள்

அனைவரும் தாங்களாகவே கற்றுக்கொள்ளும் வகையில் தமிழ் விளக்கங்களுடன் இலகுவாக எழுதப்பட்டுள்ளது.

**இரண்டாவது புத்தகம்** - Students Special – மாணவர்களுக்கான சிறப்புநூல் - Verb Dictionary & Classified Vocabulary வினைச்சொல் அகராதி மற்றும் வகைப்படுத்திய சொற்கள். இது A4 அளவில் v + 107 பக்கங்களை கொண்டது. இதில் 2 பகுதிகளாக ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது.

1. Verb Dictionary - இது மொழியின் இதயம் போன்ற பகுதியாகும். இதில் 3000ற்கும் மேற்பட்ட Verbs – வினைச்சொற்கள் 15 தலைப்புக்களாக பிரிக்கப்பட்டு இலகுவாக மனனம் செய்ய வழிகாட்டப்பட்டுள்ளது..
2. Classified Vocabulary – வகைப்படுத்திய சொற்கள்
இதில் 55 குறுந்தலைப்புக்களில் சொற்களஞ்சியம் தரப்பட்டுள்ளது. தற்காலத்தில் பயன்பாட்டிலுள்ள அனேக சொற்கள் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் Basic English – அடிப்படை ஆங்கிலம் - தொகுதி -1 புத்தகத்தின் விலை ரூபா 1, 200 மாணவர்களுக்கான சிறப்புநூல் Verb Dictionary& Classifed Vocabulary – வினைச்சொல் அகராதி மற்றும் வகைப்படுத்திய சொற்கள் புத்தகத்தின் விலை ரூபா 300.

இவர் தனது 10 ஆண்டுகால கற்பித்தல் அனுபவத்தைக்கொண்டு இந்நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வாங்கி பயனடைய விரும்புவோர் 0719066299 என்ற மொபிட்டல் இலக்கத்தை தொடர்புகொள்ளவும். அல்லது 'நியு லைட் இங்கிலிஸ் சென்டர், 17. F வாழ்வுதயம் கொம்லெக்ஸ், பிரதான வீதி, மன்னார் என்ற சென்ரரில் நேரடியாக பெற்றுக் கொள்ளவும். மன்னார் மாவட்டத்தில் இவரது கல்வி சேவையை மன்னா மகிழ்வுடன் பாராட்டுகின்றது.

## உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர்களே

உங்களுக்கு அனுப்பப்படும் பத்திரிகையின் முகவரிக்குக் கீழே உங்கள் சந்தாக் காலம் குறிக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்து உரிய காலத்தில் உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள். சந்தாவை புதுப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு அறியத் தருகின்றோம்.

- மன்னா நிர்வாகம்

# 2012ம் ஆண்டு இளம்புத்தாக்குனர் சாதனை



மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் தரம் 8இல் கல்வி கற்கும் செல்வி றெனோல்ட் விஸ்டம் பிறைற் என்ற மாணவியால் உருவாக்கப்பட்ட இயற்கைத் தலைக்கவசம் (Coconut Husk Helmet) தேசிய மட்ட புத்தாக்க கண்காட்சியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டியதையிட்டு பாடசாலைச் சமூகம் மகிழ்ச்சி அடைகிறது.

பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் இவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

தகவல் : மன்/ புனித சவேரியார் பெண்கள் பாடசாலை

# மன்/சாந்திபுரம் அ. த. க. பாடசாலை சாதனை



இப்பாடசாலையின் ஒன்பது வருடகால வரலாற்றில் முதல் தடவையாக ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் 2012 ஆண்டு (இவ்வருடம்) செல்வி யூ. லூட்ஸ் லுஜினியா மெர்லின் குரூஸ் என்பவர் 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

அதிபர் ஆசிரியர்களின் விடாமுயற்சியின் பலனாக வெற்றியீட்டியமையை இப்பாடசாலை சமூகம் பெருமிதத்துடன் பாராட்டி மகிழ்கின்றது. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவருடன் அதிபர் செல்வி எல். எம். ஞான உதயம் மற்றும் வகுப்பாசிரியர் திருமதி. எம். சி. ஆர். தேவதாசன் ஆகியோரை படத்தில் காணலாம். மன்னாவும் இவரை வாழ்த்துவதில் பெருமிதமடைகிறது.

- தகவல் : பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 08 1963

உதிர்வு 22 11 2010



**திரு. செபஸ்தியான் சவிரி**

(முருங்கன் கமம். முருங்கன்.)

முருங்கன் பதி உம்மை ஈன்றதுவோ
ஈன்றவளும் மறப்பாளோ உமை!
வெம்பி வெதும்புதையா எம்மிதையம்
விம்மியழுகின்றோம் வருவீரோ எம் குறைதீர்க்க
ஆண்டாண்டு காலமெல்லாம் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை என அறிந்தும்
வைத்தகண் வாங்காமல் உம் புகைப்படத்தை பார்கின்றோம்
செல்லமாய் 'சின்னச் செட்டி' என எல்லாரும் அழைத்தனரே
நீர் சென்ற இடம் எங்கே என்று பார்க்கின்றனர்?
அப்பா என்று அழைத்திட அவனியில் ஆளில்லை
வருவீரோ மீண்டும் நீர் எம்குறை தீர்த்திடவே!
ஆண்டிரண்டு ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்!
உம்மையே நினைத்து துவள்கிறாள் உம் மனைவி
உம் ஆன்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

**நீங்காத நினைவில் : மனைவி, பிள்ளைகள்.**

## சிறுவர்களுக்கு எதிராக .....

5ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்வில் பதுளை, மன்னார், கண்டி, யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மறை மாவட்டங்களிலிருந்து பெருமளவிலான சிறுவர்கள் கலந்து கொண்டனர். இதில் சிறுவர்களுக்கிடையிலான விவாத அரங்கு, ஓவியப்போட்டி, நாடகப்போட்டி, பேச்சுப்போட்டி போன்றவை நடாத்தப்பட்டன.

இதில் முதலாம் இடத்தை வெற்றிகொண்ட கண்டி மறை மாவட்ட நாடகம் அரங்கேற்றப்பட்டதுடன், பாடசாலை மாணவிகளது பரதநாட்டிய நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. விவாத அரங்கில் மன்னார் மறைமாவட்ட மாணவர்கள் முதலிடம் வகித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்கள் மற்றும் முதல் மூன்று இடங்களையும் தட்டிக்கொண்ட மாணவர்களுக்கும் சிறந்த நடிகர், சிறந்த பேச்சாளர் போன்றோருக்கும் வெற்றிக்கிண்ணங்கள், பதக்கங்கள், விருதுகள், பெறுமதிமிக்க சான்றிதழ்கள் என்பன கறிற்ராஸ் SEDEC இனால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மதத்தலைவர்கள், வவுனியா தெற்கு கல்விப்பணிப்பாளர், வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தையர்கள், வவுனியா மகளீர் மத்திய மகா வித்தியாலய அதிபர், மற்றும் அருட்சகோதரிகள், சிறுவர்களின் பெற்றோர்கள் போன்றோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின் மூலம் தமிழ் மறைமாவட்டங்களுக்கிடையிலான சிறுவர்களுக்கிடையே தொடர்பும் உறவு நிலையை ஏற்படுத்துவதற்கான நல்லதொரு சந்தர்ப்பமும் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிறுகதை ........ 12 ஆம் பக்கத் தொடர்ச்சி

செலவுக்கு பணமில்லை உண்பதற்கு வழியில்லை என்று நிர்க்கதியாக நிற்கின்றது அந்தக் குடும்பம்

தன் கடந்தகாலத்துள் மூழ்கிப்போன தங்கம்மா தன் மகள் அழைத்த சத்தம் கேட்டு சுயநினைவுக்கு வந்தாள்.

அன்று நத்தாருக்கு முதல் நாள். இயேசுவின் பிறப்போடு தனது குடும்பத்திற்கும் ஒரு புதுவாழ்வு மலராதா என தங்கம்மா ஏக்கத்தோடு செபித்தாள்.

நத்தார் இரவுப் பூசைக்குச் செல்வதற்கு தங்கம்மாவும் பிள்ளைகளும் தயாராகிக்கொண்டிருக்கும்போது வீட்டிற்கு வெளியே நான்கைந்துபேர் சேர்ந்து கூப்பிடும் சத்தம் கேட்டு பதட்டமடைந்த தங்கம்மா, தன்னை சுதாகரித்துக்கொண்டு 'யாரது?' என்று கேட்டாள். 'கலையரசனின் வீடு எது?' என்று வெளியே நின்றவர்கள் கேட்டதும், ஓடிவந்த தங்கம்மா "ஏன் கேக்கிறீங்க" என்று ஆர்வத்துடன் கேட்டாள். "கலையரசனை கூட்டி வந்திருக்கின்றோம். அவருடைய விட்டில் அவரை விட்டுச் செல்லத்தான் கேட்கிறோம்." என்று கூறிய வேகத்தில் ஓடிச்சென்று யன்னல் வழியாக எட்டிப்பார்த்த தங்கம்மா தன் மகனைக் கண்டாள். வெளியே வந்தாள்.

கலையரசன் அமைதியாக இறங்கி வந்து "இதுதான் என் அம்மா" என்று வந்தவர்களிடம் கூறினான். உடனே வந்தவர்கள் "இது உங்கட மகன் கலையரசன். அம்மா, உங்களிடமே உங்கள் மகனை ஒப்படைத்துவிட்டோம். இவரிடம் பெரிய குற்றம் ஒன்றும் இல்லை. இவரை நீங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள்" என்று கூறிவிட்டு வந்த வேனில் ஏறிச் சென்றுவிட்டார்கள். தங்கம்மாவும் பிள்ளைகளும் கலையரசனை கட்டித் தழுவி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தனர்.

அடுத்த நாள் நத்தார் அவர்களுக்கு ஒரு புதிய வாழ்வின் தொடக்கமாக அமைந்தது.

## நீதியுள்ள தளிர் .... 1ஆம் பக்கத் தொடர்ச்சி

நம்பிக்கை ஆண்டிற்குள் நம் திருச்சபை காலடி பதித்துள்ள இவ்வேளையில் நமது நம்பிக்கைபற்றி திருத்தூதர் யாக்கோபுவின் அறைகூவல் இக்காலத்தில் நமக்கு பெரும் சவாலாக அமைகின்றது. "சகோதர சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களில் காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன? ..... நம்பிக்கை செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்." (யாக் 2:14, 17) நமது நம்பிக்கை நம்மைச் சுற்றியுள்ள மக்களின் தேவைகளை, அவலங்களை, துன்பங்களைக் காண, செயற்பட நம்மைத் தூண்ட வேண்டும். உண்மைக்காக, நீதிக்காக குரல்கொடுக்க நம்மை உந்தித்தள்ள வேண்டும். இன்றைய அநீதி நிறைந்த சூழ்நிலையை நாம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அனைத்து வகையான அநீதிகளுக்கு எதிராகவும் குரல் கொடுக்கவும், செயற்படவும் நாம் அழைக்கப்படுகின்றோம்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவித் திட்டங்களில் நீதி, நியாயம் கடைப்பிடிக்கப்படாத நிலையை இன்று நாம் கவலையோடு கண்ணோக்குகின்றோம். அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி நீதிக்குப் புறம்பான வகையில் உதவிகள் பகிரப்படுகின்றன. இந்திய வீட்டுத்திட்டங்களை வழங்குதல், மீன்பிடி உபகரணங்களை வழங்குதல் போன்றவற்றில் இந்த அநீதியான செயல்முறைகளைக் காண்கின்றோம். வேலைவாய்ப்புக்களும் அநீதியான முறையில் வழங்கப்படுகின்றன. இது நீதிக்குப் புறம்பானதும் மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்டதுமாகும். தமது அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்துவதற்காக இதுபோன்று பல அநீதியான நடவடிக்கைகளை சிலர் தொடர்ந்துகொண்டிருக்கின்றனர். இந்நிலையில் இப்படிப்பட்டவர்கள் மனம்மாறி இறைவனுக்குப் பயந்தவர்களாக, நீதியின் வழியில், உண்மையின் வழியில் செயலாற்ற வேண்டுமென இக்காலத்தில் நாம் வேண்டுதல் செய்வோம்.

'நீதியுள்ள தளிர்' (எரே 23:5) என்று பழைய ஏற்பாடு சுட்டிக்காட்டுகின்ற தாவீதின் மகன் இயேசு காட்டிய வழியில் நாமும் நீதியை நிலைநாட்ட தொடர்ந்து உழைப்போம். ஏனெனில் ஆண்டவரின் வாக்குறுதி நமக்கு உள்ளது. "தளர்ந்துபோன கைகளைத் திடப்படுத்துங்கள்; தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள். உள்ளத்தில் உறுதியற்றவர்களை நோக்கி "திடன் கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள்; இதோ, உங்கள் கடவுள் பழிதீர்க்க வருவார்; அநீதிக்கு பழிவாங்கும் கடவுளாக வந்து உங்களை விடுவிப்பார்" (எசா 35: 4) என்ற ஆண்டவரின் வாக்குறுதியில் நம்பிக்கை வைப்போம். நேர்மையோடு ஏழைகளுக்கு நீதி வழங்கும் இறைவன் முன்னுரைத்த இப்பசுமையான நலம் மிக்க நாட்கள் நமக்கு கிட்டவேண்டுமென மன்றாடுவோம்.

"அந்நாட்களில் ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும்; அக்குட்டியோடு சிறுத்தைப்புலி படுத்துக்கொள்ளும். கன்றும், சிங்கக்குட்டியும் கொழுத்த காளையும் கூடிவாழும்; பச்சிளம் குழந்தை அவற்றை நடத்திச் செல்லும். பசுவும் கரடியும் ஒன்றாய் மேயும். அவற்றின் குட்டிகள் சேர்ந்து படுத்துக்கிடக்கும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்; பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும்; பால்குடி மறந்த பிள்ளை கட்டுவிரியன் வளையினுள் தன் கையை விடும். என் திருமலை முழுவதிலும் தீமை செய்வார் எவருமில்லை; கேடு விளைவிப்பார் யாருமில்லை" (எசா 11:6-9) என்ற இறைவாக்கு நம் மண்ணில் நிறைவாக்காகட்டும்.

"விண்ணில் இருந்து விடியல் நம்மைத் தேடிவரும்" (லூக்.1:79) இந்நாட்களில் நாம் நம்பிக்கையில் தளர்வுறாது தொடர்ந்து செயலாற்றுவோம். "ஆண்டவரின் காலத்தில் நீதி தழைத்தோங்கும்" (திபா 72:7) என்ற திருப்பாடல் ஆசிரியரின் நம்பிக்கையை நமதாக்குவோம்.

கிறிஸ்துவின் பிறப்புநாளை ஆவலுடன் எதிர்பார்த்து கண்விழித்துக் காத்திருக்கும் எம் மக்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்களையும் இறை ஆசீரையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கிறிஸ்துவின் பணியில்,**
**மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை, மன்னார் ஆயர்**

## மன்னார் மாவட்டத்தில் ..... 9ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏனைய கிறிஸ்தவ மதத்தை யாழ் மாவட்டத்தில் 19 ஆயிரத்து 113 பேரும், மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 702 பேரும், வவுனியா மாவட்டத்தில் 7 ஆயிரத்து 963 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 233 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 145 பேரும் பின்பற்றுகின்றனர்.

இஸ்லாமியர்களாக யாழ் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 455 பேரும், மன்னார் மாவட்டத்தில் 16 ஆயிரத்து 553 பேரும், வவுனியா மாவட்டத்தில் 12 ஆயிரத்து 341 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 13 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 678 பேரும் பின்பற்றுகின்றனர்.

யாழ் மாவட்டத்தில் பௌத்த மதத்தை 2 ஆயிரத்து 533 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 66 பேரும், வவுனியா மாவட்டத்தில் 16 ஆயிரத்து 688 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 ஆயிரத்து 155 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 945 பேருமாக வடக்கில் 30 ஆயிரத்து 387 பேரும் பின்பற்றுகின்றனர் என்றுள்ளது.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

கட்டண விபரம் கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

## மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணி ...

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மேய்ப்புப்பணித் திட்டமிடல் குழுவின் செயலாளரும், அன்பிய இயக்குனருமான அருட்திரு. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார் வரவேற்புரை நிகழ்த்தினார். முதல் நாள், 'விசுவாசத்தின் வாயில்' எனும் திருத்தந்தையின் திருத்தூது மடல் பற்றிய விளக்கத்தை மன்னார் மறைமாவட்ட குடும்பநல – பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்திரு. எஸ். கே. தேவராஜா அடிகளார் வழங்கினார்.

அடுத்த நாள் காலை மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாரினால் சிறப்புரை வழங்கப்பட்டது. "ஆழத்தில் வலைகளைப் போடுங்கள்" (லூக்.5:4) – விசுவாச வாழ்வுப் பயணத்தில் அர்த்தமும் ஆழமும் பெறுவோம்" என்னும் தலைப்பைக்கொண்ட இவ்வுரையானது ஆண்டுத்திட்டமிடலுக்கான கொள்கை விளக்க உரையாக அமைந்திருந்தது. ஏறக்குறைய ஒரு மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்த உரையின் பின்னர் மாநாட்டில் பங்கேற்ற அனைவரும் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு உரையை மையமாகக்கொண்ட கேள்விகளை அடிப்படையாகக்கொண்டு குழுக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். குழுக் கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பொது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டன. மன்னார் ஆயரின் நிறைவுரையைத் தொடர்ந்து இளைஞர் பணி ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. நெவின்ஸ் யோகராஜா பீரிஸ் அவர்களின் நன்றியுரையோடும் இம்மாநாடு நிறைவுபெற்றது.

## செபமாலைத்தாசர் .... 2ஆம் பக்கத் தொடர்ச்சி

அருட்பணி பேடினன்ட் ஜெநெற் அவர்கள் மாதகலைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி இக்கினேசியஸ் கிறிஸ்ரி, மேரி பிரான்சிஸ்கா தம்பதிகளின் புதல்வனாக 10.08.1980 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை புனித தோமையார் பெண்கள் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியினை புனித கென்றியரசர் கல்லூரியிலும், யா/ சாள்ஸ் மகாவித்தியாலயத்திலும், மன்/ பண்டிவிரிச்சான் அரசினர் கலவன் பாடசாலையிலும், உயர் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணி. விமலதாஸ் அவர்களினால் அழைத்தலில் ஊக்கம் பெற்று, அருள் ஆச்சிரமம் சிறிய குருமடத்தில் பாதம் பதித்தார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார். இவர் கடந்த 16.07.2003இல் தனது முதல் வாக்குத்தத்தத்தையும், 15.09.2007இல் தனது நித்திய வாக்குத்தத்தத்தையும் எடுத்தார்.

25.07.2012 அன்று திருத்தொண்டராக உயத்தப்பட்ட இவர் அருள் ஆச்சிரமத்தில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

## கிறிஸ்து இல்லாமல் கிறிஸ்மஸ் இல்லை ....

11ஆம் பக்கத் தொடர்ச்சி

இயேசுவுக்கோ ஏமாற்றம், வெறுப்பு, கவலை. ஏனென்றால் கிறிஸ்மஸ் விழாவில் கிறீஸ்துவுக்கு இடமில்லை. மற்ற உலகியல் பொருட்களுக்குதான் முதலிடம் கொடுக்கப்படுகிறது.

இப்படியாக தனது பயணத்தை தொடர்ந்த இயேசு ஒரு கிராம பக்கமாக போய்க்கொண்டிருந்தார். அவ்வாறு அவர் போய்க்கெண்டிருந்தபோது ஒரு சிறிய தேவாலயத்தில் விளக்கு ஒன்று ஒளிர்ந்தது. மிகவும் அமைதியான சூழலாகவும் அவ்விடம் காணப்பட்டது. குளிராக இருந்தாலும் அதை பொருட்படுத்தாமல் அக்கிராம மக்கள் அணி அணியாக ஆலயத்திற்கு செல்வதைக் காண முடிந்தது. இயேசுவுக்கு திருப்தி. உலகம் முழுவதும் கிறிஸ்துவை மறந்து இருந்தாலும் கிரமமாவது என்னை நினைக்கிறதே என்று நினைத்தவாறு ஒரு முதியவரிடம் கேட்டார். "ஏன் தாத்தா எல்லோரும் ஆலயத்திற்கு போகிறார்கள்?" முதியவர் இயேசுவிடம் சொன்னார், "தம்பி, இன்று எம் இறைமகன் இயேசு 2000ம் ஆண்டுகளுக்கு முன் எம்மை பாவ அடிமைதத்தனத்திலிருந்து மீட்க மனித அவதாரம் எடுத்த மாபெரும் நன்நாள். இதனை நினைவுகூர்ந்து இயேசு பாலகனை வழிபட எல்லோரும் செல்கிறார்கள்." இப்போது இயேசுவுக்கு அதிக திருப்தி. உலகம் முழுவதும் என்னை மறந்து இருந்தாலும், ஒரு சிறிய கிராமமாவது என்னைப்பற்றி நினைவு கூர்கிறதே என எண்ணியவாறு விண்ணகம் நோக்கி புறப்பட்டார்.

என் அன்பிற்குரிய நண்பர்களே! கிறிஸ்து இல்லாத கிறிஸ்மஸ் ஒரு அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் ஆக இருக்க முடியாது. இன்று மனிதன் உலக சுகபோகங்களுக்காக கிறிஸ்துவை ஓரம் கட்டிவிட்டு கிறிஸ்மஸ் கொண்டாட முனைகின்றான். இன்று கிறிஸ்மஸ் ஒரு சர்வதேச வர்த்தக பண்டிகையாக மாற்றம் பெற்றுவிட்டது. எனவே கிறீஸ்துவுடன் இணைந்து கொண்டாடக் கூடிய ஒரு கிறிஸ்மஸ் விழாவை நாம் கொண்டாட அனைத்து கிறிஸ்தவர்களுமே முன்வந்து கிறீஸ்துவை தங்கள் வாழ்வாக்கி கொள்ள வேண்டும்.

புனித பவுல் சொல்வதுபோல் "வாழ்வது நானல்ல, என்னில் கிறீஸ்துவே வாழ்கின்றார்" என்பதை நாமும் வாழ்கின்றபோதுதான் கிறிஸ்மஸ் விழா ஒரு உயிரோட்டமிக்க விழாவாக மாறும். எனவே இறைமகன் இயேசு எம் உள்ளங்களிள் பிறக்க எம் உள்ளத்தை அவருக்கு காணிக்கையாக்குவோம். வார்த்தையில் மனுவாகி மரியில் கருவாகி மண்ணில் உருவாகி யாவருக்கும் மாமன்னன் இயேசுவின் நத்தார் வாழ்த்துக்களை அனைத்து 'மன்னா' வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# கிறிஸ்மஸ் சிறப்புப் பொழிவு

## அஞ்சாதீர்கள் இதோ உங்களுக்காக மீட்பர் பிறந்திருக்கிறார். (லூக். 1:10)



### இணை பிரியா இல்லற வாழ்வில் இனிய பொன்விழா



**திரு. திருமதி பிலிப்பையா கத்தறீன்**

(11ம் வட்டாரம், குருநகர், நெடுந்தீவு)

(13.01.1963 - 13.01.2013)

இல்லறம் என்பதை நல்லறமாக
இறைவனே வகுத்தான் யாவருமறிந்ததே
இணைபிரியாமல் வாழ்வினில் இன்புற
இவ்விரு மனங்களும் ஒன்றாய் சேர்ந்ததே
அன்பை வாழ்ந்ததால் ஆண்டவன் பரிசாக
அள்ளி வீசினான் ஏழு புதல்வரும் ஒரு புதல்வியும்
அன்றாட வாழ்வதை துன்பத்திலும் இன்பமாக
அனுபவித்தே நிறைவினைக் கண்டனர்.

திருமண வாழ்வின் முழுமையைக் கண்டனர்.
திருச்சுதனுக்கு புதல்வனைக் கொடுத்தனர்.
திசையெங்கும் பணியாற்றும் அமதிகள் சபையிலே
திருப்பணியாற்றிடும் யோகராஜா அடிகளார்.
திருத்தமான வாழ்வுக்கு இறைவனின் கொடையாக
திருக்குடும்பப் பண்புகளை வாழ்வினில் பெற்றீரே
திருத்துவ இறைவனின் திருவாசீர் பெற்று
தினமும் வாழ வாழ்த்துகின்றோம் யாம்

வாழ்த்துவோர் :
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

### இணை பிரியா இல்லற வாழ்வில் இனிய வெள்ளி விழா



**திரு. திருமதி. அலெக்ஸ் அமலரட்ணம் - கொன்சலா புவனராஜேஸ்**

(தூய மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்)

(12.12. 1987 - 12.12. 2012)

"திருமணத்தில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது. இது திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பொருந்துவதாகக் கொள்கிறேன்." (எபே. 5:32)

ஐவைந்து ஆண்டுகள் இல்லற வாழ்வு
ஆண்டவன் இயேசுவில் இணைந்த வாழ்வு
துன்பம் கண்டும் துவண்டிடா வாழ்வு
பிள்ளைகள் எமக்காய் கரைந்த வாழ்வு
நன்றிகள் சொன்னோம் நல்வாழ்வுக்காய்
உள்ளத்தால் புகழ்ந்தோம்
அருள் பொழிவிற்காய்
கரங்களில் தந்தோம் எம் பெற்றோரை
தீதின்றி காக்க வரம் கேட்கின்றோம்!
அன்புடன், பிள்ளைகள்
200, குருசோ வீதி, யாழ்ப்பாணம்

### பிறக்க இருக்கும் புதிய ஆண்டில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன பரிசு கொடுக்கலாம் எனச் சிந்திக்கிறீர்களா?

**மன்னாவை அவர்கள் பெற வழிசெய்யுங்கள்**

**மன்னா**

**மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை**

யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்!

#### மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்.
உங்கள் அன்புக்குரியவரின் பெயர் முகவரிகளை எழுதி சந்தாப் பணத்தையும் எமக்கு அனுப்பிவையுங்கள்.
உங்கள் அன்புக்குரியவரின் வீடு தேடி மன்னா பறந்துசெல்லும்.

உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டிற்குரிய சந்தாப் பணமாக 800.00 ரூபாவையும், வெளிநாட்டில் உள்ளவராயின் 3,500.00 இலங்கை ரூபாவையும் அனுப்பவும்.
உங்கள் பணத்தை நேரடியாகவோ அல்லது வங்கி மூலமாகவோ அனுப்பலாம்.
வங்கி மூலம் அனுப்புவதாயின்,
வங்கியின் பெயர் :
Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் :
The Editor Mannar
வங்கிக் கணக்கு இலக்கம்: 020020029782

### கிறிஸ்மஸ் துணுக்குகள்

#### கிறிஸ்மஸ் தினத்தைக் குறிக்கும் XMAS எப்படி வந்தது?

கிரேக்க மொழியில் கிறிஸ்மஸ் என்றால் காப்பாற்ற அவதரித்தவர் (மெசியா) என்று பொருள். இப்போது பயன்பாட்டில் இல்லாதிருப்பினும் ஒரு காலத்தில் ஆங்கிலத்தில் மாஸ் (Mass) எனும் வார்த்தைக்கு பண்டிகை என்று பொருள் கொள்ளப்பட்டது. கிறைஸ்ட் (Christ - கிறிஸ்து) என்ற வார்த்தையை கிரேக்க மொழியில் சுருக்கமாக 'X' என்ற எழுத்தாலும் குறிப்பிட்டார்கள். எனவேதான் கிறிஸ்மஸ் என்பதை ஆங்கிலத்தில் "X MAS" என்றும் குறிப்பிடும் வழக்கம் வந்தது.

#### கிறிஸ்மஸ் வாழ்த்து மடல் எப்படி வந்தது?

கிறிஸ்மஸ் வாழ்த்து மடல் முதல் முதலில் உருவானது 18ம் நூற்றாண்டில்தான். முதல் வாழ்த்து அட்டை அனுப்பப்பட்டது காகிதத்தில் அல்ல மரத்தில்! பசுமையான மரங்களைத் தேர்ந்தெடுத்து அதில் வாழ்த்துக்களை ஆணியால் பதித்து அதைத் தனியாக வெட்டி அனுப்புவார்கள். காகிதத்தில் உருவான வாழ்த்து மடல் 1843ம் ஆண்டு அனுப்பப்பட்டது. காகிதத்தில் உருவான வாழ்த்து மடலை முதன் முதலில் அனுப்பியவர் இங்கிலாந்தைச் சேர்ந்த பென்றி போல் என்பவர். அந்த வாழ்த்து மடலில் சூசையப்பரும், மரியாளும் குழந்தை இயேசுவை வைத்திருப்பது போன்ற படம் பொறிக்கப்பட்டிருந்தது.

# நீங்காத நினைவுகள்

### 90ம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18 | 26 |
| 09 | 09 |
| 1939 | 2012 |

**மரிசால் பிலிப்பு அந்தோனிப்பிள்ளை**

(இளைப்பாறிய கிராம அலுவலர், ஆக்காட்டிவெளி)

எங்கள் ஆருயிர் அன்புத் தெய்வமே
புன்னகைக்கும் உங்கள் பூ முகம்
கண்ணிமைக்கும் நொடியில் மறைந்து போனதே.
கலக்கமில்லா எம் கண்களில்
கண்ணீர்த் துளிகள் நிறைந்து வழிகிறதே.
உன்னவளும் பெற்றெடுத்த பிள்ளைகளும்
ஏங்கி நிற்கிறோம் உன் பிரிவை ஏற்கமுடியாமல்.
50ம் வருட திருமண நாளை எதிர்பார்த்தீர்கள்
இடையிலேயே விண்ணகம் சென்றதேனோ?
இறை சந்நிதியில் இளைப்பாற
இடைவிடாமல் செபித்துக்கொண்டே இருக்கும்,
உங்கள் அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### 01ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 | 21 |
| 11 | 12 |
| 1964 | 2011 |

**அந்தோனிப்பிள்ளை கிறேசியா**

(உயிலங்குளம்)

"நாம் யாவரும் சாகமாட்டோம், ஆனால் வேற்றுரு பெறுவோம்"
(1 கொரிந்தியர் 15:51)

பாசக் கயிற்றால் கட்டுண்டு
பரமன் அருளோடு வாழ்ந்தோமே!
பாரினில் நாமும் மகிழ்ந்திருத்தலை
பகைவனாம் கூற்றுவன் வெறுத்தனனோ?
குடும்ப வாழ்வை மேற்கொண்டு
குவலயம்மீதில் மகிழ்ந்திருந்தாய்.
மாறா நோயது வந்ததென்ன - உன்
வாழ்வைக் கொண்டு போனதென்ன?
உனக்காக எந்நாளும் செபிக்கின்றோம்.
இறைவனின் வீட்டில் மகிழ்ந்திருப்பாய்.

பிரிவால் துயருறும்
[illegible]

### 31ம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 | 03 |
| 06 | 11 |
| | 2012 |

**எஸ். லோகதாஸ்**

(பெரியகடை, மன்னார்)

"என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்"
(யோவான் 6:39)

எங்கு சென்றாலும் சேர்ந்து சென்றோமே
யார் கண்தான் பட்டதையா?
சடுதியாக சாவு வந்து
உம்மைக் காவு கொண்டதே.
நான் மட்டும் உலகில் வாழ்ந்து
சாதிக்கத்தான் என்ன இருக்கு?
உம்மோடு கர்த்தருக்குள் ஓடிவர
ஒருவழி சொல்லுமையா!

கண்ணீரில் :
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

### 31ம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 31 | 12 |
| 03 | 11 |
| 1943 | 2012 |

**செபமாலை யோசப் டலிமா**

(தலைமன்னார் மேற்கு)

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. வேதனைகள் எதுவும் அவர்களைத் தீண்டாது"

நாடறிந்த நல்லாசானே
ஆங்கிலப் புலமையில் பட்டொளி வீசியவரே,
நன்மைகளே செய்த நல்லவரே
நாடும் வீடும் போற்ற பெருவாழ்வு வாழ்ந்தீரே!
பங்கமற விசுவாசத்தை பழுதின்றி காத்தீர்
எங்களின் தெய்வமாய் எந்நாளும் வாழ்ந்தீர்.
நிறைவாழ்வு தன்னை நித்திய பிதா அவர்
நிச்சயம் ஈந்திடுவார் நம்புகின்றோம் நாங்கள்.
இறையுறவில் நீர் மகிழ வேண்டுகின்றோம்.
குறையில்லாப் பெருவாழ்வை ஆசிக்கின்றோம்

பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு [illegible] - வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org